# உதயன்

சுடர் 30 | கதிர் 253 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆடி 21, வியாழக்கிழமை 06.08.2015






## இனவாதம் பேசுகிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, ஓக.6
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தரப்பினால் மேற்கொள்ளப் பட்டு வரும் இனவாதத் தேர்தல் பரப்புரையை, கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ

பக்கம் 24

## அபிவிருத்தி அலுவலருக்கு மிரட்டல்

வவுனியா, ஓக.6
வவுனியா நெடுங்கேணி பிரதே சத்துக்குட்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு வன்னி தேர்தல் மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்களால்

பக்கம் 23

## காணாமற்போனோர் ஆணைக்குழுவின் நிபுணர் குழு குறித்து பிரி. விசாரணை

கொழும்பு, ஓக.6
காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்கு வதற்காக நியமிக்கப்பட்ட வெளி நாட்டு நிபுணர் குழு வின் தலை வரான சேர் டெஸ்மன் டி சில்வா வின் தொழில் நடத்தை குறித்து

பக்கம் 24

## நஞ்சருந்த வேண்டியவர் டிலானே

ஹரின் பெர்னாண்டோ பதிலடி



கொழும்பு, ஓக.6
நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் முன் னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் வேட்பாளரு மான டிலான் பெரேரா நஞ்சருந்திச்சாகவேண்டி

பக்கம் 24

# வடக்குக்கு நேரடி உதவி கிடையாது

## திட்டவட்டமாக கூறியது இலங்கை அரசு

கொழும்பு, ஓக.6
ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினால் எந்த வொரு உத விகளும், வடக்கு மாகாண சபைக்கு நேரடியாக வழங்கப்பட கொழும்பு அரசு அனு மதிக்காது. கொழும்பு அரசுக்கு அவை வழங் கப் பட்டுக் கொழும்பு அரசினாலேயே அது வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படும் என்று வெளிவிவ கார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளின் பேரில், வடக்கு மாகாணத்துக்கு தொழில் நுட்ப மற் றும் நிதி உதவிகளை வழங்க ஐ.நா. முடிவெடுத் ததாக, ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்ரிபன் டுஜாரிக் வெளியிட்டிருந்த கருத்து தொடர்பாக இலங்கை அரசு விளக்க மளிக்கும் போதே, வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மீளக்குடியமரும் மக்களுக்கு உடனடி உதவி களை வழங்கியது தவிர, வடக்கில் ஐ.நாவினால் வேறு பிரதான திட்டங்கள் ஏதும் முன்னெடுக் கப்படவில்லை. வழக்கமான நடைமுறைகளின் படி புனர்வாழ்வு அமைச்சின் ஊடாகவே அது மேற்கொள்ளப்படுகிறது. அவர்களால் மாகாண சபைகளுடன் நேரடியாக தொடர்பு வைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

## சர்வதேசத்திடம் இருந்து விலகி இருக்க முடியாது

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.6
சர்வதேசத்திடமிருந்து இலங்கை விலகி இருக்க முடியாது என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரி பால, சகல நாடுகளின் உதவிகளும் இலங்கைக் குத் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்.
கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த நிகழ்வு ஒன் றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
எதிர்காலச் சவால்களை முறியடிப்பதற்காக, இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே இருக்க வேண்டும். நான் பிராந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், பிராந்திய பாதுகாப்புடன் தொடர்புடைய விவகாரங்களில் அவர்கள் எவ்வாறு கரிசனை

பக்கம் 24

## நம்பகமான முறையில் தேர்தலை நடத்துங்கள்

பொதுநலவாய அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஓக.6
இலங்கையில் நம்பகமான முறையில் நாடாளு மன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று பொது நலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.
எதிர்வரும் 17ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற வுள்ளது. தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு பங்கேற்கவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கம் 23

## ஜனாதிபதித் தேர்தலை முன்பே நடத்தியமை நான் செய்த தவறு

வருத்தப்படுகிறார் மஹிந்த



கொழும்பு, ஓக.6
இலங்கையில் கடந்த ஜனவரி யில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத் தியது தவறான முடிவு என முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பி.பி.சியிடம் தெரிவித் துள்ளார்.
அதைத் தவிர தன் ஆட்சிக் காலத்தில் தான் எடுத்த எந்த முடிவு குறித்தும் தனக்கு வருத்த மில்லை எனவும் மஹிந்த பி.பி.சி. சந்தேசியவிடம் கூறி னார்.
இதேவேளை எதிர்வரும் நாடா ளுமன்றத் தேர்தலில், தமது முன்னணிக்கு 117 இடங்களில் வெற்றி கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.
ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு தனக்கும் மைத்திரிபால சிறி சேனவுக்கும் இடையே மூன்று

பக்கம் 24

## வட்டு. பெண் கொலை: சந்தேக நபர் நேற்று கைது

மேசன் வேலை செய்வதாகக் கூறி மன்னாரில் மறைந்திருந்தபோது

யாழ்ப்பாணம், ஓக.6
கொழும்பில் வட்டுக்கோட்டைப் பெண்ணைக் கொலை செய்த குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த நபர், மேசன் வேலை செய்வதாகக் கூறி மன்னார் சவரிக்குளம் பகுதிக்குச் சென்று அங்குள்ள வீடு ஒன்றில் மறைந்திருந்தபோது குற்றப் புலனாய்வுப்

பக்கம் 24

## இன ஐக்கியம் மூலமே இலங்கை முன்னேறும்

நல்லாட்சியில் அது வலுப் பெற்றுள்ளது என்கிறார் ரணில்

கொழும்பு, ஓக.6
இலங்கையில் பிறந்து வளர்ந்த சிங் கள, தமிழ், முஸ்லிம், பறங் கியர் ஆகிய இனங்களுக்கு இலங்கையர் என்ற வகையில் சமவுரிமை உள் ளது. நாட்டில் இனங்களுக்கிடையே ஐக்கியம் மூலமே நாடு முன்னே றும். நல்லாட்சியின் கீழ் இன ஒற் றுமை சக்திபெற்றுள்ளது.'
இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வரும் பிர தமருமான ரணில் விக்கிரமசிங்க.
பேருவளை பீச் திடலில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மாபெரும்

பக்கம் 24

## மன்னார் புதைகுழிக் கிணறு 19 ஆம் திகதி தோண்டப்படும்

தடயவியல் நிபுணர்களை அழைத்து ஆய்வு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 6
மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் மனித புதைகுழி உள்ளதெனக் கூறப்படும் இடத்திலுள்ள கிணறு ஆய்வுக்காக எதிர்வரும் 19 ஆம் திகதி தோண்டப் படவுள்ளது. அந்த இடத்துக்குச் சர்வ தேச தடயவியல் நிபுணர்களை வர வழைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும், அந்த ஆய்வுக்காக முன் வருபவர்களை அழைக்க முடியும் என்றும் சட்டத்தரணிகள் நீதிமன் றில் கூறியுள்ளனர்.

பக்கம் 24




# சர்வதேச ஆதரவுடன் தீர்வை எட்டுவதற்கு வீட்டுக்கு வாக்கிடுக

## சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.6

ஜனவரி மாதம் இடம்பெற்ற புதிய மாற்றமும், சர்வதேச சமூகத்தின் ஆதரவும் ஒன்றிணைந்து தீர்வைச் சாத்தியமாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்போம் என்று கூட்டமைப்பு வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற தேர்தல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில்,

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் தமிழர்களின் போராட்ட முறைமை மாறியிருக்கிறது. 2009 மே 26 ஆம் திகதி பான் கீ மூன் மற்றும் மஹிந்த ராஜபக் ஷ இணைந்து ஒரு கூட்டு அறிக்கை வெளியிட்டனர். அதில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது தொடர்பில் உலகம் பாராட்டைத் தெரிவித்தது. அதன் பிற்பாடு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் கூட்டத் தொடரில் 47 நாடுகள் இணைந்து ஒரு பிரேரணையை நிறைவேற்றின. ஆரம்பத்தில் இலங்கை அரசுடன் இணைந்து 2009 இல் இடம்பெற்றவற்றைப் பாராட்டிய சர்வதேசம் தற்போது தமிழர்கள் தொடர்பான விடயங்களில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்ற நிலைக்குக் கீழிறங்கி வந்திருக்கிறது. 2012 ஆம் ஆண்டு பொறுப்புக் கூறலை ஞாபகமூட்டும் சர்வதேச விசாரணையை கொண்டு வந்தது. 47 நாடுகளில் 24 நாடுகள் இது தொடர்பில் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்தன.

ஆரம்பத்தில் இந்தத் தீர்மானம் பல வீனமானது, பிரயோசனம் அற்றது என்று சொல்லப்பட்டது. ஒரு கட்டத்தில் தீர்மான நகலும் கொளுத்தப்பட்டது.

தற்போது நிலைமாறும் நீதி என்ற நிலையிருக்கிறது. 2009 இல் இடம்பெற்றமை போன்ற விடயங்கள் மீள இடம்பெறமாமல் இருப்பதற்கான தீர்வு இனப்பிரச்சினைக்கு வேண்டும். முற்றுமுழுதான சர்வதேச விசாரணை தொடரவேண்டும். விசாரணை ஒரு புறம். இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னொரு புறமும் பெற்றுத் தரப்படவேண்டும்.

2015 ஜனவரியில் இடம்பெற்ற தேர்தலை பகிஷ்கரித்திருந்தால் மீண்டும் மஹிந்த ஆட்சி அமைத்திருப்பார். அந்தத் தேர்தலில் நாங்கள் எங்களுடைய அரசியல் உரிமைகளை அவர்களிடம் கையளிக்கவில்லை. எதிர்வரும் தேர்தலின் வெற்றி மூலம்தான் இனப்பிரச்சினை தொடர்பில் பேச இருக்கிறோம்.

மக்களின் ஜனநாயகத் தீர்ப்பும், ஆணையும் இருந்தால் இந்த நிலை மாறும். ஜனவரி மாதம் இடம்பெற்ற புதியமாற்றமும் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் ஒன்றிணைந்து தீர்வை சாத்தியமான தாக்க முடியும்–என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த–ரி 2)

# இலட்சியம், கொள்கை மாறிவிடாமல் செயற்படுவது கூட்டமைப்பு மட்டுமே

## திருகோணமலை நகர சபையின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

இலட்சியத்திற்காகவும் கொள்கைக்காகவும் செயல்படும் எண்ணமும் திறமையும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மட்டுமே உள்ளது என்பது உலக தமிழினம் அறிந்த உண்மையாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், திருகோணமலை நகரசபையின் முன்னாள் தலைவருமான க.செல்வராஜா திருகோணமலை திரியாய்ப்பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைத் தீவில் சிங்களப்பேரினவாத மேலாதிக்கம் பல தலைமுறைகளாக தமிழ் இனத்தை நசுக்கி வருகின்றது. அதற்குச் சான்றாக உள்நாட்டுப் போர் முடிவடைந்து 6 ஆண்டுகள் கழிந்த பின்னரும் பாதிக்கப்பட்ட எமது இனத்தின் உடனடித் தேவைகள் இன்னும் நிறைவேற்றப்படவே இல்லை. இன்றுவரை எமது இனம் அழுதுகொண்டே வாழ்வை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தமிழர்களைத் தமிழ் இனத்தை அவர்களுடைய சுய கௌரவத்தையும் சுய மரியாதையையும் கலை கலாச்சாரத்தையும் தமிழர் இருப்பையும் எப்படியாவது நசுக்கி நாசமாக்கிவிடவேண்டும் என்ற பேரினவாத சிங்கள இனவெறி இன்று நேற்று நடந்த விடயம் அல்ல இந்த வெறிக்கு வயது கிட்டத்தட்ட 60க்கு மேல் ஆகின்றது. இந்த வரலாற்று உண்மையை எந்த பேரினவாத சக்திகளும் மறைக்க முடியாது என்பதுதான் உண்மையாகும்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலில் எவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதை விட எவர் ஜனாதிபதியாக வரக்கூடாது என்பதற்காகவே தமிழ் மக்களாகிய நாம் வாக்களித்தோம். எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாம் அரசியல் அக்கறையின்றி எமது வாக்குகளை வாக்களிக்க தவறும் பட்சத்தில் வாக்குகள் இலக்கின் றிச் சிதறும். இதனால் தமிழ் மக்களா கிய நாம் மீண்டும் இந்த நாட் டின் அரசியல் அநாதைகளாகத் தான் வாழவேண்டிய நிலை ஏற்படும் .

தமிழ் மக்களின் மனங்களில் இடம் பிடித்து தமிழ் மக்கள் அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது என்னதான் விமர்சனங்கள் வந்த போதும் அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கித் தமிழ் சமூகத் தின் வெற்றி கதாநாயகர்களாக நிற்பவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவும் ஏனைய கூட்டமைப்பு வேட்பாளர்களுமாவர்.

உறுதியும் கொள்கைப் பற்றும் உள்ள நாம் நிலைகுலையாமல் உறுதியோடு நின்று தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து அமையப்போகும் தேசிய அரசுக்கு எமது ஆதரவை வழங்கி எமது மக்களின் அவல நிலையையும், அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் வழி சமைப்போம் –என்றார். (த–40)

# கழுத்தில் கையை போட்டு குழியில் தள்ளுபவர் ரணில்

## எச்சரிக்கிறார் சரவணபவன்

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அழித்த மிகுதியை முற்றாகவே அழித்தவர் மஹிந்த ராஜபக்ஷ. மஹிந்த நேராக சந்தித்த ஓர் எதிரி. ஆனால் ரணில் விக்கிரமசிங்க நமது கழுத்தில் கையைப் போட்டுக்கொண்டே நம்மை குழியில் தள்ளிவிடுவார். இந்தப் பேரினவாத சிங்களத் தலைமைகளிடம் நாம் மிகவும் நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ. சரவணபவன்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக ஐந்தாம் இலக்கத்தில் களம் இறங்கியுள்ள சரவணபவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்வேறு இடங்களில் மக்கள் சந்திப்புக்களில் கலந்து கொண்டார்.

அதிகாலை 6 மணிக்கு இளவாலை யூதா தேயு சனசமூக நிலையத்தில் மக்களைச் சந்தித்தார். அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டார்.

தொடர்ச்சியாக மாரீசன் கூடல், சகாயபுரம், இளவாலை செ‌ன். ஜேம்ஸ் , ஆழியவளை மற்றும் குடத்தனை ஆகிய இடங்களில் மக்களைச் சந்தித்தார்.

இறுதியாக கரவெட்டியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றும்போதே சரவணபவன் மேற்கண்ட அபாய அறிவித்தலை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் குறிப்பிட்டதாவது;

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வா காலம் முதல் அகிம்சை வழிப் போராட்டத்தை நடத்தினோம். அதனை சிங்களப் பேரினவாதிகள் தோற்கடித்தனர்.

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்தலைமையில்நடத்திய ஆயுதப் போராட்டத்தை கருணா என்றழைக்கப்படும் துரோகியின் மூலம் புலிகள் அமைப்பை இரண்டாக உடைத்து பலமிழக்கச் செய்த கபட வேடதாரியான ரணில் விக்கிரமசிங்க 1983 ஆம் ஆண்டு முதல் இனப்படுகொலைகள், திட்டமிட்ட இன ஒழிப்புக்கள் எனத் தமிழர்களின் உயிர்களை மட்டுமல்ல உடைமைகளையும் அழித்து பொருளாதாரத்தையும் அழிந்தது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே. ஆனால் மிச்சம் மீதியை எல்லாம் கொத்துக் குண்டுகளைப் போட்டு லட்சக்கணக்கானவர்களை அழித்தது மஹிந்த ராஜபக் ஷவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் தானே.

இதை எல்லாம் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை. ஒரு பேயைக் கொண்டு இன்னொரு பேயை விரட்டுவது போல் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மஹிந்த ராஜபக்ஷவை விரட்ட மைத்திரியைப் பயன்படுத்தினோம். இது நமது தலைமையின் அரசியல் சாணக்கி யம் மட்டுமல்ல சிறந்த இராஜதந் திரம்.

தமிழருக்கு எதையுமே கொடுக்க மாட்டேன். ஒரு அங்குல நிலத்தைக்கூட தரமுடியாது. வடமாகாணத்தை இராணுவ பலத்துடன் சிங்கள மயமாக்கியே தீருவேன் எனத் தம்பட்டம் அடித்த ராஜபக்ஷவை மைத்திரியை ஜனாதிபதி ஆக்கியதன் மூலம் விரட்டியடித்தோம்.

80 பேரை மட்டுமே கொண்ட ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். தெருவில் நின்றவளுக்கு யானை மாலை போட்டதால் அவள் அரசியானாள் என்பது வரலாற்றுக் கதை. அதன் படி ஆக ஆறாயிரம் வாக்குகளை மட்டுமே பெற்று நாடாளுமன்றம் சென்ற ஓர் அம்மணியும் அமைச்சராகி விட்டார்.

இவர் சுவீப் அடித்தது போல் இதைப் பயன்படுத்திப் போக்குவரத்துத் துறையிலும் சுகாதாரத்துறையிலும் சில தற்காலிக நியமனங்களைக் கொடுத்து விட்டுப் பெரிய சாதனை செய்து விட்டது போல் பம்மாத்து காட்டுகின்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளசமஷ்டிஆட்சிமுறையை ஒருபோதும் ஏற்க முடியாது. அதைக் கைவிட வேண்டும் என்று கூறும் ரணில் ஒற்றை ஆட்சிமுறைதான் தீர்வு என்று தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உறுதியாகக் கூறியுள்ளார். அப்படியானால் ஒற்றை ஆட்சி முறையை இந்த விஜயகலா ஏற்றுக் கொள்கிறாரா? தனது பதவிக்காக எதையும் துறக்கத் தயாராகி விட்ட விஜயகலாவுக்கு தமிழ் மக்கள் வாக்குப் போடலாமா?

இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு, வடக்கின் அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு தமிழ்க் கொலை கலாசாரத்தின் அடையாளச் சின்னமான சிறி.ல.சு.கட்சியின் வெற்றிலைச் சின்னத்தில் வாக்கு கேட்கின்றார் அங்கஜன்.

தமிழ் இளைஞர்களின் பாதுகாவலன் வடக்கின் அபிவிருத்தி என் கைகளிலேயே என்று கூறும் இவர் தமிழுக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் போராடி தம்முயிரையே அர்ப்பணித்த தமிழ் இரத்தங்களுக்கு என்ன பதில் சொல்லப்போகின்றார்.?

18 வருடங்கள் இணக்க அரசியல் என்று கூறிக்கொண்டு அமைச்சராக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா. இவரால் எதையும் செய்ய முடியாது. அமைச்சரவையில் இவர் செல்லாக் காசாகவே இருந்தார். அங்கு இவரால் எதையும் பேச முடியாது. வாய் திறந்தால் பதவி பறிபோய்விடும் என்ற பயத்துடன் வாழ்ந்தார். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ என இருவரிடமும் அமைச்சராக இருந்தார்.

வடமாகாணத்துக்கு என்ன செய்தார். மூடிக்கிடக்கும் சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் போன்ற தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்தாரா? இல்லை என்றால் தனது அமைச்சு அதிகாரங்களைப் பயன்படுத்தி புதிதாக ஒரு தொழிற்சாலையாவது திறந்துள்ளாரா?

இன்னும் சொன்னால் இவருடைய அமைச்சின் கீழ் உள்ள ஆனையிறவு உப்பளத்தையாவது மீள இயங்க வைத்தாரா? அப்படிச் செய்திருந்தால் அங்கே 600 பேருக்கு தொழில்வாய்ப்பு கிடைத்திருக்கும். உப்பளத்தை மீள இயங்கச் செய்ய நாம் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம்கையளித்ததிட்டங்களையும் செயல்படுத்த விடாமல் முட்டுக்கட்டையாக இருந்தவர் தான் டக்ளஸ்.

தெற்கில் வாய்மூடி மௌனியாக இருக்கும் இவர் வடக்கே வந்தவுடன் மகாராசாவாகி விடுகின்றார். இவரது தலைமையிலான கடத்தல் கலாசாரத்தால் கொலை கலாசாரத்தால், கொள்ளை கலாசாரத்தால், கப்பக் கலாசாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நம் மக்கள் தான்.

சாதாரண ஆசிரியர்கள் முதல் உயர் அதிகாரிகளையும் பெட்டிப் பாம்புகளாக அடக்கி ஆண்டார். இசைவாக செயற்படாத அரச அதிகாரிகள் பழிவாங்கப்பட்டனர். இவர் மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டால் நமது நிலை என்ன ஆவது என்ற அச்ச உணர்வு இன்றும் காணப்படுகின்றது.

வடமராட்சிக்கு இயற்கை கொடுத்த கொடை மண். ஆனால் டக்ளஸ் மகேஸ்வரி நிதியம் என்ற பெயரில் தாய்மண்ணை கொள்ளையடித்து கோடி கோடியாகக் குவித்தார். இந்தப் பணம் பிரதேசசபைக்குச் சென்றிருந்தால் வடமராட்சியையே அபிவிருத்தி செய்திருக்க முடியும்.

சட்டவிரோத மண் கொள்ளைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன் தீர்ப்பை கொண்டுவந்து கொடுத்தபோதும் பிரதேச செயலாளர் அதை உதாசீனப்படுத்தினார். அதன்பின் நாம் களம் இறங்கி நடத்திய மக்கள் போராட்டத்தின் மூலமே இந்த மண் கொள்ள்ளயை தடுக்க முடிந்தது. அதனை இந்த மக்கள் அறிவார்கள். இந்த டக்ளஸ் தேவானந்தா இப்போது வீணையைத் தூக்கிக் கொண்டு வருகிறார். இவருக்கு நம் மக்கள் வாக்களிப்பார்களா? 17 ஆம் திகதி மக்கள் வழங்கப் போகும் தீர்ப்பு அவரை ஒரு மன நோயாளியாக்கப் போகிறது என்பது நிச்சயம்.

நடைபெறும் தேர்தல் அதி முக்கியமானது. ஒரு விடயத்தை அவதானித்து செயற்படவேண்டும். அதாவது டக்ளஸ், அங்கஜன், கஜேந்திரகுமார், விஜயகலா இந்த நால்வரும் ஓர் ஆசனத்தைப் பிடிக்க வேண்டும் என்று போட்டி போடுகின்றார்களே தவிர மக்களின் நலன்கருதிப் போட்டியிடவில்லை.

இவர்களுக்கு ஒரு கொள்கையும் இல்லை. நேர்மையும் இல்லை. ஒரு தேர்தல் விஞ்ஞாபனமும் இல்லை. இவர்களுடைய போஸ்டர்களையும், விளம்பரங்களையும் பாருங்கள். இவர்களுடைய தனிப் படங்களை மட்டுமே போட்டுள்ளனர். யாழ். மாவட்டதில் போட்டியிடும் கட்சிகளோ சுயேச்சைகளோ பத்து வேட்பாளர்களின் பெயர்களைக் கட்டாயமாக குறிப்பிட வேண்டும். இவர்களுடைய பட்டியலில் இந்த நால்வரைத் தவிர அனைத்து ஒன்பது பேரும் வெறும் டம்மிகள். உங்களிடம் வரும்போது எங்கே உங்களுடைய அடுத்த ஒன்பது பேரும் என்று கேளுங்கள். இவர்களுடைய நோக்கம் தாம் ஒருவர் மட்டும் வந்தால் போதும். எப்படியாவது யார் காலை கையைப் பிடித்து ஓர் அமைச்சராகிவிட வேண்டும் என்பதே இவர்களின் பேராசை. இந்த சுயநலவாதிகளை அடையாளம் கண்டு ஒட்டு மொத்தமாக ஓரம் கட்ட வேண்டும்.

எனவே சாத்வீகமாக, ஆயுதப் போராட்டமாக முன்சென்றும் பெற முடியாதவற்றை இராஜதந்திர முறையில் பேரம் பேசி வென்றெடுக்கக் கூடிய சக்தியை ஆணையை நீங்கள் வழங்கவேண்டும்.

எவ்வளவோ சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்ட போதும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. என்றார் –சரவணபவன். (த)



தனி ஆட்சி
தன்னிறைவான பொருளாதாரம்
அதுவே என் இலக்கு
30 வருடங்களாக
விலைபோகாத ஒரே கொள்கை
ஈ.சரவணபவன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X
வாக்கிடுங்கள் 5
ஈஸ்வரபாதம் சரவணபவன்
நாடாளுமன்றத் தேர்தல் 2015

சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழ் மக்களுடைய நிலைப்பாடு அதிகபட்ச அதிகாரப் பகிர்வைக் கொண்ட சமஷ்டித் தீர்வு ஒன்றே எமது தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகும் என்பதை நாம் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும். இதனை மக்கள் புரிந்துகொண்டு கூட்டமைப்புக்குத் தமது ஒருமித்தஆணையைவழங்குவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். எமது மக்களுக்கு எம்மை விட அரசியல் ஞானம் உண்டு என்பதில் எனக்கு ஐயம் இல்லை– இவ்வாறு தெரிவிக்கிறார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

# தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டியே தீர்வாகும்

## தமிழ்க் கூட்டமைப்புக்கு ஒருமித்த ஆணையை மக்கள் வழங்குவர் என்கிறார் சுமந்திரன்

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு உதயனுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சுமந்திரனுடனான செவ்வியில் முன் வைக்கப்பட்ட கேள்விகளுக்கு அவரின் பதில்கள் வருமாறு:–

கேள்வி – *தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு எவ்வகையான அரசியல்தீர்வைப் பெற்றுத் தரும்? அந்தத் தீர்வு அமையக் கூடிய சாத் தியக்கூறு உள்ளதா?*

**பதில்:**அரசியல் தீர்வு தொடர்பான எங்கள் உறுதியான நிலைப்பாட்டை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெட்டத்தெளிவாக முன்வைத்திருக்கின்றோம். சமஷ்டி அடிப்படையிலே அமைந்த அதிகாரப் பகிர்வு ஒன்றே தமிழரது நீண்ட கால அரசியல் போராட்டத்திற்கு உகந்த தீர்வு என்பதை நாங்கள் ஆணித்தரமாக, எந்தவித சந்தேகங்களுக்கும் இட மில்லாதவாறு முன்மொழிந்துள் ளோம்.

நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டுமே ஒற்றையாட்சிக்குட்பட்டுத்தான், அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றன. இதில் புதினம் எதுவும் இல்லை. பெரும்பான்மைக் கட்சிகளுக்கும் எமக்கும் தீர்வு நிலைப் பாட்டில் ஒத்த சிந்தனை இருந்தால் பிறகேன் ஒரு இனப்பிரச்சினை? ஆனால் நாட்டின் இரு பெரும்பான் மைக் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பது அனுகூலமானது. சர்வதேச சமூகமும் நியாயமான அரசியல் தீர்வினூடாகவே தமிழரது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ப தில் உறுதியாகவுள்ளது. ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட மூன்று தீர்மானங்களும் அரசியல் தீர்வை வலியுறுத்தியிருக்கின்றன.

நாம் முன்வைத்திருக்கும் சமஷ்டித் தீர்வு பல நாடுகளிலும் நடைமுறையில் இருக்கின்ற ஒரு தீர்வாகும். கனடா, அமெரிக்கா போன்ற நாடு களில், ஏன் இந்தியாவில் கூட சமஷ்டியை ஒத்த அரசியல் முறைமையே நடைமுறையில் இருக்கின்றது. இந்த நாடுகளின் அங்கீகாரம் எமக்கிருக்கின்றது. அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்த இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை யில், சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பற்றிப் பேசியிருந்தார்.

அடுத்த செப்ரெம்பர் மாதம் வரவிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கையின் சிபாரிசுகளும், ஏற்கனவே உள்நாட்டில் ஜனநாயக நடைமுறைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும் சந்திக்கும்போது, தமிழரது உறுதியான ஜனநாயக ஆணை, நாம் முன்வைத்திருக்கும் சமஷ்டித் தீர்வுக்கானதாய் இருந்தால் நிச்சயமாக பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் உருவாகும் என்பதும், அதன் வாயிலாக ஒரு அரசியல் தீர்வு எட்டப்படும் என்பதும் எமது எதிர் பார்ப்பாகும்.

கேள்வி – *தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் பற்றி என்ன சொல்லப் போகின்றீர்கள்? தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் இன்னும் கட்சியாக பதியப் படவில்லை?*

**பதில்:**– எமக்கிடையே எப்போதும் கருத்து முரண்பாடுகள் இருந்துள்ளன. உண்மையில் எந்த ஜனநாயகக் கட்சிக்குள்ளும், கருத்து முரண்பாடுகள் அவசியம். அவை ஜனநாயகமாகத் தீர்க்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தனிக்கட்சி அல்ல, மாறாக அது நான்கு கட்சிகளின் கூட்டு. ஆகவே கருத்து வேற்றுமை இருப்பதில் புதினம் எதுவும் இல்லை. ஆனால் எமது பொது நிகழ்ச்சி நிரலில் எமக்கிடையே எந்த முரண்பாடுகளும் கிடையாது. உதாரணமாக, தீர்வுத்திட்டம் தொடர்பாக எமக்கிடையே பூரண கருத்தொற்றுமை இருக்கின்றது. முக்கிய விடயங்களில் எந்தப் பிரிவும் இல்லை. கட்சியை பதிவு செய்வதா இல்லையா போன்ற விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அது உண்மை. ஆயினும் இந்த வேளையில் தமிழ் மக்களின் நலன் தொடர்பான முக்கிய கேள்வி அது அல்ல. இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம், போர்க்குற்ற விசாரணை, பொறுப்பு கூறல், எமது மக்களுடைய பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூட்டமைப்பு ஒற்றுமையாகவே இருக்கின்றது. தமிழ் மக்களின் நலனுக்கு கூட்ட மைப்பு தொடர்ந்து வேலை செய்ய பதியப்படத் தேவையில்லை.

கேள்வி – *சிங்கள அரசுடன் சேர்ந்து தமிழருக்குக் குழி பறிக்கின்றீர்களாமே?*

பதில்: 2010 இல் தனிப் பெரும் தமிழர் பிரதி நிதியாக நாடாளுமன்றம் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்கவே தேசியப் பட்டியலின் மூலம் நான் அரசியலில் நுழைந்தேன். என்னை அவர்கள் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதியாக இணைத்துக் கொண்டது அதுவரை நான் சட்டத் தரணியாக தமிழருக்கென, தமிழர் நலன்களுக்கென வழங்கிய சேவையின் அடிப்படையிலேயே என்பது எனது பணிவான கருத்து.

நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு முன்னரும்,அதற்கு பின்னரும் தமிழர் நலன் சார் வழக்குகள் பலவற்றில் முன்னிலையாகியுள்ளேன். சம்பூர் மற்றும் வலிகாமம்– வடக்கில் தமிழரது காணிகள் பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டதற்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளில் தமிழர் சார்பில் முன்னிலையாகி, வழக்காடி இன்று அந்த நிலங்கள் விடுவிக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். 2009 இல் மெனிக் பாமில் தமிழருக்கு இழைக்கப்பட்ட அடிப்படை மனிதஉரிமைமீறல்களுக்கெதிராக வழக்காடியிருந்தேன். 2011இல் நாவாந்துறை தமிழர்கள் மீது பொலிஸாரால் நடத் தப்பட்ட தாக்குதலுக்கெதிராக நாவாந்துறை மக்கள் சார்பில் வாதாடியிருந்தேன். 2007 இல் தமிழர்கள் கொழும்பிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட போது அதை எதிர்த்து 24 மணி நேரத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்து, அதை தடுக்கும் முகமாக உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றேன். பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படிருந்த எழுத்தாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம், முன்னாள் உதயன் பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரன் உட்பட பல அரசியல் கைதிகள் சார்பில் வழக்காடியவன் நான்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினராக நில உரிமை, நல்லிணக்கம், பொறுப்பு கூறல், அரசியல் கைதிகள் விவகாரம் என்ற முக்கிய தமிழர் பிரச்சினைகளின் மீதான வாதங்களில் எனது பங்களிப்பு எவ்வாறிருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இதையெல்லாம் அறிந்தவர்கள் இந்த அபாண்டமான குற்றச் சாட்டுக்களை முன்வைக்க மாட்டார்கள்.

கேள்வி – *சிறிசேன அரசின் கீழ் தமிழருக்கு எந்த நன்மையும் கிடைக்காத போதும் அந்த அரசை பதவிக்கு அமர்த்த நீங்கள் ஆதரவு வழங்கியது எதற்கு? அவர்களுக்கு வக்காலத்து வாங்குவது ஏன்?*

**பதில்:** நாம் எதிர்பார்த்த அளவு இந்த அரசு தமிழர் நலன் சார் விடயங்களில் அக்கறை காட்டவில்லை என்பது உண்மை. ஆனால், தமிழருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பது பொய். வலிகாமம் வடக்கில் கிட்டத்தட்ட 1000 ஏக்கர், சம்பூரில் 818 ஏக்கர் தமிழர் நிலங்கள் அரசினால் விடுவிக்கப்பட்டிருக்கிறன. கேப்பாப்பிலவில் படையினரின் கைவசம் இருந்த 1000 ஏக்கர் வயல் நிலம் விவசாயத்திற்கென விடுவிக்கப் பட்டிருக் கின்றது.

மேலும், பாலேந்திரன் ஜெயக்குமாரி விடுவிக்கப்பட்டிருக்கிறார். சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளது பெயர்கள் வெளியிடப் பட்டிருக்கின்றது. இவர்கள் எல்லாம் உங்களது வரைவிலக்கணப்படி தமிழர் இல்லையா?. இன்னும் அடைய வேண்டிய இலக்குகள் ஏராளம். ஆனால் நடைபெற்றவற்றை சொல்லிக்காட்டுவது வக்காலத்து வாங்குவதல்ல – அதற்குப் பெயர் உண்மை பேசுவது. ரணிலுக்கு விசுவாச மானவர்கள் என்றால் நாம் ஏன் அவரைப் பொது வேட்பாளராக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த அனுமதிக்கவில்லை?.

எந்த அரசு அதிகாரத்தில் இருந்தாலும் தமிழர் நல விடயங்களில் அந்த அரசுடன் பேசித்தான் ஆக வேண்டும், மோதித்தான் ஆக வேண்டும். பேச வேண்டிய இடத்தில் பேசுவோம். மோத வேண்டிய இடத்தில் மோதுவோம்.

கேள்வி– *சர்வதேச விசாரணையினை தூக்கியெறிந்து உள்நாட்டு விசாரணைக்கு உடன்பட்டு விட்டீர்களாமே?*

**பதில்:**இது முற்றிலும் உண்மைக்கு புறம்பான பரப்புரை.

நாங்கள் கடந்த வருடம் மார்ச் மாதம், சர்வதேச விசாரணை அடங்கிய ஜெனிவாத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பாடுபட்டபோது, அதன் உள்ளடக்கம் தெரியாமல் இதில் சர்வதேச விசாரணை இல்லை எனக் கூறிக் கொண்டு அதனைக் கடுமையாகச் சாடியவர்களும், குறை சொன்னவர்களும், பவனியாக வந்து அதன் பிரதிகளை எரித்தவர்களும் இன்று எம்மைப் பார்த்து இப்படிக் கேள்வி கேட்பது நகைப்பிற்குரியது. தனிப்பட்ட ரீதியில் இந்தத் தீர்மானங்களை நிறைவேற்ற எனது அர்ப்பணிப்பு எவ்வாறிருந்தது என்பது இந்தக் கதைகளை கட்டவிழ்ப்பவர்களுக்குத் நன்கேதெரியும். நான் சொல்லிக் காட்ட வேண்டியதில்லை. நாங்கள் உழைத்துச் செயற்படுத்தியதொரு திட்டத்தை நாங்களே தூக்கியெறிவோமா? எமது முயற்சிகளின் பயனாகத்தான் சர்வ தேச விசாரணை நடைபெற்று அதன் அறிக்கை இந்த வருடம் செப்ரம்பர் மாதம் வெளிவரவிருக்கின்றது. இந்த அறிக்கையை நடைமுறைப் படுத்த ஒரு உள்ளகப் பொறிமுறை இருக்க வேண்டும். இல்லாவிடில் அறிக்கையின் கண்டுபிடிப்புகள் பாதிக்கப் பட்டமக்களைப்பொறுத்தளவில் பயனற்றவையாகப் போய் விடும். ஆனால் நடந்திருக்கும் விசாரணை ஒரு சர்வதேச விசாரணை, உள்ளக விசாரணை அல்ல. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தப்படும் விசாரணை எப்படி உள்ளக விசாரணையாகிவிடும்?

இதுவரை இந்தப் புதிய அரசு ஏற்கனவே இருந்த பரணகம ஆணைக் குழுவினைத் தவிர, புதிதாக உள்ளக விசாரணை எதனையும் தோற்றுவிக்கவில்லை. எம்மைப் பொறுத்தளவில் இந்த ஆணைக் குழு வெறும் கண்துடைப்பே. இத னால் எமது மக்களிற்கு எந்தப் பய னும் இல்லை. இந்தக் ஆணைக் குழுவின் சர்வதேச ஆலோசகர்களின் பதவிக் காலத்தை நீடித்த மையைக் கண்டித்து நான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி இருந்தேன். சர்வதேச அனுசரணையோ டும், ஐக்கிய நாடுகள்அமைப்பின் தொழில்நுட்ப உதவியோடும் செயற்படுத்தப்படாத எந்தப் பொறிமுறையும் பிரயோசனம் அற்றது.

கேள்வி – *சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டது சரியா? அதை இன்றும் நியாயப்படுத்துகின்றீர்களா?*

பதில்: இன்றுவரை நானும், சம்பந்தன் ஐயாவும் செய்தது சரியென்றே கூறுகிறேன். சம்பந்தன் ஐயா 1970களில் இருந்து சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளாதவர். தமிழர் தரப்பு சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளக் கூடாது என்று முன்னின்று உழைத்தவர்.



இந்த முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து சுதந்திர தின நிகழ்விற்கு அழைப்பு வந்த போது, சம்பந்தன் ஐயா, தான் இம்முறை சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ள இருப்பதாகக் கூறினார். ஆரம்பத்திலேயே இந்த சுதந்திர தின நிகழ்வு ஏனைய சுதந்திர தின நிகழ்வுகளில் இருந்து மாறுபட்டதாக இருக்கும். அதாவது, போர் வெற்றியைப் பறை சாற்றுவதாகவோ, அல்லது பேரினவாதத்தைப் போற்றுவதாகவோ அல்லாமல் நிகழ்வில் சமாதானத்திற்கான அறைகூவல் விடுக்கப்படும் – என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நானும் செல்வதாக முடிவெடுத்தேன் – நானும் இதற்கு முன்னர் எந்தத் தடவையும் சென்றதில்லை. இது குறித்துக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதிலே ஒருவரைத் தவிர இதற்கு வேறு எவரும் எதிர்ப்புச் சொல்லவில்லை. பொதுத் தேர்தல் வருகின்றது என்பதும் எனக்குத் தெரியும். நான் மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்றத்திற்கு தேசியப் பட்டியலில் வரப்போவதில்லை என்றும் யாழ். மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் களம் இறங்குவேன் என்றும் ஏற்கனவே முடிவெடுத்திருந்தேன்.

சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி நடந்தேறிய போரினை 'கொடூர யுத்தம்' என்று வர்ணித்திருந்தார். இரு தடவைகள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். 'போரினை வென்றாலும் மக்களைத் தோற்று விட்டோம்' என்று தொனிப்பட உறுதியான கருத்துக்களை முன் வைத்தார். போரில் இறந்த அத்தனை பேருக்கும் பொதுவான நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. அடையாள ரீதியாக – பூரணமாகவோ, பூரண நல்லெண்ணத்துடனோ அல்ல – ஜனாதிபதி தமிழர் தரப்பை நோக்கி கை நீட்டினார். சர்வதேச சமூகத்தின் உன்னிப்பான அவதானிப்பின் கீழ் நடைபெற்ற அந்த நிகழ்வில் அடையாள ரீதியாக தமிழர் தரப்பு பதில் கை நீட்ட வேண்டிய தேவை இருந்தது. அப்படிச் செய்யாமல் விடுவது எம்மை கடும் போக்காளர்களாகச் சித்தரிக்கும். அரசியல் என்பது நாலு பேருக்கு இரத்தம் கொதிக்க மேடையில் பேசுவது மாத்திரமல்ல. இதனால் தான் நானும் சம்பந்தன் ஐயாவும் அங்கு சென்றிருந்தமை சரியென்று நம்புகின்றேன்.

# சாத்தியமில்லாத போலி வாக்குறுதிகள் இல்லை

## த.தே.கூ. வேட்பாளர் ஜெகநாதன் தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 6

ஏனைய வேட்பாளகளைப் போல் சாத்தியமில்லாத போலி வாக்குறுதிகளைக் கூறி ஏமாற்றவிரும்பவில்லை . உங்களுக்கான சிறந்த தொலைநோக்குடன் கூடிய பயணத்தை மேற்கொள்வேன். – இவ்வாறு தெரிவித்துள்ளார் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் சிந்தாத்துரை ஜெகநாதன்.

தம்பிலுவில் எதிரொலி விளையாட்டு கழக உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

தமிழ் தேசிய விடியலுக்கான பயணத்தில் அதிகூடிய பங்காளிகள் எமது இளம் வீரப்புதல்வர்கள். சொல்லொன்னா துயருடன் எம்மவர்களினை விடுதலை வித்துக்களாக விதைத்துள்ளோம். இவ்வாறான இழப்புக்கள் இனி மேலும் ஏற்படக் கூடாது என்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனநாயக போராட்டத்தில் பல முன்னெடுப்புக்களுடன் போராடி வருகின்றோம்.

காலம் காலமாய் தமிழினத்தின் அரசியல் பயணத்தில் முதுகெலும்பாக காணப்படுகின்ற எம் இளம் சமூகத்தினரை இன்று ஒரு சில வேட்பாளர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றனர். இந்த இடத்தில் நான் கூறவிரும்புவது நான் ஏனைய வேட்பாளர்கள் போன்று சாத்தியமில்லாத போலி வாக்குறுதிகளைக் கூறி உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. உங்களுக்கான சிறந்த தொலைநோக்குடன் கூடிய பயணத்தை மேற்கொள்வேன். உள்நாட்டுகல்வி, வெளிநாட்டுக்கல்வி, சிறந்த கல்விக் கேற்ற அரச மற்றும் தனியார் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், எமது மாவட்ட இளம் சமூகங்களுக்கு அவசியமான திட்டங்கள் என்பன என்னால் வகுக்கப் பட்டுள்ளன. நிச்சயமாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதற்கான முனைப்பும் அக்கறையும் என்னி டம் உள்ளன .

அனைவருக்கும் கல்வி மிகப்பெரிய முயற்சியாகும். 13 வருடகாலம் ஏட்டுக்கல்வியில் தமது காலத்தை செலவழித்த மாணவர்களுக்கு கானல் நீராகும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்பு, பல்கலைக்கழகம் போக முடியாத நிலையில் வாழ்வே இல்லை என மனம் தளரும் மாணவர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களோடு கற்றல் தொடர்பினை ஏற்படுத்தி தமது கல்வி வாழ்வாதார தேவைகளை பூர்த்திசெய்ய புதுத்திட்டம் அமைக்க தீர்மானங்கள் பல உள்ளதாக உறுதியளிக்கின்றேன், ஒத்துழையுங்கள்.– என்றார். (ந–10)

# தேசிய அரசு அமைவது சாத்தியப்படாத ஒன்று

## தினேஷ் குணவர்த்தன கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 6

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தலின் பின்னர் தேசிய அரசு ஒன்றை அமைக்க முடியாது என முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட முன்னணி வேட்பாளருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்லேவெலவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ரணில் விக்ரமசிங்க இந்த நாள்களில் புத்தகத்தில் இல்லாதவற்றை கூறி வருகின்றார். 19ஆம் திருத்தச் சட்டத்தை சமர்ப்பித்தவர்களே தற்போது தேசிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றனர். அவ்வாறான ஒன்றை மேற்கொள்ள முடியாது.

19ஆம் திருத்தச் சட்டத்துக்கமைய அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சித் தலைவர் பிரதமராவார் என ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் மிகவும் புத்திசாலி தனமாக சிந்திக்க வேண்டும்.– என்றார். (ந)

# பரப்புரைகளை தவிர்க்குமாறு பொன்சேகாவுக்கு அறிவுறுத்து

## தொடர் கூட்டங்களால் தொண்டை அடைப்பாம்

கொழும்பு, ஓக.6

ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தொடர்ச்சியாக தேர்தல் பரப்புரை மேடைகளில் உரையாற்றியதன் விளைவாக அவருக்கு தொண்டை அடைப்பு எற்பட்டுள்ளது. அதனால் பரப்புரைகளைத் தவிர்க்குமாறு வைத்தியர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் அவர் இதுவரை 225 தேர்தல் மேடைகளில் ஏறி உரையாற்றியுள்ளார் என்று ஜனநாயக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மேடைகளில் உரையாற்றுவதை அவர் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளார்.

கடுகன்னாவையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனநாயகக் கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில், பொன்சேகாவின் பதிவு செய்யப்பட்ட வீடியோ உரையே ஒளிபரப்பப்பட்டது. (ந)

# நகர சபை உறுப்பினருக்கு கடூழியச் சிறை



குருநாகல், ஓக. 6

குருநாகல் மாவட்டத்தின் படுவஸ்நுவர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சந்தன கருசிங்கவுக்கு 12 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு 20 வயதுடைய யுவதியொருவரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. குறித்த வழக்கு தொடர்பான விசா ரணை நேற்றுமுன்தினம் குளியாப் பிட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் எச் குலதுங்கவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபரான படுவஸ்நுவர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருக்கு 12 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சார்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (ந)



எதிர்வரும் பொதுத் தேர்தலை புறக்கணிப்பதாகத் தெரிவித்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள காணாமல் போனவர்களின் உறவினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். திருகோணமலை சிவன் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தை திருகோணமலை மாவட்ட சிவில் சமூகம் மற்றும் திருகோணமலை மாவட்ட காணாமற் போனோர் சங்கம் என்பன ஏற்பாடு செய்திருந்தன. பல அரசியல்வாதிகள் காணாமற் போனோர் தொடர்பாகப் பேசுகின்ற போதிலும், இதுவரை காலமும் எந்த விதமான முடிவுகளையும் பெற்றுத்தரவில்லை எனவும் அதனால் இந்த முறை தாம் தேர்தலை புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ந–10)

# சோதிடரை நம்பி கெட்டார் மஹிந்த

## மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.6

சோதிடரின் கதையை நம்பி மஹிந்த ராஜபக்ஷ, அவருடைய தலையில் அவரே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டார் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, ஐ.தே.கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ரணில் பிரதமராக வந்தால் பிரச்சினைகள் வரும் என்றும், மஹிந்த வந்தால் நிம்மதியாக இருக்கலாம் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் கூறித் திரிகின்றார். இப்படியானவர்களை எங்கு நிறுத்துவதென்று தெரியவில்லை. எவ்வாறான கஷ்டங்கள் வந்தாலும் முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்க, நாங்கள் முன்வருவோம்.

முஸ்லிம்களின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டிருப்போர். மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு, மக்களை நட்டாற்றில் விட்டு விடுவார்கள். மக்களை விடுத்து, இவ்வாறான தலைவர்கள் மட்டும் சுகபோகம் அனுபவிக்கின்றனர். இவ்வாறான தலைவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

பள்ளிவாசல்கள் மீது எப்போது மஹிந்த கை வைத்தாரோ, அன்றே அவருடைய முடிவு காலம் ஆரம்பித்துவிட்டது. பெரும் அபிவிருத்திகளை செய்ததாகக் கூறிக்கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷ, அவரைத் தெரிவுசெய்த மக்களின் அத்தியாவசியத் தேவையான குடி தண்ணீர் பிரச்சினையைக்கூட கண்டுகொள்ளவில்லை. கப்பல் போகாத துறைமுகத்தையும், மக்களுக்குப் பயன்படாத கட்டிடங்களையும் மட்டுமே கட்டி, அதனூடாக, தனது சட்டைப் பையை நிரப்பிக் கொண்டார்.

மஹிந்தவின் யுகத்துக்குள் மீண்டும் நாங்கள் புகுந்துவிடக் கூடாது. முஸ்லிம்களின் உணர்வுகளை மதிக்கின்ற, நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய, ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒற்றுமையுடன் வாக்களித்து, ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடைய வைக்க வேண்டும்.

22இற்கு மேல் இருக்கவேண்டிய முஸ்லிம்களின் நாடாளுமன்ற பிரதிநித்துவம், 15 அளவில் குறையும் ஆபத்து உள்ளது. இந் நிலையில், நாட்டை அபிவிருத்தி செய்து, எதிர்கால சந்ததியினருக்கு, எமது தேசத்தினை சிறந்த முறையில் கையளிக்க விரும்பும் ஒவ்வொரு குடிமகனும், ஐக்கிய தேசியக் கட்சியைத்தான் ஆதரிக்க வேண்டும்.– என்றார். (ந)

# சு.கவில் பிளவு என்பதில் உண்மை எதுவுமில்லை

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்

கொழும்பு, ஓக.6

சிறிலங்கா சுதந்திர கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறச் செய்து நேர்மையான நாடாளுமன்றத்தை ஆரம்பிக்க பொலநறுவையிலிருந்து 4 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டியது மககளின் கடமையாகும்.



ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர், ஜனாதிபதியானதில் எனக்கு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை. சிலர் சிறிலங்கா சுதந்திர கட்சியில் பெரியளவில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். எனினும் இவ்வாறான செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை. எனவே மக்கள் இதனைக்கண்டு ஏமாற வேண்டாம்.– என்றார். (ந)






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பச் சிரமம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சராசரி விற்பனையும், மிதமான இலாபமும் இருக்கும். முக்கிய செலவுக்குச் சேமிப்புப் பணம் பயன்படும். உடல் நலனுக்காக மருத்துவச் செலவு உண்டாகும்.

**இடபம்:** நீண்ட நாள் விருப்பம் எளிதாக நிறைவேறும். மனதில் நம்பிக்கையும், பெருமிதமும் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவர்.

**மிதுனம்:** சாதுரியமாகச் செயற்பட்டுச் சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். நண்பருடன் விருந்து, விழாக்களில் கலந்து கொள்வீர்கள். அரச ரீதியில் ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு.

**கடகம்:** சிறிய செயல்கூட, உங்களுக்குக் கடினமாகத் தோன்றும். நண்பரின் ஆலோசனை, உதவியால் மனதில் நம்பிக்கை பிறக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராகவே இருக்கும். திடீர் வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்.

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்கு வழிவகுக்கும்

**கன்னி:** உங்கள் பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். குடும்ப உறுப்பினர் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** உற்சாகத்துடன் அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வெளியூர்ப் பயணத்தால் இனிய அனுபவம் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு யோகமான நாளாக அமையும்.

**விருச்சிகம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு நெருக்கடியைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்க வாய்ப்புண்டு. உறவினர் ஆதரவைக் கண்டு பெருமிதம் கொள்வீர்கள்.


**தனுசு:** குடும்ப விடயங்களைப் பிறரிடம் விவாதிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பும், முயற்சியும் தேவை. ஆடம்பரத்தால் பணத்தேவை அதிகரிக்கும். திட்டமிட்ட பயணம் கடைசி நேரத்தில் மாறுதலாகும்.

**மகரம்:** தகுதி, திறமையைப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். நல்லவர்களின் நட்பு அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு கூடும். புதிதாகச் சொத்துச் சேர்க்கை இட்ட யோகம் உண்டு.

**கும்பம்:** பின்விளைவு உணர்ந்து செயற்படுவது நல்லது. சக தொழில் சார்ந்த எவரிடமும் வாக்குவாதம் கூடாது. பணியாளர்களுக்கு வழக்கத்தை விட பணிச்சுமை கூடும். பயன் தராத பொருள்களை விலைக்கு வாங்க வேண்டாம்.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழிலில் புதிய வாய்ப்பால் வருமானம் உயரும். உடல்நிலை திருப்திகரமாக இருக்கும். உறவினர் மத்தியில் கௌரவம்; பெறுவீர்கள். விரும்பிய ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள்.









வியட்நாமுக்குச் செல்லும் வரும் சுற்றுலாப் பயணிகள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்து பார்க்கும் ஒரு விடயம், இரண்டு சக்கர வாகனங்களில் பயணம் செய்பவர்களைத் தான். இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் இதைத்தான், இவ்வ ளவுதான் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விதியை எல்லாம் பின்பற்றாமல் அனைத்தையும் எடுத்துச் செல் கின்றனர். பிளாஸ்ரிக் பைகளுக்குள் நீந்திச் செல்லும் வளர்ப்பு மீன்கள், பலூன்கள், இராட்சத டியூப்கள், பறவைக் கூண்டுகள், விநியோகிக்க வேண்டிய பொருள்கள், மரங்கள், பூச்செடிகள், காய்கறிகள், குளிர்பானப் போத்தல்கள் என்று அளவுக்கு அதிகமான சுமைகளுடன் வாகனங்களை ஓட்டிச் செல்கிறார்கள். ஓட்டுபவ ருக்கு வசதியாக இந்தப் பயணம் இருப்பதில்லை. வண்டியின் பெரும் பகுதியில் பொருள்களே இடம் பிடித்து விடுகின்றன. ஆனாலும் சர்வ சாதாரணமாக வாகனங்களை ஓட்டிச் செல்கிறார்கள். வியட்நாமில் கார் விலை அதிகம் என்பதால், எல்லோரும் இரண்டு சக்கர வாகனங்களையே பயன்படுத்துகிறார்கள். அதனால் வீதிகளில் வாகன நெரிசல் அதிகம். எப்பொழுதும் வாகனங்கள் அலறிக்கொண்டு ஓடுவதால், வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் நடந்து செல்லும்போதே அதிக விபத்துக்களைச் சந்திக்கிறார்கள்.

## அதிசய ஆந்தை



ஆந்தைகள் பொதுவாக இரவு நேரங்களில்தான் உணவு தேடிச் செல்லக் கூடியவை. லித்துவேனியா காட்டில் புகைப் படங்கள் எடுப்பதற்காக யுஜெனிஜுஸ் கவாலியாஸ் காஸ் என்பவர் சென்றிருந்தார். அவருக்கு 15 அடி தூரத்தில் ஒரு பெரிய ஆந்தை உணவை வேட்டையாடுவதற்காகக் காத்திருந்தது. மஞ்சள் நிறக் கண்களை அசைக்காமல் காரியத்தில் குறியாக இருந்தது. உடனே புகைப்படங்கள் எடுக்க ஆரம்பித்தார் யுஜெனிஜுஸ். ஒரே ஒரு முறை மட்டும் திரும்பி அவரைப் பார்த்துவிட்டு, மீண்டும் இரையைப் பார்த்தபடி இருந்தது.

"என்னுடைய 40 வருட கால வாழ்க்கையில் இப்படி ஒரு ஆந்தையை நான் பார்த்ததே இல்லை. சாதாரணமாக மனிதர்களைக் கண்டதும் வேறு இடத்துக்குப் பறந்து சென்றுவிடும். 10 நிமிடங்கள் வரை விதவிதமாகப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு சென்றேன். தூரத்தில் ஒருமுறை திரும்பிப் பார்த்தேன். அதே இடத்தில் அசையாமல் வேட்டைக்குக் காத்திருந்தது. என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை" என்று வியக்கிறார் யுஜெனியுஸ்.



## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபையினர் என்னை நம்பி என்னிடம் கொடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதியின் கவனத்தின் கீழ் கொண்டு வந்துள்ளேன்.
தேர்தல் முடிந்ததும் எனது அமைச்சர் அதிகாரத்தைப் பயன்படுத்தி இவற்றை நான் செய்து முடிப்பேன் என உறுதி கூறுகிறேன்.

யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை
DISTRICT FEDERATION OF FARMERS ORGANIZATIONS JAFFNA
Reg No : DAD/FODF/10

Nallur Agrarian Service Center
Point Pedro Road,
Nallur, Jaffna.

22/07/2015

கௌரவ அதிமேதகு மைத்திரிபால சிறிசேன,
இலங்கை சோசலிச குடியரசு ஜனாதிபதி,
ஜனாதிபதி செயலகம்.
கொழும்பு.

ஊடாக

கௌரவ திரு அங்கஜன் இராமநாதன் அவர்கட்கு,
ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் யாழ்மாவட்டம்,
மத்திய குழு உறுப்பினர்,
வடமாகாணசபை உறுப்பினர்.

ஐயா!

யாழ்மாவட்ட விவசாயிகளாகிய எமது பின்வரும் நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



1) யாழ்மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரினை மின்சாரத்தினை பயன்படுத்தியே பெரும்பாலான விவசாயிகள் நீரிறைப்பினை மேற்கொள்கின்றார்கள் இதற்கான மாதாந்த மீற்றர் வாடகையாக 600.00 ரூபாவும் மின்சாரக்கட்டணமும் அறவிடப்படுகின்றது இதனை குறைத்து அறவிட நடவடிக்கை எடுத்தல்.

2) யாழ் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் என்பவற்றின் கூடுதலான உற்பத்தி காலத்தில் வெளிநாடுகளில் இருந்து இப்பொருட்களை இறக்குமதி செய்வதனை கட்டப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நியாய விலை கிடைக்கச் செய்தல் இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியினை அதிகரித்தல்.

3) யாழ் மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு பாரிய களஞ்சியம் இல்லாமல் இருப்பதனால் நாவற்குழியில் அமைந்துள்ள அரச உணவுக்களஞ்சிய சாலையில் உள்ள 09 தொகுதியில் 01 தொகுதியினை நெல்சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்குதல் மூலம் நெற் செய்கையாளர்களுக்கு பாரிய உதவி செய்ய முடியும்.

4) விவாசயிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய தொகையினை ரூபா 5000.00 ஆக உயர்த்துதலும் ஓய்வூதியம் வழங்காத மாதத்திற்கு வழங்குதலும் புதிய இளம் விவசாயிகளை இத்திட்டத்தில் இணைக்க ஆவன செய்தல்.



5) மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதி மக்களை மீளக்குடியமர்த்தலும் தற்பொழுது மீளக் குடியமர்ந்த விவசாய குடும்பங்களுக்கு விவசாயம் சார்ந்த உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.

6) விவசாயம் சார்ந்த கிராமப்புற வீதிகள் மற்றும் யுத்தத்தினால் சேதமடைந்த கிணறுகள், குளங்கள் என்பனவற்றை திருத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.

நன்றி



புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

பாராளுமன்றத் தேர்தல் 2015

# சுயேச்சை குழு 6




சிவன் பவுண்டேசன் நிறுவுநர்



## ஏழைகளின் தந்தை வே.கணேஸ்வரன் ஐயாவுக்கு பெண்கள் சங்கம் ஆதரவு

முப்பதாண்டு காலப் போருக்குப் பின்னரான காலத்தில் போரின் காயங்களோடும் வடுக்களோடும் அல்லுறும் மாந்தர்களுக்காக நான் துணிந்து குரல் கொடுக் கின்ற ஒரு பெண்கள் அமைப்பின் தலைவி. என் பெயர் மதியழகன் சுகந்தினி. என்னுடைய பெண்கள் சங்கத்தின் பெயர் கொக்குவில் கிழக்கு மாதர் கிராமிய அபிவிருத்தி சங்கம்.

போர் ஓய்ந்த பின்பும் இன்னும் பெண்களுடைய அவலக் குரல் ஓயவில்லை. பாலியல் வல்லுறவு நெருக்குவாரங்களை எதிர்கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம். வித்தியா மட்டுமல்ல இன்னும் எத்தனை எத்தனையோ யுவதிகள் திரைமறையில் பாதிக்கப்பட்ட நிலையில் உளரீதியாக மனம் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பலரிடம் முறையிட்டோம். அவை எவையுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை. பெண்கள் மீது எமது சமூகம் நிகழ்த்தும் வன்முறையும் அத்துமீறலும் நம் கண் முன்னே நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. அதன் வலியைத் தாங்க முடியவில்லை.

குடாநாட்டு மக்கள், காணாமற்போனோர் விடயம் தொட்டு சகலவற்றிலும் நொந்து போய்க் கிடக்கிறார்கள். இந்தத் தருணத்தில், குடாநாடெங்கும் சிலா கித்துப் பேசப் படுகின்ற, பட்டினியோடு போராடும் ஏழை மக்களுக்கு அற்புதமான சேவையாற்றும் தந்தை கணேஸ்வரன் ஐயாவைச் சந்திக்க நேரிட்டது. அவருடனான சந்திப்பு எங்களுடைய மனவேதனைக்கு சற்று ஆறுதலாக இருந்தது. எங்களுடைய கருத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டார்.

நான் தமிழ்த் தேசிய கட்சி ஒன்றின் அதி தீவிர ஆதவாளர். ஆனாலும் கட்சி ஒரு மதமோ மார்க்கமோ அல்ல. ஐயா ஏழை மக்களின் தந்தையாக இருக்கிறார். அவருடைய சேவையை மென்மேலும் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவருடைய தூய நோக்கத்திற்காக, இம்முறை எமது மகளிர் சங்கம் அவருக்கு முழு ஆதரவையும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

சமூகத்தை முழுமையாக அறிந்து கொண்டவர்தான் கணேஸ்வரன் ஐயா. எனவே எமது ஒவ்வோரு பெண்களும் ஆறாம் சுயேச்சைக் குழுவில், கேடயச் சின்னத்தில் போட்டியிடும் ஆறாம் இலக்கத்திற்குப் புள்ளடியிட்டு அவரது வெற்றியை உறுதி செய்ய வேண்டும். அவரது வெற்றி அவருக்கல்ல அது முழுத் தமிழ் மக்களுக்குமுரியதாகும். அவரது அணியினருக்கு எமது முழு ஆதரவையும் வழங்கவுள்ளோம் என அறிவித்தல் விடுக்கின்றோம்.

அன்புடன்

*மதியழகன் சுகந்தினி*

தலைவி
மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்
கொக்குவில் கிழக்கு




### கொடை வள்ளல், சமூக ஆர்வலர்

# வேலாயுதம் கணேஸ்வரன்



# 31 ஆம் நாள் நினைவலைகளுடன் கண்டி தெல்தெனியவில் சிவனின் கல்லறையில் நிர்மாணிக்கப்பட்ட கோவில் திறப்பும் சிவலிங்கம் வைத்தலும்




## செல்வன் சிவன் வேலாயுதம்

அன்னை மடியில் : 01.12.1995
ஆண்டவன் அடியில் : 06.07.2015

சிவனே நீ திடம் வைத்தாய் மண்ணில்
சிவத் தொண்டரானோம் நாம்
உளங் கொள்ளை கொண்ட பிள்ளையே
ஊருக்குதவ கருத் தந்தவனே
பெயரே சிவன் சிவமயமே யானாய்
ஊர் சொல்ல ஒரு புதல்வனாய்
அவதரித்து பெயர் மட்டும் ஒலிக்க விட்டு
பேழைக்குள் ஓரவனாய் உறங்கச் சென்றதனால்
ஓராயிரம் உறவுகள் ஊர் கூடி அழ
வான்வர் கண்ணீர் வான் மழையாக
புதைத்த பூமியை நனைத்ததினால்
விதைத்த நீ விருட்சமாவாய் ஐயா

**செல்வன் சிவன் வேலாயுதம் அவர்களின் 31ஆம் நாள் அன்னதான நிகழ்வு 06.08.2015 நாளை வியாழக்கிழமை நடைபெறும்.**

**குடாநாட்டில் 86 கிராமங்களில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.**

06.07.2015 திங்கட்கிழமையன்று இறைபதம் எய்திய எமது பாசமிகு புதல்வனின் மறைவுச்செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரையிலும் இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சிவன் வலது குறைந்தோர் நிலையத்தின் 14 கிளையிலுள்ள சிறார்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் 06.08.2015 இன்று வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தெல்தெனியவிலுள்ள சிவன் வலது குறைந்தோர் நிலையத்தில் நடைபெறும் கோவில் திறப்பு வைபவத்தில் சகலரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

வே.கணேஷ்வரன் - தலைவர், சிவன் பவுண்டேசன்
தலைமையகம் - ஒருத்தோட்டை, தெல்தெனிய, கண்டி.







## மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா

குருநகர், ஓக.6

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன.

நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.15மணிக்கு நடைபெறும். நற்கருணை வழிபாடு எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை திருவிழாத் திருப்பலியும், மாலை அன்னையின் திருச் சொரூபப் பவனியும் நடைபெறும். 15ஆம் திகதி காலை 5.30 மணிக்கு 1ஆம் திருப்பலியும் தொடர்ந்து காலை 6.45மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறும். மாலை 5 மணிக்கு திருச் சொரூபப்பவனி நடைபெறும் என யாழ். தூய மரியன்னை பேராலய பங்குத் தந்தை அறியத் தந்துள்ளார். (ற-51)





## விதிமுறை மீறியோருக்கு அபராதம்


தென்மராட்சி, ஓக.6

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய 5 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று மொத்தமாக 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் ஐந்து பேரும் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும், மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும், மேலும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)



# அன்றும் இன்றும் என்றும்

காப்புறுதித் துறையின் அதிபதி

# காப்புறுதியின் அரசன்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

## எட்டாத உயரத்தில் நிலைத்திடக் காரணம்

**ரூ.74 பில்லியன்** ஈடில்லா ஆயுள் நிதி

ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு கடந்த 10 வருடத்தில்
**ரூ.30 பில்லியனுக்கும் மேற்பட்ட** பாரிய இலாபப்பங்கு

2014 எம் தேசத்தின் சிறார்களுக்காக
**ரூ.18 மில்லியனுக்கும் மேற்பட்ட**
நிதி உதவிப் புலமைப்பரிசில்கள்

**ரூ.161 பில்லியன்** இணையற்ற சொத்து மதிப்பு

இலங்கை காப்புறுதித்துறையில் வேறு எவருக்கும்
இல்லாத 53 வருட அனுபவம்.
நம்பிக்கை எனும் சிகரத்தில் அரை நூற்றாண்டுகளாக
நிலைத்திருக்கும் ஒரே அரச காப்புறுதியாளன்.

# இளம் வயதில் தந்தையானால் நடுத்தர வயதில் சாவடைவர்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

லண்டன்,ஓக.6
பின்லாந்தைச் சேர்ந்த பல்கலைக் கழகம் ஒன்று மேற்கொண்ட ஆய்வில், இளவயதில் தந்தையாகும் ஆண்கள் நடுத்தர வயதில் சாவடைவதற்கான சாத்தியம் அதிகமாக



வுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
25 வயதுக்குள்ளே திருமணம் செய்துக்கொண்டு குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆண்கள், மற்றவர்களைவிட இளவயதில் கணவன், தந்தை மற்றும் குடும்பத் தலைவர் போன்ற பொறுப்புகளை சுமக்க வேண்டியுள்ளது. அதனால் அவர்கள் தங்களது உடல் நலத்தைக் கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். இதுதான் நடுத்தர வயதில் சாவடைவதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. 22 வயதில் தந்தை ஆகும் ஆண்கள் நடுத்தர வயதில் சாவடைவதற்கான வாய்ப்பு 26 சதவீதம் உள்ளது என வும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

# சிறுவனை நரபலி கொடுத்த மந்திரவாதிக்குச் சாவுத் தண்டனை

புதுடில்லி,ஓக.6
ஒடிசாவில் நரபலி கொடுத்த வழக்கில் 30 வயது மந்திரவாதி ஒருவருக்குச் சாவுத்தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்றுப் பரபரப்புத் தீர்ப்பு வழங்கியுள்ளது.
ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டம் தாமோதர்பூர் பகுதியில் வசித்து வந்த பிதாம்பர் கெய்பெய் என்பவர் தன்னை யோகசக்தி வாய்ந்தவராகக் அடையாளம் காட்டிக் கொண்டு மந்திர தந்திர வேலைகளைச் செய்து வந்துள்ளார். 2010 ஆம் ஆண்டு 8 வயதுச் சிறுவன் ஒருவனை சொக்லேட் தருவதாக ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென் றுள்ளார். பின்னர் அந்தச் சிறுவனை நரபலி கொடுத்து பூஜை செய்துள்ளார். சிறுவனின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டில் பொலிஸார் விசாரணை நடத்தினர். அதில், மந்திரவாதி பிதாம்பர் இந்த படுபாதகச் செயலைச் செய்தமை தெரியவந்தது. ஒரு வருடத்துக்குப் பின்னர் அவரது வீட்டில் புதைக்கப் பட்டிருந்த சிறுவனின் தலையைத் தோண்டி எடுத்த பொலிஸார் உடலை வேறு ஒரு இடத்தில் உள்ள சாக்கடையில் இருந்து எடுத்துள்ளனர்.
இதனையடுத்து மந்திரவாதி பிதாம்பர் கைது செய்யப்பட்டு ஜாஜ்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அரச தரப்பு வாதங்கள், 22 சாட்சிகளிடம் விசாரணை, என 15 வருடங்களாக நடந்த வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில், நேற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சிறுவனின் தலையை அறுத்துக் கொன்ற குற்றவாளி பிதாம்பருக்கு அதிகபட்ச தண்டனையாக சாவுத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (ஐ)

# யேமன் விமானத்தளம் சவூதிப் படைகள் வசம்


ஏடன்,ஓக.6
யேமன் போரில் முக்கிய திருப்பமாக கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த அல்–அனாத் விமானத் தளத்தை அரச ஆதரவுப் படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினருடன் இணைந்து அரசஆதரவுபடையினர்மேற்கொண்ட தாக்குதலில் அந்த விமானத் தளம் மீட்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஏடன் நகருக்கு 60 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அல்–அனாத் விமானத்தளம், கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள சனா நகரையும், போர் நடைபெற்று வரும் தாயெஸ் நகரையும், ஏடன் நகருடன் இணைக்கும் முக்கியத் துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்



ளமை குறிப்பிடத்தக்கது.
யேமனின் மிகப் பெரிய விமானத் தளமான அல்–அனாத் விமானத் தளத்தை அரச படைகளிடம் இழந்தமை, கிளர்ச்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பின்னடைவு என்று கருதப்படுகிறது. 24 மணி நேரம் நடந்த கடும் சண்டையில் 70 கிளர்ச்சியாளர்களும், 24 அரச ஆதரவு படையினரும் கொல்லப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)



சென்னை நெய்வேலியில் புதிய ஊதிய மாற்று ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி நிரந்தரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)




# மீண்டும் விற்பனைக்கு வருகிறது மகி நூடில்ஸ்

### பாதுகாப்பானது என சோதனையில் முடிவு

புதுடில்லி,ஓக.6
மகி நூடில்ஸ் பைக்கற்றுக்களில் அளவுக்கு அதிகமாக காரீயமும், இரசாயன உப்பான மோனோ சோடியம், குளுட்டாமேட்டும் சேர்க்கப்பட்டு இருப்பதாக முறைப்பாடுகள் எழுந்தன. அதைத் தொடர்ந்து மகி நூடில்ஸ் உணவுப் பொருள்கள் மீது பல்வேறு மாநிலங்கள் ஆய்வகச் சோதனை மேற்கொண்டன.
சோதனையின்போது அவற்றில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்கள் அதிகம் சேர்க்கப்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதனால், நெஸ்லே இந்தியா நிறுவனத்தின் நூடில்ஸ்கள் பாதுகாப்பற்றவை மற்றும் மனிதர்களுக்கு தீங்கு விளைவிப்பவை என மத்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் இந்தியா முழுவதும் அதன் விற்பனைக்குத் தடை விதித்தது.
இந்த நிலையில், மகி நூடில்ஸ்ஸின் தரம் பாதுகாப்பானதுதான் என உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இதையடுத்து விரைவில் அது மீண்டும் விற்பனைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# தடம் புரண்டன ரயில்கள்

## 30 பேர் உயிரிழப்பு; 300 பேர் மீட்பு

புதுடில்லி,ஓக 6
இந்திய மத்திய பிரதேச மாநிலத்தில் இரண்டு ரயில்கள் தடம்புரண்டு ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.
மும்பையில் இருந்து வாரணாசிக்குச் சென்று கொண்டிருந்த காமயானி விரைவு ரயில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் மத்திய பிரதேசம் மாநிலம் ஹார்டா அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. மேக்ஹாக் ஆற்றின் மேல் சென்று கொண்டிருந்த போது ரயிலின் கடைசி ஐந்து பெட்டிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றில் கவிழ்ந்தன. அதே நேரத்தில் ஜப்புள்பூரில் இருந்து மும்பைக்கு வந்து கொண்டிருந்த ஜனதா கடுகதி ரயிலும் அதே இடத் தில் தடம் புரண்டது. அதில் ரயிலில் 3 பெட்டிகளும் ஆற்றில் கவிழ்ந்தன. ரயில்கள் தடம் புரண்ட இடத்தில் இருந்து இதுவரை 30 பேரின் உடல்கள் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 300 பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் காணாமற் போனவர்களைத் தேடும் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இரண்டு ரயில்களிலும் சேர்த்து 10 பெட்டிகள் வரை ஆற்றில் கவிழ்ந்து கிடப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. மத்திய பிரதேச மாநிலத்தில் பெய்து வரும்



தொடர் கனமழையால் அருகில் உள்ள அணை ஒன்று உடைந்து மேக்ஹாக் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இரும்புப் பாதையின் அடிப்பகுதி அரிக்கப்பட்டதே விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற போது இரும்புப் பாதை நீரில் மூழ்கி இருந்ததாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் மீட்புப் பணிகள் சவாலாக இருப்பதாக ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர். இராணுவ வீரர்களும், தேசிய பேரிடர் மீட்பு குழுவினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**பிரதமர் மோடி இரங்கல்:**
பிரதமர் நரேந்திர மோடி ரயில் விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார். மேலும்ரயில்விபத்தின்மீட்புபணிகளை மத்திய அரசு கூர்ந்து கவனித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**சோனியா காந்தி இரங்கல்:**
மத்தியப் பிரதேச ரயில் விபத்துக்குத் தான் மிகவும் வருந்துவதாகவும், ஆழ்ந்த இரக்கத்தையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதாகவும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார். (ஐ)

# சர்வதேச உதவியை கோருகிறது மியன்மார்

## வெள்ளப்பாதிப்பில் இருந்து மீட்க; 2 இலட்சம் பேர் பாதிப்பு

யாங்கோன்,ஓக.6
மழை, வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மியன்மார் சர்வதேச உதவிகளை நாடியுள்ளது.
வெள்ளத்தின் காரணமாக அந்த நாட்டின் பல பகுதிகளில் நெருக்கடி நிலை நடைமுறைப்படுத்தப்படுகிறது.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மியன்மாரில் இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் பேர் உணவு, இருப்பிட வசதிகளின்றித் தவித்துவருகின்றனர்.
இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந்த மழையின் காரணமாக விவசாய நிலங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடுமையான வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட நான்கு மாகாணங்களில் அரசு நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தியுள்ளது.
தற்போதுவரை பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.
இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உணவு, இருப்பிடமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெள்ளத்தால் நாடு மிக மோசமான நிலையை எதிர்கொண்டதை அரசு ஒப்புக் கொண்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



வெள்ளம் தொடர்பான எச்சரிக்கைகள் எவரையும் சென்றடையவில்லை என்றும் மக்களை வெளியேற்றுவதில் குழப்பங்கள் நிலவியதாகவும் செய்தித் துறை அமைச்சர் ஏ ஹ்தூத் தெரிவித்துள்ளார்.
கடந்த மழை–வெள்ளத்தின் போது சர்வதேச உதவிகளை ஏற்க மறுத்த மியன்மார் இந்த முறை சர்வதேச உதவிகளைக் கோரியுள்ளது. 2008 ஆம் ஆண்டில் நர்கிஸ் புயல் தாக்கியதில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் உயிரிழந்தபோதும், அரசு வெளிநாட்டு உதவிகளை ஏற்க மறுத்துவிட்டது. ஆனால், தற்போது சர்வதேச உதவிகளை மியன்மார் கோரியுள்ளது.
ஐ.நா. அமைப்புகளுக்கும் தொண்டளிக்கக்கூடிய நாடுகளுக்கும் மனிதாபிமான ரீதியில் உதவிகளைக் கோரி விடுத்த அறிக்கையை பர்மாவின் செய்தித் தொடர்பு அமைச்சகம், பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளது.
ஐ.நாவின் மனிதாபிமான உதவிகளுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் இது குறித்து ஆலோசித்து வருகிறது. உலக உணவுத் திட்டம் தற்போது 47 ஆயிரத்து 800 பேருக்கு உணவு வழங்கும் பணியைத் தொடங்கியுள்ளது. ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு உணவளிப்பதை இலக்காகக் கொண்டு இந்த அமைப்பு செயற்பட்டுவருகிறது. (ஐ)

## ஊழியர்களைக் கோடீஸ்வரராக்கிய முதலாளி

அங்காரா,ஓக.6
துருக்கியைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று அதில் பணியாற்றிய ஊழியர்களுக்கு 169 கோடி ரூபாவை (இந்திய) பணிக்கொடைத் (போனஸ்) தொகையாக வழங்கியுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் ஒரே நாளில் கோடீஸ்வரர் ஆக்கியுள்ளனர்.
துருக்கியைச் சேர்ந்த எமக்சே பெதி எனும் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு "ஒன்லைன்" முறையில் உணவுப் பொருள்களை விநியோகம் செய்து வருகிறது. அந்த நிறுவனத்தின் நிறுவுனர் நெவ்ஜாத் ஐதீன் அந்த நிறுவனத்தை பல கோடி ரூபா லாபத்துக்குவேறு ஒரு நிறுவனத்



துக்கு விற்றார். அந்த லாபத்தில் ஒரு பகுதியை அந்த தனது நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பினார். இதையடுத்து 169 கோடி ரூபாயை (இந்திய) ஊழியர்களுக்கு பணிக் கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ளார். அதன்படி அங்குபணியாற்றும் ஒவ்வொரு ஊழியருக்கும் 1.5 கோடி ரூபா (இந்திய) கிடைக்கும். இதனால் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் ஒரே நாளில் கோடீஸ்வரர் ஆகியுள்ளனர். ஐதீனின் இந்தச் செயலால் அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். பலர் தங்களது முதலாளிக்கு கடிதம் மூலமும் நேரில் சென்றும் நன்றி தெரிவித்துள்ளனர்.
"நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட ஊழியர்களுக்கு லாபத்தில் பங்களிப்பதே நியாயமானது. இதை எனது தனிப்பட்ட நிறுவனமாகப் பார்க்கவில்லை; அனைவரும் சேர்ந்து உழைத்ததால்தான் இவ்வளவு பெரிய தொகை கிடைத்துள்ளது" என்றார் ஐதீன். (ஐ)


## புவி வெப்பமாதலைத் தடுக்க ஒபாமாவின் புதிய திட்டம்

வொஷிங்டன்,ஓக.6
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா புவி வெப்பமயமாதலை தடுக்கும் நோக்கில் சிறப்புத் திட்டத்தை நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். அத்துடன் புவி வெப்பமயமாதலைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் இந்தியாவும், சீனாவும் பங்குபெற வேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். புவி வெப்பமயமாதலைத் தடுக்கும் நோக்குடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் சிறப்புத் திட் டத்தை அறிவித்தார்.



இந்தத் திட்டப்படி அனைத்து மாகாணங்களும் தங்களது தனிப்பட்ட மின்சக்தி நுகர்வு அடிப்படையில் காபன் வெளிப்படுவதைத் தடுக்கும் தர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாடு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் மாகாணங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் குறித்த திட்டத்துக்கு நிதியுதவி அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ)


## இளம் குற்றவாளிக்கு சாவுத் தண்டனை



இஸ்லாமாபாத்,ஓக.6
பாகிஸ்தானில் சர்வதேச எதிர்ப்பையும் மீறி, "இளம்குற்றவாளி" என கூறப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டார்.
பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரைச் சேர்ந்த ஷாப்கத் உசேன் என்பவர் கராச்சியில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் காவலாளியாக வேலை பார்த்துக்கொண்டிருந்த போது, 7 வயதுச் சிறுவன் ஒருவனைக் கடத்திக் கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார். விசாரணை முடிவில், நீதிமன்றம் அவருக்கு சாவுத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. அப்போது அவருக்கு வயது 14 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர் மீதான வழக்கு விசாரணை சர்வதேச தரத்தின்படி அமையவில்லை, அவர் ஒப்புதல் வாக்கு மூலம் அளிப்பதற்காகச் சித்திரவதைச் செய்யப்பட்டார் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இவை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆர்வலர்கள் குரல் கொடுத்தார்கள். [illegible]
தான் சட்டப்படி, 18 வயதுக்கு முன்பாக ஒருவர் செய்த குற்றத்துக்காக தூக்கில் போடக்கூடாது என்ற நிலையிலும், ஷாப்கத் உசேன் சாவுத் தண்டனை ரத்து செய்யப்படவில்லை. தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து ஷாப்கத் உசேன் மேல் நீதிமன்றங்களை நாடினார். ஆனாலும் அவரது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.
ஷாப்கத் உசேனுக்கு சாவுத்த[illegible]ண்டனை உறுதி செய்யப்பட்ட[illegible]ம், சர்வதேச அளவில் தாக்கத்[illegible]த ஏற்படுத்தியது. அதற்கு ஆதர[illegible]ா கவும் எதிராகவும் விமர்சனங்[illegible]ள் வந்தன. அவரைத் தூக்கில் போ[illegible]க் கூடாது என பாகிஸ்தான் அர[illegible]ம் சர்வதேசப் பொது மன்[illegible]பு அமைப்பு வலியுறுத்தி வந்தது.
இதற்கிடையே மொத்தம் 4 [illegible] அவரது சாவுத் தண்டனை [illegible] வைக்கப்பட்டது. தற்போது [illegible] ழான் பண்டிகைக் காலம் முடி[illegible] யடுத்து நேற்று முன்தினம் [illegible] காலை 4 மணிக்கு தூக்கில் [illegible] தீவிரவாதத் தடுப்பு நீதிமன்ற[illegible] தரவு பிறப்பித்தது. [illegible] அவர் கராச்சி மத்திய சி[illegible]

## வயிற்றில் புதைக்கப்பட்ட கத்தரி 3 வருடங்களுக்குப் பின்னர் நீக்கம்

மொஸ்கோ,ஓக.6
ரஷ்யாவில் அறுவைச் சிகிச்சை ஒன்றின்போது பெண் ஒருவரின் வயிற்றில் தவறுதலாக வைத்துத் தைக்கப்பட்ட கத்தரிக்கோல் 3 வருடங்களுக்குப் பின்னர் நீக்கப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவைச் சேர்ந்த ஐசினா ஸிண்டுசோவா என்பவர் அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனை ஒன்றில் கடந்த 2012 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்குதான் மருத்துவர்களின் மறதியால் ஐசினாவின் வயிற்றில் கத்தரிகோல் வைத்துத் தைக்கப்பட்டது.
அறுவைச்சிகிச்சை முடித்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய சில வாரங்களிலேயே ஐசினாவுக்கு அவ்வப்போது வயிறு மற்றும் முதுகில் கடுமையான வலி ஏற்பட்டு வந்துள்ளது.
தாங்க முடியாத வலியால் தவித்து வந்த அவரது உடல் நிறையும் படிப்படியாக நலிவடையத் தொடங்கியுள்ளது. இதனையடுத்து, வலிக்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் தனது வயிற்றுப்பகுதியை எக்ஸ்ரே செய்ய முடிவெடுத்திருக்கிறார் ஐசினா. இந்த நிலையில் அருகாமையில் உள்ள மருத்துவமனைக்குப் பரிசோதனைக்காக சென்ற ஐசினாவுக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அவரது வயிற்றில், 8 அங்குலத்தில் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் கத்தரிக்கோல் ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கத்தரிக்கோல் வயிற்றுக்குள் [illegible]
கடந்த பின்னர், இரண்டரை மணி நேர அறுவைச் சிகிச்சையில் மருத்துவர்களால் தற்போது அந்தக் கத்தரிக்கோல் நீக்கப்பட்டுள்ளது.
வயிற்றில் கத்தரிக்கோல் வைத்து



அறுவை சிகிச்சை செய்து தம்மை பெரும் அவதிக்குள்ளாக்கிய அந்த மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக ஐசினா தெரிவித்துள்ளார். (ஐ)

# மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு

தென்மராட்சி, ஓக.6
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த பிரஜைகளுக்கான ஜுலை மாத 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பிரதேசத்தில் உள்ள அனைத்து அஞ்சல் நிலையங்களுக்கும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப் பட் டுள்ளது.
கடந்த திங்கட் கிழமை தொடக் கம் வழங்கப்பட்டு வரும் இந்தக் கொடுப் பனவை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மூத்த பிரஜைகளுக்கான 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவு அஞ்சல் அலு வலகங்களில் நேற்று புதன்கிழமை முதல் வழங்கப்படு கின் றது. இரண்டாயிரம் ரூபா கொடுப் பனவைப் பெற்றுக் கொள்ளும் மூத்த பிரஜைகள் தாம் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் அஞ்சல் அலுவலகங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என வலி. கிழக்கு பிரதேச செய லர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ந–9,11)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலேஸ்வரி மகேந்திரன்



இல.336/24, ராஜா தியேட்டர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி நகுலேஸ்வரி மகேந்திரன் 04.08.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மகேந்திரன்(Rtd. A.O RDHS) அலுவலகம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர்- ராசம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியும், பிரதீபன் (முகாமைத்துவ உதவியாளர் -மாவட்ட பொது வைத்திய சாலை கிளிநொச்சி), விஜிதன் (சுவிஸ்- முன்னாள் உத்தியோகத்தர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும். வனிதா ,சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜனி, யனுஜன், ஹர்விசன், அஸ்மிதா, அக்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற அரியநாயகம் (Rtd. A.O) மற்றும் பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி,பாலசுப்பிரமணியம்(ஜெயகிருஸ்ணா ஜுவலறி), காலஞ்சென்ற நடராஜா மற்றும் தியாகராஜா(ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனராணி, தெய்வேந் திரன்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), புவனேந்திரன், விமலேந்திரன், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.08.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 336/24 , ராஜா தியேட்டர்
ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி றோசம்மா ஜோண்செபமணி




நவாலி கிழக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி றோசம்மா ஜோண் செபமணி நேற்று (05.08.2015) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஜோண் செபமணி (ஆங்கில ஆசிரியர் மானி- இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யாகப்பு - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அலெக்சிஸ் மகேசாகரன் (யாழ்ப்பாணம்),அல்போன்ஸ் பிரபாகரன் (கனடா), அல்பேட் கருணாகரன் (லண்டன்), அஞ்சலின் சத்தியா (கனடா), கிறிஸ்ரீன் - நித்தியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், மடோனா, ஸ்ரெலா, கலா, சற்குணராஜா, நந்தகோபாலன் ஆகியோரின் அன்பு மாமியும், றுபஷினி, ஏரன், அலெக்ஸ் அல்வின், நிஜி, மதுசா, காருண்யா, கரிஷ், கிரிஜன், திவ்வியன் பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி ஆரோக்கியம், செபஸ்தியாம்பிள்ளை யேசுதாசன் (லண்டன்), மரியதாஸ், திருமதி லூர்துமேரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, தொம்மைக்குட்டி, செபநாயகம், பேரின்பநாதன் மற்றும் திருமதி மரியநாயகி மரியதாஸ், திருமதி லூட்ஸ் ராஜரட்ணம், திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோரது அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2015) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெறும் இறுதி அஞ்சலியின் பின்பு இரங்கல் திருப்பலிக்காக நவாலி சென்பீற்றேஸ் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கத்திற்காக நவாலி கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனோகரன் (மகன்)
தொ.பே. 077 706 2491
கருணாகரன் (மகன்)
தொ.பே. 077 408 6108

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(93817)
(46.7.9)

### சின்னையா கிருஷ்ணன்



மட்டுவில் தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கிருஷ்ணன் 04.08.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - முத்தி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான வயிரவன் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் லோகேஸ்வரன்(ஜேர்மனி), நிர்மலா(ஆசிரியர் - யா/மட்டுவில் தெற்குஅ.மி.த பாடசாலை), சதீஸ்வரன்(சுவிஸ்), ஜீவாதரன்(யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயலதா(ஜேர்மனி), சிறிதரன் (முகாமையாளர் - மக்கள் வங்கி, பரந்தன்) சிவவாணி(சுவிஸ்), சோபா ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிப்பிரியா, சாய்பிரியா, கேமப்பிரியா, பிரியங்கா, கிருத்திகன், ஆரதி, துயான், ஆருஷன் ஆகியோ ரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அப்பையா மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சின்னையாவின் சகலனும் அன்னபூரணம் (லண்டன்), லீலாவதி, ருக்குமணி, இராணி, மலர், கமலா, தவராசா, மாலினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டுவில் சின்னத்தூ இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"நிர்மலகிரி"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 728 6200
077 579 5803

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை இராசையா

தோற்றம்
10
.
06
.
1930



மறைவு
02
.
08
.
2015

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை இராசையா 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயமலர் மற்றும் ஜெயக்குமார், செல்வராசா, முத்துலிங்கம் (ஜேர்மனி), சந்திரா, சேகர்(ஜேர்மனி), லெட்சுமி(ஜேர்மனி), லலிதா, இராஜேஸ்வரி(ஜேர்மனி), மதன், சுஜாதா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சாரங்கபாணி மற்றும் றொபட் பெல்சியர், எட்வர்ட், செந்தில்வேல், யூஜின் (ஜேர்மனி), ராணி(ஜேர்மனி), சுகிர்தா(ஜேர்மனி), அற்புதம், சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (07.08.2015) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆடிக் கார்த்திகை பெருவிழா

வலி.வடக்கு, ஓக.6
சோழ இளவரசி மாருதப் புரவீக வல்லியின் மாவை ஆதீனப் பேரரசு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆடிக் கார்த்திகைப் பெருவிழா எதிர் வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடை பெறவுள்ள உசத்கால பூசையுடன் ஆரம்பமாகி இரவு 9 மணி வரை நடைபொறவுள்ளது. காலை 7 மணிக்கு ஸ்நபனாபிசேகம், விசேட மேளக் கச்சேரியும் 8 மணிக்கு காலை சந்திப் பூசை, விசேட மேளக் கச்சேரியும் மு.ப. 8.30 மணிக்கு கதாப் பிரசங்கம், பஜனை நிகழ்வுகளும் மு.ப. 10 மணிக்கு மென்டலின் கச்சேரியும் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு வீணைக் கச்சேரியும், சண்முக அர்ச்சனையும் இடம் பெறும்.
தொடர்ந்து பி.ப. 1.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி பி.ப. 3 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் அதனைத் தொடர்ந்து கார்த்திகை குமரன் வெளிவீதியுலாவரும் நிகழ்வும் இடம் பெறும்.
பி.ப. 5 மணிக்கு ஸநபனாபிசேகமும் பி.ப. 5.30 மணிக்கு சாயரட்சைப் பூசையும் பி.ப. 6 மணிக்கு இரண்டாம் கால பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை திருக்குமரன் வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இரவு 9 மணிக்கு அர்த்த சாமப்பூசையும் இடம்பெறும். (ந–89)

## தோணி கவிழ்ந்து ஒருவர் சாவு

கந்தளாய், ஓக.6
கந்தளாய் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் தோணிகவிழ்ந்ததால் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடந்துள்ளது.
கந்தளாய் குளத்துக்கு தோணியொன்றில் சென்ற இருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் தோணி கவிழ்ந்து அதில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.
மற்றவர் நீரில் நீந்தி உயிர் தப்பியுள்ளார். உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான எல்.எச். லீவசிங்க (வயது –46) எனத் தெரிவிக்கப்படுகின்றது.
உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ள தோடு சடலத்தை உறவினர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலமைச்சர் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு, தமிழ் மக்களுக்காக தமிழ்த் தேசியக் கொள்கையை கடைப்பிடிக்கும் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று சொல்லி வாக்கு வாங்கி, வடமாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட க.வி.விக்னேஸ்வரன் செயற்படும் விதம் விசனத்துக்குரியது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டமைப்புக்குள் வேறு சிறந்தவர்கள் இருக்கின்ற போதும், ஓய்வு பெற்ற நீதியரசர் என்பதற்காகவும், தமிழ் மக்களுக்கு உரிமையை பெறக்கூடியவர், கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு உதவக்கூடியவர் என்ற வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அறிமுகம் செய்யப்பட்டவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இன்று பல கட்சிகள் தேர்தலில் போட்டியிடு வதால், தான் நடுநிலைமை வகிக்கப் போவதாக அவர் கூறுவதைக் கேட்கும்போது எமது வாக்குகளை வீணாக்கி விட்டோமோ என எண்ணத் தோன்றுகிறது. இலங்கையில் எந்த ஒரு முதலமைச்சரும் இவ்வாறு கூறியதில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் முன்னர் ஆயுதம் தரித்தவர்களின் பேச்சைக் கேட்க முடியாதென்றும், அவர்களுடன் இணங்கிச் செயற்படத் தன்னால் இயலாது என்றும் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற கட்சிகளை விமர்சித்த போதே மக்கள் மனதில் ஒரு சலிப்புத் தன்மையும் விரக்தியும் ஏற்பட்டது. இவர் கூட்டமைப்பின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு உதவமாட்டார் என்று மக்கள் நாடி பிடித்துப் பார்த்து விட்டார்கள்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி எமது மக்களின் உரிமையை வென்றெடுக்கவே மக்கள் தமது வாக்குகளை அவருக்கு அளித்தனர். இதனைத் செய்யாத விடத்து அடுத்த தேர்தல்களில் மக்கள் அவருக்குத் தகுந்த பாடம் புகட்டுவது உறுதி.

நடுநிலைமை வகிப்பதற்கு முதல் அமைச்சர் எதை எதிர்பார்க்கிறார்? தன்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உயர் பதவியில் அமர்த்த வேண்டும் என்று கூறிய அவர் அந்தப் பதவிக்கு வர வேண்டும் என்று நினைக்கின்றாரோ என மக்கள் எண்ணும் அளவுக்கு அவரது அறிக்கை உள்ளது.

எனவே கௌரவ முதலமைச்சர் அவர்களே! தமிழ் மக்கள் உங்களுக்கு வாக்களித்தது நடுநிலைமை வகிக்க அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி உடையாமல் பாதுகாத்து ஒற்றுமையாக எமது உரிமைகளை வென்றெடுக்கவே. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தங்களின் ஆதரவை வழங்கி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற உழைக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம் ஆகும்.

*செ.ஜெகபாலன்*
*தலைவர், மக்கள் நலன் பேணும் அமைப்பு,*
*புகையிரத வீதி, கோண்டாவில்.*

## வாசகர் திருமுகம்



## சாபக்கேடு நீங்குமா?

ஐயா தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் புற்றீசல் போல் பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்து பரப்புரைகளும் மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் முன்னாள் போராளிகள் என்ற போர்வையிலும் ஒரு குழு வேட்புமனுத் தாக்கல் செய்து பரப்புரையும் செய்து வருகின்றது. எம்முன் எழும் கேள்வி, இவர்கள் எல்லாம் யாருக்காக எதற்காகப் போட்டி இடுகிறார்கள் என்பதாகும். உண்மையிலேயே தமிழுக்காகவோ தமிழினத்துக் காகவோ இவர்கள் போட்டியிடவில்லை. உண்மையாகவே தமிழ் உணர்வு இருக்குமானால், இவர்கள் சம்பந்தன் ஐயாவின் தலைமையில் இயங்கும் கூட்டமைப்புக்கு கைகொடுத்து அதை வலுப்படுத்தியிருக்க வேண்டும்.

ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர், தேசியத்தலைவர் மாண்புமிகு வே.பிரபாகரன் அவர்களே. இதையெல்லாம் புறந்தள்ளி இரத்தக்காட்டேரி ராஜபக்ஷவுக்குத் துணைபோகும் ஒரு செயற்பாடாகவே இவர்களின் செயல் அமைந்துள்ளது. இவர்களும் மாத்தயா. கருணா, பிள்ளையான் வழியில் கொடும்பாவி ராஜபக்ஷவின் பணத்துக்கு விலைபோய் விட்டார்கள் என்று துணிந்து சொல்லலாம். காலத்துக்குக் காலம் இப்படி உருவாகும் புல்லுருவிகளுக்கு சரியான பாடம் புகட்டுவது தமிழ் மக்களின் கடமையாகும். தமிழினத்தைப் பீடித்துள்ள இந்த சாபக்கேடு நீங்காத வரைத் தமிழினத்துக்கு விடிவும் இல்லை இதை உணருமோ எம்மினம்?.

***திருக்குமரன், மாயவனூர், வட்டக்கச்சி.***

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# மஹிந்தவின் விஷமப் பரப்புரை

*இலங்கையின் சனத்தொகையில் 74 சதவீதமானோர் சிங்கள பௌத்தர்கள். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் இறங்கியிருக்கிறார்கள் என்பதை அவர்களின் சமீபகால உரைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.*

*ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவு மஹிந்தவுக்குப் பாதகமாக அமைந்த மறுதினமே, அவர் மெதமுலனயில் மக்கள் மத்தியில் பேசுகின்றபோது தனக்கு பௌத்த மக்கள் 58 இலட்சம் பேர் வாக்களித்தனர் என்றும் தமிழ், முஸ்லிம் மக்களே தன்னைத் தோற்கடித்தனர் என்றும் தெரிவித்து தனது இனவாத அரசியலை ஆரம்பித்து வைத்தார். அதன் தொடர்ச்சிதான் தற்பொழுது நாட்டில் அரங்கேற் றப்பட்டு வருகிறது. அவற்றில் ஒன்றே ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைக் கைப்பற்றினால் வடக்கு - கிழக்கை இழக்கப் போகிறோம் என்ற விதண்டாவாதம்.*

*வடக்கு, கிழக்குப் பகுதிகள் நீக்கப்பட்ட புதிய வரைபடம் உருவாக்கப்பட்டு, “நாடு பறிபோகப் போகிறது, வடக்கு - கிழக்கு இல்லாத இலங்கையைத்தான் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கப் போகிறார்” என்று மஹிந்த குருநாகல் கூட்டத்தில் உரையாற்றி சிங்கள மக்களை உசுப்பேற்றி விட்டுள்ளார்.*

*நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் (பத்து ஆண்டுகள்) கடமையாற்றியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த. ஜனவரி - 8 தோல்வியுடன் அரசியலுக்கு முழுக்குப் போட வேண்டியவர். பதவி ஆசையால் மீண்டும் தேர்தலில் களம் இறங்கியிருக்கிறார். தேர்தல் வெற்றிக்காக அவர் இனவாதத்தைக் கையிலெடுத்திருப்பது வெட்கட்கேடான ஒரு செயற்பாடாகும்.*

*குருநாகல் கூட்டத்தில் மஹிந்த பேசுகையில் “எனது ஆட்சியில் சமாதானமும் ஒற்றுமையும் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. நாட்டு மக்கள் அச்சம் பீதியின்றி வாழும் நிலைமை இருந்தது. நாட்டின் தேசியப் பொருளாதாரம் உயர் மட்டத்தில் இருந்தது. அனைவரும் சுகபோக வாழ்க்கை வாழும் நிலைமை இருந்தது. அபிவிருத்திப் பணிகளில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என பாகுபாடு பார்க்கப்படவில்லை. அனைத்துப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்தேன்” - என்று கூறியிருந்தார். அப்படியானால் ஏன் மக்கள் தம்மைத் தோற்கடித்தார்கள் என்பதற்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை. இதனைத் தெரிந்துகொள்ளாதிருப்பது வேடிக்கையாக உள்ளது.*

*அவரது தோல்விக்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகள்தான் காரணம் என்றால், அவர்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய ஏதாவது நம்பகத் தன்மை வாய்ந்த உத்தரவாதம் எதனையும் வழங்கினாரா? அதுவும் இல்லை. ஆகவே கைவிட்டுப்போன சிறுபான்மை இனங்களின் ஆதரவு இனியும் வேண்டாம் என்ற நிலைப்பாட்டின் வெளிப்பாடே மஹிந்தவின் இந்த இனவாத அரசியல். இது நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்தக் கூடியது.*

*முள்ளிவாய்க்காலுடன் தென்னிலங்கையின் இனவாதம் அழிந்துவிடும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் தென்னிலங்கை மக்கள் மறக்க விரும்பினாலும், மஹிந்தவும் அவரது சகாக்களும் விடுகிறார்களில்லை.*

*இவர்கள் சுயநல அரசியல் போக்குக் கொண்டவர்கள். தேர்தல் பிரசாரத்துக்கு எதுவுமே இல்லாத நிலையில் இனவாதத்தைக் கையில் எடுத்த வங்குரோத்து அரசியல்வாதிகள். மீட்கப்பட்ட நாட்டைப் பிரிப்பதற்கோ, பிளவுபடுத்துவதற்கோ இடமளிக்கமாட்டோம் என்கிறார்கள். இப்படியான விஷமப் பிரசாரம் செய்யும் இவர்களிடமிருந்து தமிழ், முஸ்லிம் மக்கள் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்?*

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நீள் கதையாகத் தொடரும் இனப் பிரச்சினைத் தீர்வு....

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாறுபட்ட அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பதால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதில் தாமதம் எதுவும் உண்டாக மாட்டாது.

நாம் ஒருபோதும் இன ஐக்கியத்தைக் கைவிடவில்லை. ஐக்கிய இலங்கை என்பது இலங்கையைத்தான் குறிக்கும்.

ஐக்கிய இலங்கைக்கும்-ஒற்றை ஆட்சிக்கும்- இடையில் வித்தியாசம் எதுவும் இல்லை. அதாவது ஐக்கியப்படுத்துதல் என்பது அனைவரையும் ஒன்றாக இணைக்கும் அரசியல், கலாசார வேலைத்திட்டமாகும்.

மேற்கண்டவாறு ஒரு வகை விளக்கம் கொடுத்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நாட்டின் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

தமது பக்கத்தின் இப்போதைய நிலைப்பாடு குறித்து(சிங்கள) இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் நிகழ்ச்சியிலேயே அவர் மேற்கண்ட கருத்தை உதிர்த்துள்ளார்.

ஐக்கிய இலங்கை என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் கலாசார வேலைத்திட்டம் என்று வியாக்கியானமும் வேறு வழங்கி உள்ளார். பிரதமரின் பேட்டியின் கருத்து தாம் ஒற்றை ஆட்சி என்ற வட்டத்திலிருந்து ஓர் அங்குலம் ஏனும் நகரப் போவதில்லை என்பதையே அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது!

இத்தனைக்கும், கடந்த மாதம் 31ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வருகை தந்திருந்த பிரதமர் ரணில், தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தவகை சார்ந்த தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்பது தொடர்பாக இறுதி முடிவை மேற்கொள்வதற்கான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து ஆராய்ந்து கொண்டிருப்பதாகத் தகவல் வெளியிட்டுச் சென்றிருந்தார்.

தென்னாபிரிக்காவில் இன ஐக்கியத்தை உருவாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற ஒன்று எமது நாட்டிலும் நிறுவப்படும் என்று அவர் அங்கு தெரிவித்ததும் இங்கே தொட்டுக் காட்டப்பட வேண்டியதாகும்.

பிளவுபடாத நாட்டுக்குள் நிலையான- நியாயமான-நிரந்தரமான தீர்வையே- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளதாக, அதன் தலைவர் இரா.சம்பந்தன் வெளிப்படுத்திய கருத்து நிலைப்பாட்டுக்குப் பதிலடியாக பிரதமரின் கருத்து எழுந்து நிற்பதை எவராலும் கிரகித்துக் கொள்ள இயலும்.


நாம் நாட்டைப் பிரிக்குமாறு கோரவில்லை. இந்த நாட்டில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்ற அடிப்படையிலேயே, வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சியைக் கோருகிறோம் என்றும்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எடுத்து இயம்பி இருந்தார்.

இலங்கை, பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற எட்டாவது ஆண்டில், முகிழ்த்து எழுந்த தமிழரை ஒடுக்கும் நிலை - அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பறித்த படுபாதகம்- மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் ஏறிய சிங்கள அரசுகளால் முன்னெடுக்கப்பட்ட வரலாறு இப்போதும் தொடர்கிறது.

அதன் பின்னரான கடந்த சில ஆண்டுகளில், சிங்கள அரசுகள் கிள்ளித் தெளித்த அற்பசொற்ப உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக் கொண்டு கைகட்டி, வாய்பொத்தி வாழ்ந்ததை விட வேறெந்த அரசியல் காட்சியும் புனையப்படவில்லை. கடந்த ஐம்பத்தொன்பது ஆண்டுகளாக, ஜனநாயகம் என்ற போர்வையில் நெருப்பேற்றிய கம்பளத்தில் நாள்களைக் கழிக்க வேண்டிய கையறு நிலைக்குத் தமிழ் மக்கள் உந்தித் தள்ளி வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் நாள் விரைந்து ஓடி வருவதற்கு முன்னர், தென்னிலங்கை ஆட்சியாளர்களும் எதிரணிகளும், தமிழ் மக்களை அரசியல் ரீதியாக மேன்மேலும் ஆழ் கிடங்குக்குள் தள்ளிவிடுவதற்குப் போட்டி போட்டுத் "தமாஷா" பண்ணும் காட்சியே, மின்னி மின்னித் தெறிக்கிறது! வேறெதனைத்தான் சொல்ல....

# தேர்தலின் பின்னராவது தமிழர்கள் கவனிக்கப்படுவார்களா?



சேரலாதன்

இன்னமும் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே இலங்கையின் தேர்தல் திருவிழா முடிவுக்கு வந்து விடும். இந்த நாட்டின் வரலாற்றிலேயே இதுவொரு விசித்திரமான தேர்தலாக அமைந்து காணப்படுகின்றது. இதன் முடிவுகளும் ஆச்சரியத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பதை இப்போதே கூறிவிடமுடியும்.

இந்தத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் போட்டியிடுகின்றபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே ஆட்சியமைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கப் போகின்றன. இந்த இரண்டு கட்சிகளும் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் மஹிந்த எதிர்ப்புக் கொள்கையைத் தனது பிரதானமான ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது. திருடர்களிடம் மீண்டும் நாட்டை ஒப்படைக்க மாட்டோம் என்ற தொனிப்பொருளில் அதன் பரப்புரைகள் இடம்பெற்று வருகின்றன. முன்னைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் செயற்பாடுகளிலும் இந்தக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதற்கு மக்களின் ஆதரவு கிடைத்து வருவதையும் காணமுடிகின்றது. தாம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை மஹிந்த தரப்பினர் மறுத்துள்ள போதிலும், மக்களில் அநேகமானவர்கள் இதனை நம்பத் தயாரில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. ஆனால் இந்த முன்னணியில் முக்கிய பிரமுகர்களாகத் திகழும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும்எதிரும் புதிருமான நிலையிலேயே காணப்படுகின்றனர். பிரதமர் பதவியில் அமர்வதே மஹிந்தவின் கனவாக உள்ளது. ஆனால் அது நிறைவேறாது என அடித்துக் கூறிவிட்டார் ஜனாதிபதி மைத்திரி. உட்கட்சிப் பூசல்களால் பிளவுபட்டு நிற்கும் அந்தக் கூட்டணி தேர்தலின் பின்னரும் நிலைத்து நிற்குமா என்பது சந்தேகம்தான்.

முன்னரெல்லாம் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை மஹிந்த ராஜபக்ஷ வெகு எளிதாகவே தம்முடன் சேர்த்துக்கொள்ள முடிந்தது. இதற்கு அந்தக் கட்சியில் நிலவிய பிளவுகளும் முக்கிய காரணமாகும். அத்துடன் தேர்தல்களில் சந்தித்த தொடர் தோல்விகளையும் காரணமாகக் குறிப்பிடமுடியும். ஆனால் இன்று அந்தக் கட்சி புதுத்தெம்புடன் காணப்படுகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோற்கடிக்கப்பட்டதும், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் அமர்ந்து கொண்டதும் அந்தக் கட்சிக்கு புதுத் தோற்றத்தை ஏற்படுத்தி விட்டது. மேலும் நல்லதொரு தேர்தல் கூட்டணியும் அமைக்கப்பட்டு விட்டதால் தேர்தலில் அதிக ஆசனங்களைப் கைப்பற்றிக் கொள்ளும் நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சி காணப்படுகின்றது. புலனாய்வு அறிக்கைகளும் இதையே உறுதி செய்கின்றன.

> பிரதமர் பதவியில் அமர்வதே மஹிந்தவின் கனவாக உள்ளது. ஆனால் அது நிறைவேறாது என அடித்துக் கூறிவிட்டார் ஜனாதிபதி மைத்திரி. உட்கட்சிப் பூசல்களால் பிளவுபட்டு நிற்கும் அந்தக் கூட்டணி தேர்தலின் பின்னரும் நிலைத்து நிற்குமா என்பது சந்தேகம்தான்.

இதேவேளை – அநுரகுமார திஸாநாயக்க தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் ஜே.வி.பி. எனச் சுருக்கமாக அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை அதிகரித்து வருகின்றது. மஹிந்த தரப்புடனோ அல்லது ரணில் தரப்புடனோ இந்தக் கட்சி உறவைப் பேணமாட்டாது என்பது அதன் நடவடிக்கைகள் மூலமாகத் தெரிகின்றது. குறிப்பாக மஹிந்த தரப்பின் ஊழல், மோசடிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதில் இந்தக் கட்சி முன்னிலை வகிக்கின்றது. ஒரு காலத்தில் இந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளராகப் பதவி வகித்த விமல் வீரவன்ஸ மஹிந்தவின் காலடியே தஞ்சமெனக் கிடந்து வருகின்றார். தம் மீதும், தமது மனைவி மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்கு மஹிந்த மீண்டும் உயர் பதவிக்கு வருவதே ஒரே வழியென நம்பும் விமல் வீரவன்ஸவின் கனவும் கனவாகவே இருந்து விடப் போகின்றது. ஆனால் விமல் போன்றவர்கள் பிரிந்து சென்றமை மக்கள் விடுதலை முன்னணிக்கு நன்மையாகவே அமைந்து விட்டது. தென்பகுதியில் ஒரு மூன்றாவது சக்தியாக மக்கள் விடுதலை முன்னணி உருவெடுக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

தேர்தல் முடிவுகள் தேசிய அரசு ஒன்றை நோக்கியதாகவே இருக்கப்போகின்றன. ஏனென்றால் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் தொங்கு நாடாளுமன்றம் ஒன்றையே நாம் எதிர்பார்க்க முடியும். இதற்கு தேசிய அரசு அமைவதே தீர்வாக இருக்கும். ஜனாதிபதியின் விருப்பமும் இதுதான். இதனால் ஜனாதிபதிக்குச் சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கு முற்படலாம். மஹிந்தவின் பிரதமர் கனவு நிறைவேறாது போக விருப்பதற்கு இதுவுமொரு காரணமாகும். வடக்கு–கிழக்கு மாகாணங் களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்தக் கட்சி எதிர்பார்க்கும் 20ஆசனங்கள் கிடைக்குமா என்பதை இப்பொழுது கூறிவிடமுடியாது. ஆனால் மத்தியில் தொங்கு நாடாளுமன்றம் ஒன்று அமைந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியமானதொரு பேரம் பேசுகின்ற சக்தியாக மாறிவிடும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகின்றது.

தற்போதைய நிலையில் மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதை சிறுபான்மை இனத்தவர்கள் அறவே விரும்பவில்லை. ஏனென்றால் கடந்த கால கசப்பான அனுபவங்களை அவர்கள் இன்னமும் மறக்கவில்லை. மறக்கவும் முடியாது. ஆகவே மஹிந்தவுக்கு மாற்றான அரசு ஒன்று அமைவதையே அவர்கள் விரும்புகின்றனர். இதற்கேற்றாற்போன்று அமையவுள்ள அரசு சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் சிறுபான்மையின மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பிரச் சினை தொடர்பாகக் காலத்துக்குக் காலம் பதவிக்கு வருகின்ற அரசுகள் வாக்குறுதிகளை வழங்குவது வழக்கமாக இருக்கின்றதேயொழிய ஒன்றுமே இடம்பெறுவதில்லை. ஏமாற்றப்படுபவர்களாகவே சிறுபான்மை மக்கள் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் தேர்தலுக்குப் பின்னர் பதவியேற்கவிருக்கும் அரசு இனியாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைத் திறந்த மனத்துடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனால் நாட்டில் இனங்களுக்கு இடையேயான நல்லுறவு மேம்படுவதுடன் இனவாதக் கருத்துக்களும் செயலிழந்து போகும் நிலை உருவாகும். ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னரே இவை தொடர்பாக எதையும் உறுதியாகக் கூறமுடியும்.

# தேர்தல் அறிக்கையில் நம்பகமான பொருளாதார திட்டங்கள் இல்லை

## வாக்குகள் அள்ளுவதே நோக்கம்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
தொகுப்பு: ரெங்கன்

இரண்டு பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. நம்பகமான பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டங்கள் வெளிப்பட்டது இல்லை. அவைகளின் நோக்கமெல்லாம் அதிகளவு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே.

தேர்தல் முடிந்ததும் இலங்கையை ஒரு சொர்க்க பூமியாக மாற்றி விடுவார்கள் என்பதுபோல் நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளன. ஆனால் அவர்கள் வழங்கியுள்ள வாக்குறுதிகளைக் குறிப்பாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குறுதிகளைப் பார்த்தால் நாட்டின் பொருளாதாரம் தான் மேலும் சீர்குலைவதாக இருக்கப் போகிறது. நாட்டின் நிலையை கிரீஸ் நாட்டின் நிலைமைக்கு கொண்டு போய்விடும்போல் தெரிகிறது.

இலங்கையில் நடைபெறுகின்ற



தேர்தல்கள் "இல்லாத வளங்களை வைத்து ஏலவிற்பனை நடத்துவது" போன்ற ஒரு செயலாகும் என்று லீ குவான் யீவ் ஒரு முறை விமர்சித்ததையே இவர்களின் தேர்தல் வாக்குறுதிகள் நினைவுறுத்துகின்றன. பொருளாதாரத்துக்கான வளங்களைக் காணோம். அதேசமயம் பொதுச் செலவினங்களோ, வருமானத்துக்கான வழிகளைக் கண்டுபிடிக்காமல் சீர் குலைப்பவைகளாகவும் அழிவுகளைக் கொண்டுவருபவைகளாகவும் காணப்படுகின்றன.

### நல்லாட்சிக்கான தேசிய ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம்

புதிய நாடு ஒன்றை 60 மாதங்களில் உருவாக்குவதற்கென்ற 5 அம்சத் திட்டமொன்றை நல்லாட்சிக்கான தேசிய ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது. பொருளாதார வளர்ச்சி, ஊழல்களை எதிர்த்துப் போராடுவது, எல்லோருக்கும் சுதந்திரம், உள்கட்டுமானம் மற்றும் கல்வி சீர்திருத்தங்களில் முதலீடுசெய்வது என்பவற்றில் கவனம் செலுத்தப்படும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. அதன் ஆட்சிமுறையானது, போட்டித் தன்மையுள்ள சமூக பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும். அதாவது இடதுசாரி மற்றும் முதலாளித்துவ பொருளாதாரமாக இல்லாமல், அறிவுசார்ந்த மனித நேயம் கொண்டதாக அது இருக்கும். இந்தக் கலப்புப் பொருளாதாரமானது அல்லது சமூக சந்தை முறையிலான பொருளாதாரமானது, திறந்த சந்தைமுறைப் பொருளாதாரமாக அமையக்கூடும் என்று தெரிகின்றது. சமூகத்தின் குறிப்பிடத்தக்க தலையீடுகளுடன் செயற்படும் சந்தைக்குரிய சக்திகளை அடிப்படையாகக் கொண்டு அது இயங்குவதாக இருக்கும். இது கடந்த காலத்தில் ஐ.தே.க. நிர்வாகத்தில் இருந்ததைப் போல் செயற்படும் எனலாம்.

### ஜனநாயகம்

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதான தேர்தல் நிலைப்பாடு ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக சுதந்திரம் மற்றும் நல்லாட்சி என்பவற்றின் வெற்றிகளைத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதாக இருக்கும்.

எனவே முன்னர் இருந்த அரசைப் போலில்லாமல் நல்லாட்சிக்கான உயர்மட்ட அர்ப்பணிப்பான சேவையை மக்கள் எதிர்பார்க்கக் கூடியதாய் இருக்கும். அது ஊழல்களை எதிர்த்துப் போராடப் போவதாகக் கூறுகின்றது. இப்போதிருக்கும் நிதிக்குற்றங்கள் தொடர்பான விசாரணைப்பிரிவுக்கு நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றை இயற்றுவதன் மூலம் அதிக வலுவை வழங்கும். அந்த வகையில் ஊழல்களை ஒழிப்பதற்கான புதிய பொலிஸ் சட்டமொன்றையும் புதிய அரசு கொண்டுவரும். நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியானது புதிய அரசமைப்புச் சட்டமொன்றை இயற்றப் போவதாகவும் வாக்குறுதியளித்துள்ளது. ஒற்றை ஆட்சியின் கீழ் சகல மக்களதும் அங்கீகாரத்துடன் உச்சமட்ட அதிகாரப் பகிர்வை நிலைநாட்டப் போவதாகவும் அது அறிவித்துள்ளது.

### கல்வித்துறையில் அபிவிருத்தி

தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் கல்வித்துறைக்கு நியாயமான அளவு அதிக நிதி செலவிடுவது பற்றி அறிவித்துள்ளது. அந்த வகையில் புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அதிகமான கல்வி அறிவுள்ளவர்களையும் அறிவு சார்ந்த புதிய தலைமுறையொன்றையும் உருவாக்குவதும் இதன் நோக்கம். மாணவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் என்னவித பெறு பேறுகளைப் பெற்றிருந்தாலும் அனைவருமே பாகுபாடின்றி உயர் தரக் கல்வியைப் பெறுவதற்கு வசதி கள் செய்யப்படும்.

புதிய கல்விச்சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவும், ஆசிரியர்கள் கற்பித்தலைத் தவிர்த்து வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடை செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி உள்கட்டுமானத் துறையில் முதலீடு செய்யவிருக்கும் திட்டமானது அது பேரார்வத்துடன் சிறப்புற செய்துமுடிக்கவேண்டும் என்று கருதும் திட்டங்களில் ஒன்றாகும். தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாக மேற்கு மாகாணத்தை வளர்த்தெடுக்கும் ஒரு கனவுத் திட்டம் போன்றது என்றும் கூறலாம். அதில் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டி எழுப்புவதும் அடங்கும். முன்னைய அரசு ஆரம்பித்த கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் போன்றவற்றை ஐக்கிய முன்னணி அரசு தொடர்ந்து முன்னெடுக்குமா என்பது குறித்து அதன் விஞ்ஞாபனத்தில் ஒன்றும் கூறக் காணோம்.

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிகழ்ச்சித்திட்டம்

நாட்டுக்குப் புத்துயிர் அளித்து புதிதாக ஆரம்பித்தல் என்ற தொனிப் பொருளைக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனமானது அதன் பழைய கொள்கைகளையெல்லாம் தூக்கியயறியப் போவதாகக் காட்டிநிற்கின்றது. பத்துவருட காலம் நாட்டை ஆட்சி புரிந்துள்ள அவர்கள் அந்த பத்து ஆண்டு காலத்தில் கொடுக்க முடியாமல் போனவற்றை இனிக்கொடுக்கப்போவதாக வாக்குறுதி அளிக்கின்றனர். கல்வி, சுகாதாரத்துறைகளில் முன்னுரிமை அளிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க தலைகீழ் மாற்றம் தெரிகிறது. அந்தத் துறைகளுக்கு உயர் அளவில் செலவினங்கள் காட்டப்பட்டுள்ளன. அதே சமயம் உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

### ஐக்கிய முன்னணியின் வாக்குறுதிகள்


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல்வேறுவிதமான மிதமிஞ்சிய வாக்குறுதிகளைக் காணமுடிகின்றது. கல்வி, சுகாதாரம், பொது சேவையாளர்கள் மற்றும் தோட்டத்தொழிலாளர்களையும் உள்ளடக்கியதாக அது காணப்படுகின்றது. 18 – 35 வயதுக்குட்பட்ட கல்வி கற்ற இளம் சமுதாயத்தினருக்கு தகவல் தொழிற்றுறையில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க அது வாக்குறுதியளிக்கிறது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் வாக்குறுதியளிக்கின்றது. நிறுத்தப்பட்டுள்ள 58 ஆயிரம் அபிவிருத்திப் பணிகளை மீளத் தொடங்கவும் உறுதியளிக்கின்றது.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, 18வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு ரூ 50 ஆயிரம் கொடுப்பனவு, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு ரூ 10 ஆயிரம் புத்தகங்கள் வாங்குவதற்கான கொடுப்பனவு என்று விஞ்ஞாபனம் வாக்குறுதி அளிக்கின்றது. மகாபொல கொடுப்பனவு ரூ 6 ஆயிரமாக அதிகரிக்கப்படும். தனியார் துறை ஊழியர்களுக்கு ரூபா 3 ஆயிரம் கொடுப்பனவு வழங்கப்படும். தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை ரூ 25 ஆயிரமாக உயர்த்தவும் வழிவகை செய்ய உறுதியளிக்கப்பட்டுள்ளது.

### கல்வியும் சுகாதாரமும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திட்டத்தில் இம்முறை கல்வித் துறைக்கு அதிக அளவில் செலவுகளை மேற்கொள்ளவிருப்பதான அம்சம் குறிப்பிடக்கூறவேண்டிய ஒன்றாகும். கடந்த காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியானது வெளிநாட்டு நிதி ஆதாரத்துடனான ஒரு பெரிய உள்கட்டமைப்பு திட்டத்தை முன்னெடுத்திருந்தது. அதனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வளர்ச்சிப் பணிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அதனால் சுகாதார, கல்வித்துறைகளில் போதுமான அளவு நிதி ஆதாரங்களை வழங்க முடியாமல் போயிற்று. இப்பொழுது அவ்விரு துறைகளிலும் அதிக கவனம் செலுத்தி மேம்பாட்டைக் காண அதுவிரும்புகிறது. கல்வி, சுகாதாரத்துறைகளில் அபிவிருத்தியைக் கொண்டு வரும் திட்டமானது ஒரு சரியான திசையிலான நகர்வு என்றே சொல்லவேண்டும்.

ஆனால் அது வாக்குறுதியளித்துள்ள மாபெரும் பொது நலத்திட்டங்களுக்கு வேண்டிய நிதி ஆதாரங்களை வழங்கும் அதேசமயம், இந்தப் புதிய கொள்கை மாற்றுத் திட்டங்களுக்கும் எவ்வாறு நிதி ஆதாரங்களை அது பெற்றுக்கொள்ளும் என்பது பெரிய கேள்வியாகவே காணப்படுகின்றது.



### மக்கள் எதிர்பார்ப்பு

1931 ஆம் ஆண்டிலிருந்து 86 ஆண்டுகள் காலம் வாக்குரிமையையும் சுதந் திரத்துக்குப் பின்னர் 12 பொதுத் தேர்தல்களையும் கண்டுள்ள எமது மக்கள் இந்த மாதிரியான வாக்குறுதிகளில் சிலவாவது நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதேவித கடந்த கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போனமையும், பாதியளவு நிறைவேற்றப்பட்டமையும் மக்கள் மனங்களில் இருந்து மறைந்து போகாவிட்டாலும், இந்த எதிர்பார்ப்புகள் ஓரளவு இருக்கவே செய்கின்றன.

இப்போதைய தேர்தலானது, நாடு தனது ஜனநாயக கௌரவத்தைப் பாதுகாத்து முன்னேற்றிக்கொள்ள பெரு முயற்சி மேற்கொண்டிருக்கும் நிலையில், கடன்களைத் தீர்த்துக் கொள்ளவே போதியளவு வருமானமில்லாத நிலைமைக்குள்ளாயிருக்கும் வேளையில் நடைபெறுவதாய் காணப்படுகின்றது.

### இரு திட்டங்களிலும் காணப்படும் குறைபாடுகள்

இவைகள் இவ்வாறு இருக்கும் நிலையில், போதிய வருமானம் இன்மை, பெருமளவில் நிதிப் பற்றாக்குறை, பெரிய வெளிநாட்டுக் கடன்கள் ஆகிய அடிப்படைப் பிரச்சினைகளைச் சமாளித்து எவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்வார்கள் என்பது குறித்த குத்துமதிப்பான திட்டங்கள் எதையும் இரு பிரதான கட்சிகளும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பதிலாக தொழில்களை அதிகரிப்பது, சம்பளங்களைக் கூட்டுவது, மாணவர்களுக்கு மானியம் வழங்குவது மற்றும் கல்வி சுகாதாரத்துக்கு செலவுகளை அதிகரிப்பது போன்றவற்றை அறிவித்து வாக்குறுதிகளும் வழங்கியுள்ளன.

இரண்டு பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. நம்பகமான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வெளிப்பட்டதாக இல்லை. அவைகளின் நோக்கமெல்லாம் தேர்தலில் அதிகளவு வாக்குகளை பெறுவதே. ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் இரு கட்சிகளும் அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளைப் புறக்கணித்துள்ளன. குறிப்பாக ஆட்சி அமைத்தால் அவர்கள் எதிர்கொள்ள நேரும் நிதி நெருக்கடிகள், பொருளாதார வளங்கள் மிகவும் குறைவாகவும் வரையறைக்குட்பட்ட அளவிலுமே காணப்படுகின்றன என்பதை இந்தக் கட்சிகள் உணர வேண்டும். வளங்களுக்கான வழிமுறைகளை வகுக்காமல் திட்டமிடுவதானது சாத்தியமற்றதாகவும் செயற்படுத்த முடியாததாகவும் ஆகிவிடும். அது பொருளாதாரத் தோல்வியிலேயே கொண்டுபோய்விடும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சிந்தித்து செயலாற்றுவதே நன்று

கடவுள் இருந்தால் அவரை நாம் காணவேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படியில்லை யென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல். உலகின் குறைகளைப் பற்றிப் பேசாதே. குறைகளைக் கண்டு வருத்தப் படு, எங்கும் நீ குறைகளைக் காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகைத் தூற்றாதே. குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை மேலும் பலவீனப்படுத் தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா? செயல் நன்று, சிந்தித்துச் செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங் களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலி லும் இரவிலும் உன் முன் நிறுத்து. அதிலிருந்து நற் செயல்கள் விளையும்.

## நாளை

ஆடி-22
வெள்ளிக்கிழமை
07.08.2015

திதி: அட்டமி
மு.இ. 11.25 வரை
நட்சத்திரம்: பரணி
மு.இ.11.48 வரை
சுபநேரம்: 06.04–07.34 வரை
இராகுகாலம்:
10.34–12.04 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 35 |
| கத்தரி | 70 | 60 | 80 | 60 | 40–80 | 80 | 80 | 40 |
| கரட் | 160 | 120 | 90–200 | 120 | 180–200 | 200 | 180 | 150 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50–60 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 25 | 40 | 50 | 30 | 80–100 | 40 | 140 | 50 |
| பாகல் | 80 | 100 | 100 | 120 | 120–140 | 100 | 140 | 70–80 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 140 | 120 | 140 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 80 | 120 | 130 | 90 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 120 | 120 | 60–70 | 120 | 140 | 70–80 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 | 35–40 | 60 | 60 | 40 |
| தக்காளி | 120 | 120 | 140 | 100 | 110 | 140 | 130 | 90 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 50 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 30 | 30 | 10 | 20 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 150 | 250 | 200 | 280 | 400 | 250 | 150–180 |
| புடோல் | 50 | 50 | 50 | 40 | 40–60 | 60 | 60 | 50–60 |
| கோவா | 80 | 90 | 60 | 80 | 80 | 100 | 80 | 60–70 |
| வெண்டி | 50 | 50 | 50 | 40 | 60–80 | 60 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 160 | 160 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 160 | 100 | 80–100 | 200 | 200 | 85–90 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 40 | 40–60 | 40 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 90 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 40 | 70 | 90 | 50 | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 120 | – | 120 | 160 | 160–200 | 200 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | 120 | 200 | 160 | 140 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 120 | 60 | 140 | 130 | 140 | 80 |

## உடல் நிறையைக் குறைக்கும் வெந்தயம்

வெய்யில் காலம் ஆரம்பித்த நிலையில் உடல் வெப்பமும் அதிகரித்து விடுகிறது. அப்போது வெந்தயத்தை அதிகம் சாப்பிடு வோம். ஏனென்றால் வெந்த யம் உடலுக்குக் குளிர்ச்சி யைத் தரும் என்பதால். இதற்கு இன்னொரு குணமும் இருக் கிறது.

வெந்தயம் நிறையைக் குறைக் கும். இதனைச் சாப்பிடுவதால் உடலை வருத்தி உடற்பயிறசி செய்யாமல் நிறையை எளிதா கக் குறைக்கலாம்.

வெந்தயத்தில் நார்ச்சத்து அதிக மாகவும், கலோரி குறைவாக வும் உள்ளது. இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இரத் தக் கொதிப்பு மற்றும் உடலில் சர்க்கரையின் அளவைக் கட் டுப்படுத்துகிறது. மேலும் வெந் தயத்தில் காபோவைதரேற் குறைவாக உள்ளதால், நிறை அதிகரிக்க வழி இல்லை. மற் றும் உடலில் கலோரி குறை வாக இருந்தாலும் நிறை அதி கரிக்காது.

இரவில் ஒரு கரண்டி வெந்தய விதையை நீரில் ஊற வைத்து, காலையில் சுடு தண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால், உடலில் உள்ள நச்சுப் பொருள் களை வெளியேற்றுவதோடு, உடல் நிறையையும் குறைக்கும். வெந்தய விதையை சாதாரண தண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால், உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைப்ப தோடு, ஜீரண சக்தியும் கூடும். வெந்தய விதையை பொன் னிறமாக வறுத்து அதைப் பொடி யாக்கி, காற்றுப் புகாத ஒரு டப்பாவில் வைத்து, உண்ணும் உணவில் கலந்தும் சாப்பிடலாம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 250 | 450 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 700 | 600 |
| பாரை | 700 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 600 | 600 | 500 | 650 | 700 | 550 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 450 | 350 |
| விளை | 700 | 450 | 450 | 550 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 550 | 800 | 700 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | 450 | – | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | 350 |
| நகரை | 200 | 300 | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 150 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 350 | – | 300 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 300 | 150 |
| பாலை | 400 | 200 | 150 | 400 | 400 | – |
| வாழை | 100 | 230 | 200 | 300 | – | – |
| கொய் | 100 | 200 | – | 120 | 50 | – |
| மதனம் | 150 | 350 | 400 | 300 | 350 | 280 |

## முக்குணங்களின் தாக்கத்துக்கு உள்ளாகும் எமது பார்வை

நாம் எமது கண்களை ஆராய்ந்து பார்த்தால் எமது கண்களின் வெளி விளிம்பு சிவப்பு நிறமாக இருப்பதைக் காணலாம். இது ராட்சத குணத்தை எடுத்துக் காட்டுகின் றது. அதனை அடுத்து இருக்கும் வெண்படலம் சாத்துவ குணத்தைப் பிரதிபலித்து நிற்கின்றது. கண்ணின் மையத் தில் கறுப்பு வட்டம் இருக்கின்றது. இது தாமத குணத்தைக் குறிக்கின்றது. அவ்வாறாக எமது பார்வை மூன்று வர்ணங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. சிவப்பு, வெள்ளை. கறுப்பு இவை முக்குணங்களை விளக்கு கின்றன. ஆகவே எமது பார்வை முக்குணங்களா லும் தாக்க முற்றதாகவே இருக்கின்றது.



**சாயி சிந்தனை**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | 9 | | 4 | | |
| 9 | 7 | | | | | | | |
| | | 2 | | | 8 | 1 | | |
| | 1 | | | 7 | 4 | 2 | | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 6 | 3 | | | 9 | |
| | | 1 | 5 | | | 3 | | 4 |
| | | | | | | | 2 | 8 |
| | | 4 | | 6 | 3 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்



**தேனீ போல் சுறுசுறுப்பாக இயங்க வைக்கும் - E**

அடுத்தவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ, தாராளமாக ஆலோசனைகளை அள்ளி வழங்கும் இவர்கள், அதிக சுதந்திரத்தை விரும்புவர். எதையும் உடனே கிரகித்துக்கொள்ளும் இவர்களின் முதல் எழுத்தில் சூரியக்கதிர்கள் படுவதால், எப்பொழுதும், சுறுசுறுப்பாக இருப்பர். தங்களைப் பற்றித் தாங்களே எதையாவது பெருமையாகவோ, தன்னடக்கம் உள்ளவர் போலவோ பேசிக்கொண்டிருப்பார்கள். மிகச் சீக்கிரமாக முன்னேறும் வழியைத் தேடுவதில் முனைப்பாக இருப்பர். எதிலும் மிகுந்த கவனத்துடன் செயற்படும் இவர்கள் கோபப்படாமல் தாம் எண்ணுவதைச் செயலுக்குக் கொண்டுவந்து விடும் திறமைசாலிகள். இவர்களுக்கு என்று ஒரு கூட்டமுண்டு. ஏதேனும் ஒரு காரியம் செய்து இவர்கள் பெயரை நிலைக்க வைத்துக்கொள்வர். பிறர் கைவிட்ட பல காரியங்களைச் சிரமேற்கொண்டு எடுத்துச்செய்து வெற்றியும் அடைந்துவிடுவர். நலிந்துபோன பல நிறுவனங்களை இவர்களிடம் நம்பி ஒப்படைக்கலாம். அடுத்தவரிடம் வேலை செய்வதை விட சொந்தத் தொழில் செய்து பெரும் பொருளீட்டவே விரும்புவர். இவர்களின் ஜாலமான பேச்சு வாடிக்கையாளர்களைக் கவரும். புதுப்புது யுக்திகளைக் கொண்டு வெற்றி பெறுவதால் சிலர் வலிய வந்து இவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுப் பயனடைவர். சில வேலைகளில் வெற்றி பெற இயலாதபோது மனம் நொந்து போவர். ஆயினும், சுதாகரித்துக்கொண்டு மீண்டும் முயற்சிப்பார்கள். இவர்களைப் பார்த்தால் எவருக்கும் ஒரு சுறுசுறுப்புத் தொற்றிக்கொள்ளும். அந்த வகையில் இவர்கள் மானிடத் தேனீக்களாவர். நாட்டுநலனில் அக்கறை இல்லாதவர்களை ஓரங் கட்டிவிடுவர். இவர்களின் மனம் விக்கிரமாதித்தனின் வேதாளம் போன்றது. ஏதேனும் ஒரு துறையில் கவனம் செலுத்தினால் இவர்கள் வெற்றியடை வதைத் தடுக்க முடியாது. இவர்கள் திறமையை எவர் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்ததுபோல்தான். தூக்கத்தையும், சோம்பேறித் தனத்தையும் வெறுப்பர். பகல், இரவு பார்க்காமல் உழைக்கும் இவர்கள் உடம்பையும் பேணுவது நலம். காதலில் அதிக விருப்பமிருக்கும். எந்த ஊர், நாடு சென்றாலும் இவர்களுக்கு என்று ஒரு நட்பு வளையத்தைத் தக்கவைப்பதில் இவர்களுக்கு நிகர் இவர்களே. எதையும் சிந்தித்துச் செயற்படும் இவர்கள் இரகசியங்களை மட்டும் பிறரிடம் கொட்டிவிடுவர். அடுத்தவரை உற்சாகப்படுத்தி வாழ்வில் முன்னேறச் செய்வர்.

வயிறு அடிக்கடி சேஷ்டை செய்யும். மனமும், உடலும் எப்பொழுதும் பரபரப்பாக இயங்குவதால் உடம்பு உஷ்ணத்தால் குழப்பமடையலாம். இயல்பாகவே ஞானம் பெற்ற இவர்களின் முதல் எழுத்து, வாழ்வின் உச்சத்துக்கு இழுத்துச் செல்லும் என்பது உறுதி. கலைத்துறையில் ஜொலிக்கும் வல்லமையுடைய இவர்களுக்கு ஞானமும், தியானமும், யோகமும் கைவந்த கலைகள். அடுக்குமாடிக் கட்டடம்போல், புதுப்புதுத் திட்டங்களைத் தனது மனதில் அடுக்கி வைத்துக் கொண்டேயிருக்கும் இவர்களை ஒரு சரித்திரப் பெட்டகம் என்றே அழைக்கலாம். இவர்களால் நண்பர்கள் கூட்டம் நிறையப் பயன் அடையும். ஏதேனும் ஒரு வழியில் எளிதில் மற்றவரைத் தன்வசப்படுத்திவிடும் இவர்கள், எல்லாரிடமும் வளைந்து கொடுத்துப் போகும் பக்குவமுடையவர்கள்.

# பெண்களின் அன்பை பெற வழிகள்

பெண்களின் மனதைப் புரிந்து கொள்ள எவராலும் இயலாது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. ஆண்களின் எண்ணங்களுக்கு நேர் மாறாக சிந்தித்து அவர்களைத் தங்கள் பின்னால் அலைய விடுவது பெண்களுக்குப் பிடித்தமான விடயம்.

பெண்கள் விரும்புவது பாதுகாப்பு உணர்வைத்தான், தந்தை, கணவர், மகன், என எந்த ஆணாக இருந்தாலும் தனக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதேபோன்று தோள் சாயும்போது தோழனாகவும், மடி சாயும்போது தாயுமானவனாகவும் இருக்கும் ஆண்களுக்கு மட்டுமே பெண்களின் மனதில் இடமுண்டு.

பெண்களைச் சந்திக்கும்போது தோற்றத்தில் கவனம் தேவை. முதன் முதலில் உங்களைப் பற்றிய ஒரு எண்ணத்தை உருவாக்கக் கூடிய அந்தத் தோற்றம்தான் பெண்களின் மனதைக் கவரும் என்கின்றனர் அனுபவசாலிகள். அதற்காக மிகைப் படுத்தப்பட்ட அலங்காரமோ, செயற்பாடுகளோ தேவையில்லை. சுத்தமாக இருங்கள். அத்தகைய ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

பணமும், விலை உயர்ந்த பரிசுப் பொருள்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று ஆண்கள் தவறாக கணக்குப் போடுகின்றனர். நீங்கள் பணத்தினால் பெண்களைக் கவர முயலும் பட்சத்தில் உங்களை விட உங்கள் பணத்தின் மீதுதான் பெண்களின் கவனம் இருக்கும். ஆகவே உண்மையான புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தைப் பெற முயற்சி செய்வதே சிறந்த வழி.

எப்பொழுதாவது பேசுவதைவிட அடிக்கடி விசாரியுங்கள். தனிப்பட்ட முறையிலோ, குடும்ப ரீதியாகவோ பேச்சு இருக்கட்டும். அடிக்கடி அவர்களுக்காக நேரத்தைச் செலவிடுங்கள். பெண்களுக்கு உணர்வு ரீதியான செயற்பாடுகள் பிடிக்கும். அதைச் சரியாகப் புரிந்து கொண்டு செயற்படும் ஆண்களுக்கு பெண்களின் மனதில் எப்போதும் இடமுண்டு.

எதையும் வெளிப்படையாகப் பேசுங்கள். மனதில் எதையும் வைத்துப் பேசாமல் கண்களுக்கு நேராக அதைத் தெரிவிக்கும் ஆண்களைத் தான் பெண்களுக்கு அதிகம் பிடிக்கும். எப்பொழுதும் நேர்சீரான செயற்பாடுகளு டன் நடந்து கொள்ளும் ஆண்களால் தான் எளிதில் பெண்களின் இதயத்தைக் கவரமுடியும்.

பெண்களைக் கவருவதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அனேக வேடங்களைப் போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பை பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேகமான ஆண்களின் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது. உண்மையாக இருந் தால் மட்டுமே பெண்களை எளிதில் கவரமுடியும்.

பெண்களைக் கவர வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப் படுத்திப் பேசாதீர்கள். நிறையப் படித்து ஞானத்தோடு பேசுங்கள். இதுபோன்ற செயற்பாடுகளால் மட்டுமே பெண்களின் மனதைக் கவர முடியும்.



இனியவள்

> பெண்களைச் சந்திக்கும்போது தோற்றத்தில் கவனம் தேவை. முதன்முதலில் உங்களைப் பற்றிய ஒரு எண்ணத்தை உருவாக்கும் அந்தத் தோற்றம்தான் பெண்களின் மனதைக் கவரும் என்கின்றனர் அனுபவசாலிகள்.



# அதிபர் ஆசிரியர்களுடன் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.6
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆனைப்பந்தி நாவலர் கல்வி நிலையத்தில் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினும் கலந்து கொள்ளவுள்ளார். இதில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பாகவும், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாகவும், அதிபர் இட மாற்றங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. இதில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை தெளிவுபடுத்த முடியும் என்று சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# நல்லூர் கந்தன் உற்சவம் 19ஆம் திகதி ஆரம்பம்

வரலாற்றுப்புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14.09.2015 ஆம் திகதி திங்கட்கிழமை வரை 26 தினங்கள் நடைபெறும். ஆலய உற்சவத்தின் விசேட தினங்கள் வருமாறு:-
19.8.2015 புதன்கிழமை கொடியேற்றம் மு.பகல் 10 ணி (1ஆம் திருவிழா)
28.8.2015 வெள்ளிக்கிழமை மஞ்சம் மாலை 5மணி(10ஆம் திருவிழா)
03.09.2015 வியாழக்கிழமை அருணகிரிநாதர் உற்சவம் மாலை 6மணி(16 ஆம் திருவிழா)
04.09.2015 வெள்ளிக்கிழமை கார்த்திகை உற்சவம் மாலை 5மணி (17 ஆம் திருவிழா)
06.09.2015 ஞாயிற்றுக்கிழமை சூர்யோற்சவம் காலை 7மணி(19 ஆம் திருவிழா)
07.09.2015 திங்கட்கிழமை சந்தானகோபாலர் உற்சவம் காலை 7மணி, கைலாசவாகனம் மாலை 5மணி(20 ஆம் திருவிழா)
08.09.2015 செவ்வாய்க்கிழமை கஜவல்லி மகாவல்லி உற்சவம் காலை 7மணி, வேல்விமானம் மாலை 5மணி(21 ஆம் திருவிழா)
09.09.2015 புதன்கிழமை தண்டாயுதபாணி உற்சவம் காலை 7மணி, ஒருமுகத் திருவிழா மாலை 5மணி (22 ஆம் திருவிழா)
10.09.2015 வியாழக்கிழமை சப்பறத் திருவிழா மாலை 5மணி(23 ஆம் திருவிழா)
11.09.2015 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழா காலை 7மணி(24 ஆம் திருவிழா)
12.09.2015 சனிக்கிழமை தீர்த் தோற்சவம் காலை 7மணி(25ஆம் திருவிழா)
13.09.2015 ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழா மாலை 5மணி (26ஆம் திருவிழா)
14.09.2015 திங்கட்கிழமை வைரவர் உற்சவம் மாலை 5மணி(27 ஆம் திருவிழா) (ந-7)

## கருங்குளவிகள் கொட்டியதில் ஆறு பேருக்கு பாதிப்பு

தென்மராட்சி, ஓக.6
ஆலய பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டோரைக் கூட்டமாக வந்த கருங்குளவிகள் தாக்கின. அதில் பாதிக்கப்பட்ட இரு பெண்கள் உட்பட ஆறுபேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வரணி நாவற்காட்டில் இடம் பெற்றுள்ளது.
அங்குள்ள ஆலய மொன்றில் பொங்கல் திருவிழா இடம்பெற்ற போது பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். திடீரென கூட்டமாக வந்த கருங்குளவிகள் ஆலயத்தில் நின்றோரைக் கண்டபடி தாக்கின. இதனால் ஆலயத்தில் நின்ற அனைவரும் அங்கிருந்து சிதறியோடினர்.
இதே இடத்தைச் சேர்ந்த இராசையா செல்வராஜா (வயது-55), தெய்வேந்திரம் சாந்தகுமாரி (வயது-54), ஜீவரத்தினம் சின்னப்பிள்ளை (வயது-55 ), பாலசிங்கம் இராசம்மா (வயது-60), சபாபதிப் பிள்ளை மகாதேவன் (வயது-60), சின்னத்தம்பி அரியநாதன் (வயது-70) ஆகியோரே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டவர்களாவர். (ந-9)

# கசிப்புடன் சிக்கிய பெண்ணுக்கு ரூபா ஒரு லட்சம் அபராதம்

தென்மராட்சி, ஓக.6
கசிப்பு வைத்திருந்த பெண்ணொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 2ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா உபகரணங்களை வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட் டிருந்தது. குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய இரு குற்றங்களுக்காக தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா மூன்று மாதங்கள் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ந-9)

## தென்மராட்சியில் வெற்றிலை விலை அதிகரிப்பு

தென்மராட்சி, ஓக.6
தென்மராட்சி பிரதேச சந்தைகளில் வெற்றிலையின் விலை திடீரென அதிகரித்துள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் 80 சதமாக விற்பனை செய்யப்பட்ட வெற்றிலை நேற்று மூன்று ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.
இது தொடர்பாக வெற்றிலை வியாபாரிகளுடன் தொடர்பு கொண்ட போது, கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் வெற்றிலையின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் வெற்றிலையின் விலையை அதிகரிக்க வேண்டி நேர்ந்துள்ளது என்று தெரிவித்தனர். (ந-9)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**தேவை**
கொழும்பில் உள்ள வீட்டிற்கு பணிப்பெண் தேவை. வயது 25 - 45 சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு : 077 030 3982

**வேலைக்கு ஆள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு காசாளர், சிட்டை எழுதுநர் போன்றவற்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. O/L, A/L படித்தவர்கள் மட்டும். தொடர்பு : 077 336 3766

**வீடு வாடகைக்குண்டு**
செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகத்தில் நல்ல நிலையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது.
தொடர்பு : 077 938 5787
075 550 7911

**வாடகைக்கு வீடு தேவை**
3 பேரைக் கொண்ட அரச ஊழியரின் குடும்பத்துக்கு வீடு அல்லது தனியான அனெக்ஸ் நல்லூர்/ திருநெல்வேலிப் பகுதியில் தேவை.
தொடர்பு: 077 642 0210
(60612)(9.3)

**பெயர்மாற்றம்**
இல.99, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய **திரேசம்மா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **திரேசா** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
- திரேசா

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி சாஸ்ஸ் அக்கடமி ரியூசன் சென்ருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: நரேஷ் 077 446 9371
சந்திரதாசன் 077 610 6760
சிவா (416) 845 8509
(60612)(9.3)

**அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை விசேட பொதுக்கூட்டம்**
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 09.08.2015ஆம் திகதி எமது மகாசபையின் விசேட பொதுக்கூட்டம் சன்மார்க்க ஐக்கிய வாலிப சங்க மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு மகாசபையின் முன்னாள் இந்நாள் உறுப்பினரையும், நலன் விரும்பிகள் அனுதாபிகள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.
ரி.ஜே. அன்ரனி பொதுக்காரியதரிசி
(அ.இ. சி. தமிழர் மகாசபை)

**சேவைநலன் பாராட்டு**


**வேலுப்பிள்ளை மகேசன்**
(பயிற்றப்பட்ட கணிதபாட ஆசிரியர்)
தனது 60 ஆவது வயதில் 31 வருட ஆசிரிய சேவையில் 5 வருடங்கள் எமது பாடசாலையில் கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றி, நல்வழி புகட்டி இன்று ஓய்வுபெறும் எமது ஆசிரியர் வேலுப்பிள்ளை மகேசன் அவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுகாலம் ஆரோக்கியமாகவும், சிறப்பாகவும் அமைய இறைவனை வேண்டி நீடூழி வாழ மனமார வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்.
(60673)(45.7.3)

**பாதுகாப்பு சேவை ஊழியருக்கான உடனடி வேலைவாய்ப்பு**
அங்கர் செக்குருட்டி சேவிஸ்
(Anchor Security Service) நிறுவனத்தின் கீழ் யாழ்ப்பாண நகர பகுதிகளிலே பாதுகாப்பு ஊழியர்களாக வேலை செய்ய விரும்பும் 20 - 65 வயதிற்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியமும் ஒழுக்கமும் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
* பதிவுத்தாபலில் சுயவிவரக் கோவையினை கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பவேண்டும்.
* 13.08.2015 இற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு அனுப்பவேண்டும்.
* வேலைக்கு அழைக்கும்போது கிராம அலுவலரின் நற்சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

முகவரி: Anchor security Service,
No.225B, Station Rd,
Kurumankadu,
Vavuniya.
T.P. 077 239 2850,077 320 6484
(45.3.6)(61143)

**University of Jaffna – Sri Lanka**
**Faculty of Management Studies & Commerce**

**Postgraduate Diploma in Management (PGDM)**
**Leading to the Degree in Master of Business Administration (MBA)**
**Intake II – 2015/2016**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Postgraduate Diploma in Management (PGDM) for the academic year 2015/2016 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: *http://www.jfn.ac.lk/maco*

**ELIGIBILITY REQUIREMENTS**
1. Graduates in any discipline in any recognized University.
OR
2. Professional Qualifications with five years experience.
OR
3. Any other qualifications and/or experience, which would be acceptable to the selection board with the approval of the Senate.

**PROGRAMME STRUCTURE**
Structure - Semester based Course Unit System
Semester duration - Each semester extends for 20 weeks
Duration - Two years
Medium of instruction - English

**COURSE FEE**
Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 (PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

**Application Fees: LKR 2000/=**

**APPLICATION PROCEDURE**
Application form & Paying in voucher can be downloaded from the Faculty website at ***http://www.jfn.ac.lk/maco*** or obtained from **Dean, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli, Jaffna**, by sending a self addressed stamped envelope 100 x 225mm in size. **The closing date for applications will be 10.09.2015.** Please forward complete application form to the above address and indicate **"Application for MBA"** in the top left hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**

# நாளை வெளிவருகின்றது




TOP 4 in July

ஆகஸ்ட் 23
40 எதிர் பார்க்கை வினாக்கள்

ரூபா 75

அரசியலோ பாலியலோ கலக்காத
ஒரு பரிணாமப் படைப்பு




சுயதொழில் கலைகள்

இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## ஆகஸ்ட் மாத அறிவுப் பயணத்தில்

* நல்லதோர் உலகம் அமைத்து நற்பிரஜைகளை உருவாக்குவோம்!
* மலரப்போகும் நல்லாட்சிக்கான தீர்ப்பை எழுதுங்கள்
* ஹஜ்ஜின் மாண்புகள்
* நெடுந்தொடர்
* சுவாசிப்பின் வாசிப்பு
* எதிர்கால சந்ததியின் வெற்றிக்கு நல்வழிகாட்டும் பாடசாலைச் சமூகம்
* சொர்க்கமே கவிழ்ந்ததுபோல் சோபிக்கும் ஒளிஅரசி
* ஒரு மெழுகுவர்த்தியாய்...
* பெண்கள் வரலாற்றில் கெர்டா லெர்னர்
* குருடன் கேட்ட வரம்!
* மாதா, பிதா, குரு, தெய்வம்
* யானையை அடக்கிய அரியாத்தையின் வழியில்
* எல்லே விளையாட்டில் தேசிய சாதனை நோக்கி மணற்காடு றோமன் கத்தோலிக்கத் த. க. பா.
* தீயே! உனக்கு தீராப்பசியோ?
* பூசாரிக்குள் இருந்த பூதம்
* குறைந்த சக்தியில் தானியங்கி இயந்திரம் கண்டுபிடிப்பு
* பரதக்கலை ஒரு தெய்வீக சுக அனுபவம்
* பச்சைக் கம்பளம்மேல் தூங்கும் விவசாயிகள்...
* உங்களை நம்புங்கள்; உங்களால் அனைத்தும் முடியும்
* வெற்றிகரமான வாழ்க்கைக்கு தேவையானது உடல் வலிமையா? மனவலிமையா?
* சாதனை - விநோதம் - பெண்கள்
* கௌரவமான ஆசிரியத்துவத்தை இழிவுபடுத்தலாமா?
* வாக்குவாதம் செய்யாத நேரம் என்ன?
* மனம்விட்டுப் பேசினால் காதல் பன்மடங்காகும்
* விஞ்ஞானியான வேலைக்காரி
* இசைக் கோகிலம்...
* மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?

## இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன்

## உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு:
0718 628379 / 011 5737592

வடமாகாண தொடர்புகளுக்கு :
077 6569617 / 077 2772726



# ஆங்கிலம்

மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கானது.

3 வது பயிற்சிநெறி ஆரம்பம் : 08.08.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

யாழ்நகர் 021 320 33 13
நெல்லியடி 021 3200 607

SAMSON

17, ஆஸ்பத்திரி வீதியும், யாழ்நகர். 077 621 4567 021 320 3313



வேலை தேடிக் களைத்து விட்டீர்களா?
கவலையை விடுங்கள் !

வேலை தேடுபவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கு

## WINSTAR JOB BANK

(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)
நீங்கள் விரும்பும் உங்கள் தகுதிக்கேற்ப தனியார் வேலையினைப் பெற்றுக் கொள்ள WINSTAR தொழில் வங்கியை உடன் நாடுங்கள்.

- Accounting
- Receptionist
- Office Admin
- Management
- Security
- Part time Jobs

நீங்கள் பல காலமாக தேடிக்கிடைக்காத வேலையினை, நாம் சில காலங்களில் தேடித்தருகின்றோம்! உங்கள் சுயவிபரக் கோவையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

WINSTAR JOB BANK
106, தபால் பெட்டி சந்தி,
திருநெல்வேலி.
10.00 am 4.00 pm
021 320 2789



# VACANCY

## Accounts Trainees (Female)

*Harikanan Printers* is a leading regional business service provider of document and information management, printing and out sourcing solutions. We are currently looking for suitable candidate for above position.

*Pre Requisite*

- A/L in commerce stream
- Should be literate
- Honest and Good Communication Skills
- Be a Good Team Player
- Committed Worker

Walk in Interview
07-08-2015 to 10-08-2015

Harikanan
PRINTERS OF THE NORTH
www.harikanan.com print@harikanan.com

Head Office:
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
+94 21 222 2717|8



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



## வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி .....

புதிதாக திறக்கப்பட்டுள்ள Granton Advertising நிறுவனத்தின் நாடு முழுவதுமுள்ள கிளைக் காரியாலயங்களுக்கு பிரதேச விற்பனை முகவர்கள் மற்றும் பலர் தேவை.

- தகைமை - O/L OR A/L
- வயதெல்லை - 18 - 35
- பயிற்சியின்போது - Earn 12000/= - 15000/=
- பயிற்சியின் பின்னர்- பதவிக்கேற்ப கொடுப்பனவு குறைந்தது(45000/=)

தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம் (63829)

இன்றே தொடர்புகளுக்கு 077 445 8134
(உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள்)
இல 225, 3ஆம் குறுக்குத்தெரு, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.



## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் 18 - 50 வயது ஆண், பெண் இருபாலாருக்கும் டொபி, பிஸ்கட், டைல், காமென்ட், கிளவுஸ், Paint போன்ற தொழிற்சாலைகளில் மற்றும் மேசன், லேபர், இலக்றீசியன், பெயின்டர், பாதுகாப்பு உத்தியோகஸ்தர் போன்ற பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள். சம்பளம் 18000/= - 38000/= உணவு தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: 077 496 9340
071 208 3857
(61145) (3.9.6)



## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். (உணவு பரிமாறுபவர்கள்)

தொடர்பு : 077 892 8619
077 838 5106



## பணிப்பெண் தேவை

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் சுகவீனமாக இருக்கும் ஒரு பெண் நோயாளரை பாரமரிக்க பணிப்பெண் தேவை.

தொடர்பு : 076 807 8985



## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி (Fridge), காஸ் குக்கர் (Gas cooker), ஜெனரேட்டர் என்பன விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:
0773758895, 0212221366
129, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## வேலைவாய்ப்பு

ஆண், பெண் இருபாலாரும் தனியார் தொழிற்சாலைகள் கட்டட நிர்மாணத்துறை மற்றும் உங்கள் தகைமைக்கேற்ப தொழிலை பெற உங்கள் வயது எதிர்பார்க்கும் தொழில் என்பவற்றை SMS செய்யுங்கள். 077 496 9357

Email Id - Aathyjobs@gmail.com

தொடர்பு: 077 496 9340 (61146) (3.9.6)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **மாணிக்கம் செல்வராசா**

மண்ணில் 18.10.1947 — விண்ணில் 18.07.2014

ஆண்டு ஒன்று ஆகிவிட்ட போதிலும்
அப்பாவே உங்கள் அன்புத் தோற்றம்
மறக்க முடியவில்லை ஐயா
ஈர விழி கலங்கி நிற்கின்றோம்
உங்கள் பாதம் இறைஞ்சி
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்ப விளக்கின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்-
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01.10.1936

மறைவு 16.08.2014



### அமரர் கதிரேசன் ஜானகி

கடந்த 16.08.2014 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (06.08.2015) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மகள் - சவுந்தரி, மகள் - நிலந்தரி,
மகன் - யோகராசா
077 168 8509

67, மண்பிட்டி,
நாவாந்துறை.
(63822) (45.3.7)

# திருநினைவேந்தி

## பதின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு **பொ. சங்கரப்பிள்ளை**

(அதிபர் சேவை தரம் -I)
(முன்னாள் அதிபர், யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்
அகில இலங்கை சமாதான நீதிவான்)

திதி: அபரபக்க ஸப்தமி (06.08.2015)

உதயம் 01.07.1938 — அஸ்தமனம் 11.08.2001

கருணையும், வாஞ்சையும், சுடு சொல்லறியா திருவாயும்
சொந்தமாகக்கொண்ட எங்கள் பாசத் தந்தையே!!
இறைவனை நாம் கண்டதில்லை........ என்றும் எம் இறையாகி இருப்பவரே!!!
வேதம் நான்கிலும் சொல்லாத அன்பை வாழ்வின்
சுருதியாய் வரிந்து கொண்டவரே!!!
நீதிப்பெருங்கனலாய், நின்றெரிந்து வாழ்வுப் பெருவெளியில் தடம் பதித்து
மானிடத்தை நேசித்த திரு ஒளியே....! எங்கள் வாழ்வின் பெரும் தவமே!!
எங்கள் உறவுச் சேனையின் பார்த்திபரே!
எதிரியற்ற வாழ்வின் திருமுகமே!
அனைவரையும் அரவணைத்த ஆளுமையே! மெய்யுருகி.
விழிபனிக்க கரமெடுத்து
தலைசாய்த்துத் தொழுகின்றோம்!தந்தையே!
ஆசீர்வாதம் தந்தருள்க........

உடுத்துறை தெற்கு,
தாளையடி.

அன்பு மனைவி
பாலகு சகோதரர்,
ஆசை மகள், மருமகன்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

# பாதாள உலகக் குழுக்களுக்கு ரவியும் ஜோனும் முழு ஆதரவு

### குற்றம் சாட்டுகிறது ஐ.ம.சு.மு.

கொழும்பு, ஒக. 06
மஹிந்த ஆட்சிக்காலத்தில் ஒடுக்கப்பட்டிருந்த பாதாள உலகச் சண்டியர்களுக்குக் கொழும்பில் ரவி கருணாநாயக்கவும், வத்தளையில் ஜோன் அமரதுங்கவும் ஆதரவு வழங்குகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, வத்தளையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி பதில் கூறவேண்டும் என்றும் வலியுறுத்தியது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுசில் பிரேமஜயந்த, திலங்க சுமதிபால மற்றும் கம்பஹா மாவட்ட ஐ.ம.சு.மு. வேட்பாளர் நௌஷாட் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

நேற்று காலை 6 மணியளவில் வத்தளை, மாபோலையில் எனது ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இவருக்கு ஏற்கனவே உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. வத்தளையில் ஐ.தே.க. தவிர்ந்த மாற்றுக் கட்சிகளுக்கு அரசியல் செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளது. பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன் அமரதுங்க வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர். இருந்தபோதிலும் இப்பிரதேசத்திலேயே பாதாள உலகக் கோஷ்டியினரின் அச்சுறுத்தல் அதிகளவில் காணப்படுகின்றது. தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸார் இந்த விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும்" என்று தெரிவித்தார் முன்னாள் வத்தளை மாநகர பிரதி மேயரும், ஐ.ம.சு.முவின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான நௌஷாட்.

புளுமெண்டல் துப்பாக்கிச்சூடு தொடர்பில் உங்களிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என ரவி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் என்ன கூறுகிறீர்கள்" என்று திலங்க சுமதிபாலவிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

புளுமெண்டல் துப்பாக்கிப் பிரயோகத்தில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் ரவியுடனேயே இருக்கின்றனர். சம்பவ தினம் சங்க மற்றும் ஆமி சம்பத் ஆகியோர் ரவியுடன் இருந்துள்ளனர். அது மட்டுமல்லாது, மீட்கப்பட்ட கார் ரவியின் ஆதரவாளர் ஒருவருடையதாகும். அவரும் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்பதுடன் அண்மையில் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். மஹிந் தவின் காலத்தில் நாட்டை விட்டுச்சென்ற பல பாதாள உலகக் கோஷ்டியினர் ஜனவரி 8ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கள் பயன்படுத்துகின்றனர்.

கொழும்பில் ரவியும், வத்தளையில் ஜோனும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு ஆதரவு வழங்கிவருகின்றனர். இதனால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் தொடர்பில் பொலிஸார் இதுவரையில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியங்கள் பல இருந்தும் பட்டப்பகலில் நடந்த புளுமெண்டல் துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்ய முடியாதுள்ளது.

இது தொடர்பில் என்னிடம் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ளவேண்டுமாயின் அதற்கு அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவதுடன் வீடியோ ஆதாரங்களுடன் ரவி, பாதாள உலகக் கோஷ்டியினருடன் இருப்பதை நான் வெளியிடுவேன்" – என்றார்.

அதேவேளை, எதிர்வரும் தினங்களில் மஹிந்த உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது பொய்ப் பரப்புரைகள், குற்றச்சாட்டு களைச் சுமத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டம் தீட்டியுள்ளது. அது மட்டுமல்லாது, அண்மையில் பெரலஸ்கமுவ பகுதியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டு வந்தன. அதன் பின்னணியில் ஐ.தே.கவின் பிரபல உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டிருப்பதையும் நாங்கள் வெளிக்கொண்டுவந்தோம். அது மட்டுமல்லாது, ஐ.தே.க. பாதாள உலகச் சண்டியர்களுடன் இணைந்து இம்முறைத் தேர்தலில் வெற்றிகொள்வதற்கு முயற்சிசெய்து வருகின்றனர். எதிர்வரும் தினங்களில் பல அசம்பாவிதங்கள் இடம்பெறும் அபாயம் உள்ளது" என்று கூறினார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த. (த)

*தொடர்ச்சி*

## அபிவிருத்தி

அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள தாகத் தேர்தல் வன்முறைகளை கண் காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வவு னியா நெடுங்கேணி பிரதேசத்தில் முன்னாள் அமைச்சர் ஒரு வரின் ஆதரவாளர்கள் சிலர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டு மதிலில் சுவ ரொட்டிகளை ஒட்டும்போது குறித்த அபிவிருத்தி உத்தியோ கத்தருக்கும் ஆதரவாளர்க ளுக்குமிடையில் வாய்த் தர்க் கம் ஏற்பட்டுள்ளது. அதன் பின் னர் மிரட்டல் சம்பவமும் இடம் பெற்றதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப் பதற்கான நிலையத்தின் செயற் பாட்டு முகாமையாளர் சந்திர சேகரன் மணிமாறன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த *அபிவிருத்தி உத்தியோகத்தரை* தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பவம் நடைபெற்றது உண்மை எனவும், தான் ஒரு அரச அலுவலர் என்று தெரிந்தும் அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றும், இது தொடர்பாக உடனடியாகவே தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தினர், பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகவும் கூறினார். (த–21)

## நம்பகமான

மால்டாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஜோர்ஜ் அபேலா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது என்று பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்காணிப்பாளர்கள் பக்கச்சார்பற்ற வகையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கண்காணிப்பாளர்கள் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவுக்கு தேர்தல் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பார் கள். இந்த அறிக்கை இலங்கை அர சுக்கு பொதுச் செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## வன்புணர்வுக் குற்றச்சாட்டு; கைதாகினார் இளைஞன்

யாழ்ப்பாணம், ஒக. 6
சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சிறுமியையே குறித்த இளைஞர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த–4)

உதயன் advt@uthayan.com 0215671111

### கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி அ. கிளாறிஸ் நிரஞ்சனி அவர்களின் அன்புத்தாயார்

**கிறிஸ்தோபர் தேவரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம்.**

### மரண அறிவித்தல்

**நடராசா ரங்கநாதன்**

(கோட்டக்கல்வி பணிப்பாளர் - நெடுங்கேணி)

தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ரங்கநாதன் (கோட்டக்கல்வி பணிப்பாளர் நெடுங்கேணி) 05.08.2015 காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வமணியின் (ஆசிரியை இ.த.க. பாடசாலை) அன்புக் கணவரும் அனிருத்தா (யாழ் கலைப்பீடம் முதலாம் வருடம்), சயனுகா (A/L மாணவி வித்தியானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னட்டி ஐயாத்துரை

(இலங்கை மின்சார சபை ஊழியர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண் ட சின்னட்டி ஐயாத்துரை 03.08.2015 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி-கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் பூவிலிங்கம்-தங்கம்மா தம்ப தியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வர்களான இராசம், இன்பராணி, பூமணி மற்றும் அருமைத்துரை, புஸ்பராணி, தவமணி, இந்துராணி, சிலோன்மணி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் கலிஸ்ரன், கீர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோஜா வின்அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.08.2015 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து யாழ் அடைக்கலமாதா தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு மு.ப 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (63837)

தகவல் :-
குடும்பத்தினர்.
021 222 6135

### பொன்னையா புண்ணியமூர்த்தி



தோற்றம் 22.05.1937 மறைவு 04.08.2015

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் , கொழும்பு அளுத்மாவத்தை, கல்வியங்காடு ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையாபுண்ணியமூர்த்தி 04.08.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவளராணி (கொலண்ட்) காலஞ்சென்றவர்களான பரிமேலழகன், சத்தியமூர்த்தி மற்றும் மோகனராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் (கொலண்ட்) குகதாசன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சாருஜன், பௌர்ணிகா, கௌதம், ஓளசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகரத்தினம் மற்றும் பரமசாமி, காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் கிருஷ்ணமூர்த்தி காலஞ்சென்ற சிவகாமியம்மை ஆகியோரின் சகோதரரும் செல்வராசா, வசந்தன், தருமரெத்தினம், தவலெட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.08.06) வியாழக்கிழமை இல 68, செங்குந்தா வீதி, கல்வியங்காட்டில் அமைந்துள்ள வசிப்பிடத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக் கொள்ளவும்

தொ.பே.இல.
0771956276 - பவளராணி
0014166987025 - மோகனராணி

தகவல் :
குடும்பத்தினர்.

### பாசேந்திரம் ஜெயகோபால்

(கோபால் மாஸ்டர்)

(ஓய்வுநிலை ஹாட்லிக் கல்லூரி கணித ஆசிரியர்)



வட்டப்பாதி புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாசேந்திரம் ஜெயகோபால் 05.08.2015 புதன்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதப்பா பாசேந்திரம் தங்கம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும் கந்தசாமி திரவியம் தம்பதியரின் மருமகனும் விமலராணியின் அன்புக்கணவரும் கோபிகா, ஜனார்த்தனன் (Software Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையும் பயீஸ்சின் அன்பு மாமனாரும் நாதியா, யூசுப் ஆகியோரின் அன்புப் பேரனும் சேதுநாதர், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதாக ரனின் (புள்ளி விபர உத்தியோகத்தர், கச்சேரி) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2015) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு முற்பகல் 11.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராணி பவனம்
விஸ்வகுல ஒழுங்கை,
புலோலி வடக்கு, பருத்தித்துறை. (58506)

தகவல் :-
குடும்பத்தினர்.
021 226 5585

## சர்வதேசத்திடம்

கொண்டுள்ளனர் என்பதை பார்க்கிறேன். சர்வதேச சக்திகள் பூகோள, பிராந்திய, தேசிய பாதுகாப்புத் தொடர்பாக, எவ்வாறு சிந்திக்கின்றன என்பதை நானும் அறிவேன். சர்வதேச நட்பு நாடுகளின் உதவி இலங்கைக்குத் தேவை. அவர்களிடம் இருந்து நாம் தனிமைப்பட்டு செயற்பட முடியாது.

பொதுநலவாயம், ஐ.நா., சார்க், அமைப்புகளில் உள்ள எமக்கு சர்வதேச கடப்பாடுகள் உள்ளன. சர்வ தேச நிதி நிறுவனங்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறோம். எமக்கு சர்வதேச ஒத்துழைப்பு தேவைப் படுகிறது, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

## வட்டு. பெண்

பிரிவுப் பொலிஸாரால் நேற்று முற்பகல் கைது செய் யப்பட்டார். கைது செய்யப்பட்ட உடனேயே அவர் கொழும்புக்குக் கொண்ட செல்லப்பட்டுவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கார்த்திகா (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவரது சடலம் கொழும்பு புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தை தனியார் பஸ் நிலையத்தில், பயணப் பொதியிலி ருந்து கடந்த 29 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டது. அந்தப் பை சுமார் 3 அடி நீளம், 2 அடி அகலம் ஒரு அடி உயரமாக இருந்துள்ளமை சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. சடலம் மீட்கப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் அது தொடர்பான விசாரணை பொலிஸ்மா அதிபரால் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர். கொல்லப்பட்ட பெண்ணின் உறவினர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்திருந்த நிலையில், குறித்த பெண்ணுடன் காதல் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் நபருடன் குறித்த பெண் கடந்த 3 வருடங்களாகக் காதல் தொடர்பில் இருந்துள்ளார் என்று பொலிஸாரால் கூறப்படுகிறது.

தவிர சம்பவம் இடம்பெற்ற தினமன்று நள்ளிரவு குறித்த சந்தேக நபர் பெரியதொரு பயணப் பையைச் சுமக்க முடியாமல் சுமந்து மாடியிலிருந்து கீழே கொண்டு சென்று பின்னர் இழுத்துச் செல்கின்றமை சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளமை பெரியதொரு சான்றாக அமைந்துவிட்டது. அதில் குறித்த சந்தேகநபரின் அடையாளம் தெளிவாகத் தெரிகிறது என்றும் பொலிஸார் கூறியிருந்ததோடு சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் விரைவில் கைது செய்யப்பட்டுவிடுவார் என்றும் சில நாள்களுக்கு முன்னர் பொலிஸாரால் கூறப்பட்டிருந்தது. அதனடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான கிருஸ்ண சதீஸ் என்பவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

வத்தளையில் வாடகை வீடு ஒன்றில் அவர்கள் தங்கியிருந்தனர் என்றும், பின்னர் கடந்த ஜூலையிலிருந்து கொழும்பு செட்டியார் தெருவில் வசித்து வந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விடுதியிலும் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் பரிசோதனை மற்றும் விசாரணைகள் மேற்கொண்டிருந்தனர். அங்கு அவர்கள் சமையலுக்குத் தேவையான பொருள்களையும் கொள்வனவு செய்து வைத்திருந்துள்ளனர் என்பது தெளிவாவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதுமட்டுமன்றி செட்டியார் தெரு தங்குமிடம் கார்த்திகாவின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சதீஸ் என்பவருக்கு அடையாள அட்டை இல்லை என்றும் பதிவேட்டில் பதிவாகியுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை பஸ் நிலையத்தில் வைத்துவிட்டு குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார். அவரைப் பொலிஸார் தமது விசாரணை வலயத்தினுள் வைத்திருந்த நிலையில் மன்னாரில் வைத்து நேற்று அதிரடியாகக் கைது செய்தனர்.

அவர் தன்னை ஒரு மேசன் தொழிலாளியாக அறிமுகப்படுத்தியே மன்னார் சவரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அந்த வீட்டுக்காரருடன் தங்கியிருந்துள்ளார். அவர் சில நாள்கள் மேசன் வேலை செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. பின்னர் அவர் வீட்டில் தங்கிவிட்டார். பொலிஸார் அதனை மோப்பம் பிடித்துச் சென்று இனங்கண்டு கொண்டனர். நேற்றுக் கொழும்பிலிருந்து மன்னாருக்குச் சென்ற குற்றப் புலனய்வுப் பிரிவுப் பொலிஸார், அந்த வீட்டில் குறித்த சந்தேக நபர் மறைந்திருந்த வேளையில் கைது செய்தனர். கைது செய்து உடனேயே கொழும்புக்குக் கொண்டு சென்றுவிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## ஜனாதிபதித்

சந்திப்புகள் இடம்பெற்றதை அவர் உறுதிப்படுத்தும் அதேவேளை, மூன்றாவது சந்திப்பு ரகசியமானது, அது குறித்த விவரங்களை வெளியிட முடியாது எனவும் கூறினார்.

நாட்டில் ஜனாதிபதியாக உள்ளவர் எவ்வளவு முறை வேண்டுமானாலும் மீண்டும் அப்பதவிக்கு போட்டியிடலாம் எனக் கூறும் சர்ச்சைக்குரிய 18ஆவது சட்டத் திருத்தத்தை கொண்டு வந்ததையும் அவர் நியாயப்படுத்துகிறார்.

முதல் முறையாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்தார் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறும் குற்றச்சாட்டையும் மஹிந்த புறந்தள்ளுகிறார். தனது ஆட்சிக் காலத்தில் சில ஊழல் பேர்வழிகளை தான் காப்பாற்றியுள்ளதையும் பி.பி.சியிடம் அவர் ஒப்புக் கொண்டார்.

ஊடகவியலாளர்கள் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டதற்கும், பிரகீத் எக்னலிகொட காணமல் போனதற்கும் காரணமானவர்கள் தற்போதைய அரசில் உள்ளனர் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## மன்னார்

குறித்த வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிவான் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சார்பில் சட்டத்தரணிகளும், காணாமற் போனோரது பெற்றோர்களின் சங்கத்தின் சார்பிலான சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் இலங்கையில் பரிசோதனை செய்ய முடியாது. உலகத் தரம் வாய்ந்த தடயவியல் நிபுணர்களால் அந்த ஆய்வைச் செய்ய வேண்டும். அதற்கு அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலேயே அதனைச் செய்ய முடியும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

எனினும் காணாமற்போனோரது பெற்றோர் கொண்ட சங்கத்தின் சார்பில் முன்னிலையான வி.எஸ். நிறஞ்சன், சர்வதேச தடயவியல் நிபுணர்கள் பலர் உள்ளனர். அவர்களில் தாமாக முன்வந்து உதவுபவர்களும் உள்ளனர். அவர்களை அணுகி ஆய்வுக்கான உதவியைப் பெறலாம் என்று கருத்து முன்வைத்தார். மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் நேற்று சிரேஷ்ட சட்டத்தரணி சபுர்தீன் மற்றும் சிராய்வா ஆகியோரும் இந்த வழக்கில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

அதேவேளை தென்பகுதியில் புதைகுழி தோண்டிய பின்னர் தோண்டிய பொருள்களைப் பாதுகாத்து வைத்தல் பொறிமுறையில் சந்தேகம் ஏற்பட்டிருந்தது என்றும், இங்கும் அந்தப் பிரச்சினை எழலாம் என்பதனால் நிபுணர்களை அழைக்க வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

அந்த இடத்தில் மயானம் தான் இருந்தது என்று கூறி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த தவணைகளில் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். எனினும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்து திருக்கேதீஸ்வரம் கோயில் உள்ளது. அந்த இடத்தில் மயானம் இருந்திருக்கவில்லை. அப்படி இருப்பதாக இருப்பினும் சடலங்களை எரிப்பதாகவே இருந்திருக்குமே தவிர சடலங்களைப் புதைப்பதாக இருக்கமாட்டாது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

அது பற்றிய வாதப் பிரதிவாதங்களின் பின்னர் அந்தப் பிரதேசத்தில் ஆய்வு செய்ய வேண்டும் என்பதால் மனித நடமாட்டத்தைக் கட்டுப்படத்த வேண்டிய தேவை உள்ளது என்றும் அதனால் அந்த இடத்தைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டாம் என்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தனர். அவற்றைப் பரிசீலித்த நீதிவான் அலெக்ஸ்ராஜா, எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிவான், சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸார் அங்கு சென்று பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதென்று கூறினார். தவிர மறுநாள் 19 ஆம் திகதி அங்குள்ள கிணற்றைத் தோண்டுவது என்றும் அறிவித்துள்ளார். வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## இன ஐக்கியம்

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்திற்கு அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தலைமை தாங்கினார். களுத்துறை மாவட்டத்தில் ஐ.தே. முன்னணி சார்பில் போட்டியி டும் டாக்டர் ராஜித சேனாரத்ன, எம்.எஸ்.எம்.அஸ்லம் இப்திகார் ஜெமீல், ஜயந்த அபே குணவர்த்தன ஆகியோரை ஆதரித்தே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டையும் மக்களையும் பொருளாதாரத்தில் கட்டியெழுப்பும் மாபெரும் வேலைத்திட்ட மொன்றை ஓகஸ்ட் 18ஆம் திகதி அமையவுள்ள ஐ.தே.கட்சியின் ஆட்சியில் ஏற்படுத்துவோம். நாட்டைக் கட்டியெழுப்ப 60 மாதங் களே தேவை. அதற்காக என் னுடன் அனைவரும் ஒன்றி ணையவேண்டும்.

அளுத்கமை, பேருவளைப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் சிறுபான்மை இன மக்களுக்குப் பெரும் பீதியும், அச்சமும் இருந்தன. தமக்கு எதிர்காலம் இல்லை என்றும், இந்த நாட்டில் தொடர்ந்து வாழலாமா என்ற சந்தேகமும் இருந்துவந்தது. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் சிறுபான்மை இன மக்கள் மத்தியில் இருந்த அந்தச் சந்தேகம் நீங்கியுள்ளது.

நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும். அதன் மூலமாகவே நாடு முன்னேற்றமடையும். நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள மஹிந்த ராஜபக்ஷ ரெஜிமன்ட் கடைசி நேரத்தில் இனவாதத்தைக் கக்கிவிடக் கூடிய சூழ்நிலை உள்ளதால் இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும். இந்நாட்டில் பிறந்து வளர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய ஆகிய இனங்களுக்கு இலங்கையர் என்ற வகையில் சமவுரிமை உள்ளது. நாட்டில் இனங்களுக்கிடையே ஐக்கியம் மூலமே நாடு முன்னேறும். நல்லாட்சியின் கீழ் இன ஒற்றுமை சக்திபெற்றுள்ளது.

களுத்துறை, அவிசாவளை பிரதேசங்களை உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தி வலயம் ஆரம்பிக்கப்படுவதுடன், பேருவளை, அளுத்கமை பகுதிகளை உள்ளடக்கிய பெந்தொட்ட முதல் மிரிஸ்ஸ வரையிலான பகுதிகளை உல்லாசப் பயண வலயமாக அபிவிருத்தி செய்யப்படும். களுத்துறை மாவட்டத்தில் சிறிய அளவிலான பொருளாதார வலயங்கள் 4 அல்லது 5 அமைக் கப்படும். இதன்மூலம் இப்பகுதி மேலும் வளர்ச்சியடையும். இதற்கான செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சக்திமிக்க அரசொன்றை ஏற்படுத்துவதன்மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரும் அளவில் முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்வார்கள். எனவே, நாட்டினதும், எமது எதிர்காலச் சந்ததியினரதும் நன்மை கருதி சக்திமிக்க ஐ.தே. கட்சி அரசை உருவாக்குங்கள்.

மேல்மாகாணத்தை நாம் நகரமயமாக்கி புரட்சிகரமாக முன்னேற்றுவோம். அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், வீடமைப்புத் திட்டங்களை அமைத்தல் உட்பட அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

-என்றார். (த-சி)

## நஞ்சருந்த

நிலை ஏற்படும் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித் துள்ளார்.

பதுளையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான நிலையினை டிலான் பெரேரா தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்கள் அனைவரும் தற்போது தெளிவாகவுள்ளனர் அவர்களை தொடர்ந்தும் மஹிந்த தரப்பினரால் ஏமாற்ற முடியாது. மக்கள் இம்முறையும் மஹிந்தவை புறக்கணிப்பார்கள்.

எனவே எம்மை நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ளச் சொன்னவர்கள் அனவரும். தேர்தலின் பின்னர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

எம்மிடம் பணம் இல்லை எனவும் அதனால் அவர்களே எமக்கான நஞ்சுப்போத்தல்களை வாங்கி தருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மக்களை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்டவர்கள் எமக்கு நஞ்சு வாங்கி தருவதாகத் தெரிவிக்கின்றனர். மக்களுக்குத் தெரியும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டியவர்கள் யார் என்று. எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நஞ்சுப்போத்தல்களுடன் கலந்துக்கொண்டு ரணில் உட்பட ஐவர் நஞ்சருந்த வேண்டும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## காணாமற்போனோர்

பிரிட்டனின் சட்ட நியமச் சபை விசாரணைகளை ஆரம்பித் துள்ளது.

அமைதி மற்றும் நீதிக்கான அமைப்பின் முறைப் பாட்டின் அடிப்படையில், இவரது பங்கு தொடர்பான இந்த விசாரணை கடந்த ஜூலை 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உயர் மட்ட பரிஸ்டர்களால் மேற்கொள்ளப்படும் இந்த விசாரணை ஐந்து வாரங் களில் நிறைவடையவுள்ளது.

காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கான வெளிநாட்டு நிபுணர் குழுவின் தலை வராக சேர் டெஸ்மன் டி சில்வாவை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கடந்த 2014 ஆம் ஆண்டு நியமித்திருந்தார். இந்த விசாரணைக் குழுவின் பணி, 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், போரின் இறுதிக் கட்டங்களில் அரசபடைகளால் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதா என்று விசாரிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கையின் நீதி மற்றும் அமைதிக்கான அமைப்பு செய்துள்ள முறைப்பாட்டில், சேர் டெஸ்மன் சில்வாவிடம் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், இலங்கை அரசு போரின் இறுதிக்கட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக எவ்வாறு அணுகலாம் என்பது குறித்து எழுத்து மூலமான சட்ட ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தது.

அதனையடுத்து, சேர் டெஸ்மன்ட் சில்வா காணாமற்போனோர் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்கும் சுதந்திர ஆணைக் குழுவுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவராகச் செயற்படுகிறார்.

அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிய சேர் டெஸ்மன்ட் சில்வா, காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவுக்கான நியமனத்தை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்று இந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டங்களின்படி விசாரணை ஆணைக்குழு சுதந்திரமாக செயற்படுகின்ற அதேவேளை, சேர் டெஸ்மன்ட் டி சில்வா சுதந்திரமானவராக இருக்கமுடியாது. அவர் ஏற்கனவே இலங்கை அரசுக்கு தனது நிபுணத்துவ ஆலோசனைகளை எழுத்து மூலம் வழங்கியவர் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கு அமையவே, பிரிட்டனின் சட்ட நிபுணர்களின் ஒழுக்க நெறிகளுக்குப் பொறுப்பான சட்ட நியமச் சபை இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (த-5)

## இனவாதம்

சுமங்கல தேரர் மிகக் கடுமை யாக சாடியுள்ளார்.

இலங்கை சிங்கள-பௌத்த பீடங்களில் மிக முக்கியமான ஒன்றாக மல்வத்த பீடம் கருதப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசியல் பிரசார மேடைகளில் சரியாக எதனையும் சொல்ல முடியாத தரப்பினர், நாடு பிள வடையும் என பரப்புரையில் தீவிர முனைப்பு காட்டி வருவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கீழ் நாடு பிளவடையும் என்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஒவ்வொரு தேர்தல்களின் போதும் சிலதரப்பினர் கையில் எடுத்துக் கொள்கின்றனர். நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து கடந்த மஹிந்த அரசு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தவ றியது.

இன்னும் சில காலங்கள் ஆட்சியில் நீடித்திருந்தால் கண்டியிலும் துறைமுகமொன்றை மஹிந்த அரசு அமைத்திருக்கும். கடந்த அரசால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் மோசடிகள் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்துவதில் தவறில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிள்ளையானுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவதாக உறுதியளித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்த சந்தர்ப்பம் கருணாவுக்கு வழங்கப்படவில்லையா-என்றார். (த)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக ரவி

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவ ராக ரவி ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராகச் செயற்பட்ட சோமரத்ன திஸாநாயக்க பதவி விலகியதை அடுத்து அப்பதவிக்கு ரவி ஜயவர்த்தன நியமிக்கப்பட் டுள்ளார்.
சட்டத்தரணியான ரவி ஜயவர்த்தன, முன்னாள் ஹொரண ஐ.தே.க தொகுதி அமைப்பாளராகச் செயற்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையுடன் இடம்பெற்ற முறுகலை அடுத்து அவர் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது. (த)

## வெடிமருந்துடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக. 6
ஊரெழுவில் வெடிமருந்துப் பைக்கற்றுக்களுடன் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்ட ஆண், பெண் இருவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி ஊரெழு மேற்கில் வீடு ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸார் பல பைக்கெற்றுக்களாகப் பொதி செய்யப்பட்ட நிலையிலிருந்த 11 கிலோ கிராம் 350 கிராம் வெடிமருந்துகளை மீட்டதோடு பெண் ஒருவரையும் நேற்றுமுன்தினம் கைது செய்திருந்தனர்.
ஊரெழு கிழக்கிலும் வீடு ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸார் பைக்கெற்றுக்களாக ஒரு கிலோகிராம் வெடிமருந்துகளைக் கைப்பற்றினர். அதனுடன் தொடர்புடைய இளைஞன் ஒருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்திருந்தனர். அவர்கள் யாழ்.நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (த-4)

## மன்னாரில் கூட்டமைப்பு பரப்புரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கடந்த 2 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.
இந்தக் கூட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராசா கலந்துகொண்டு தமிழ் தேசியக்கூட்ட மைப்பின் சார்பாக வன்னி மாவட் டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து உரை நிகழ்த்தினார்.
இதன்போது வன்னி வேட்பாளர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.விநோ நோகராதலிங்கம்,சிவசக்தி ஆனந்தன் மற்றும் வேட்பாளர்களான இ.சாள்ஸ் நிமலநாதன், சிவப்பிரகாசம் சிவமோகன்,கந்தையா சிவநேசன், மாசிலாமணி றோய் ஜெயக்குமார், சாந்தி சிறீஸ்கந்தராசா. பெருமாள் செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டு அறிமுக உரையாற்றினர்.
இதனைத்தொடர்ந்து வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண மீன் பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து உரை நிகழ்த்தினர். (த-56)

# சமஷ்டி ஒரு கனவு மாளிகை

கூறுகிறார் சம்பிக்க



கொழும்பு, ஓக.6
சமஷ்டி முறைமை உருவாக்கப்பட வேண்டுமாயின், சர்வஜன வாக்கெடுப்பு தேவை. நாடாளுமன் றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை அதிகாரம் அவசியம். எனவே, 10 முதல் 15 ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதைச் செய்யமுடியாது.
சமஷ்டி முறைமை என்பது 1949 ஆம் ஆண்டு முதல் கனவு மாளிகை மட்டுமே.
இவ்வாறு அமைச்சரும், ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கொலன்னாவை பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.
இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,
நாட்டைப் பிரிக்கும் யோசனை கொண்டுவரப்படுவதாக ராஜபக்ஷ தரப்பினர் கூறுகின்றனர். ஆனால், நாட்டைப் பிரிக்கும் யோசனையைக் கொண்டுவந்ததே மஹிந்த ராஜபக்ஷவின் அருகில் இருக்கும் ஜீ.எல்.பீரிஸ் தான். அந்த யோசனை எம்மால் தோற்கடிக்கப்பட்டதால் நாட்டில் அவ்வாறானதொரு அபாயம் இடம்பெறவில்லை
இன்று ஜனாதிபதியும், பிரதமரும் ஐக்கியத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேபோல மஹிந்த ராஜபக்ஷ கூட ஏற்றுக்கொண்டுள்ளார். சமஷ்டி முறைமை வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 1949 முதல் பேசி வருகிறது. அது கனவு மாளிகை மட்டுமே.
சமஷ்டி முறைமையை ஏற் படுத்த வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமாகும். நாட் டின் நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதிகாரம் அவசியம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதைச் செய்ய முடியாது. நாம் இருக்கும்வரை நாட்டைப் பிரிக்க இடமளிக்கமாட் டோம்.
அரசியல் மறுசீரமைப்புதான் எமது அடுத்த நடவடிக்கை. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவ ருக்கு கிடைக்கும் விருப்பு வாக்கு முறைமையை நீக்கி 20 ஆவது திருத் தச் சட்ட மூலத்தைக் கொண்டுவரு வோம். அடுத்த நாடாளுமன்றத்தில் நாட்டின் சுதந் திரத்தை மேலும் பலப்படுத்த நடவடிக்கை எடுப் போம்– என்றார். (த)

## முஸ்லிம் எம்.பி ஒருவரை கம்பஹாவுக்கு பெறுவோம்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள் இந்த முறை வாக்குகளைச் சிதறடிக்காமல் சிந்தித்து வாக்களித்தால் நிச்சயம் இந்த மாவட்டத்துக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.
கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ஷாபி ரஹீமை ஆதரித்து பூகொடவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதால் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த வெற்றியை அடைய நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எமது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன 5000 மேலதிக வாக்குகளால் கம்பஹா மாவட்டத்தை வெற்றிகொண்டார். இந்த முறைத் தேர்தலில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகளால் இந்த மாவட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி வெற்றி கொள்வோம் . 12 ஆசனங்களைப் பெறுவதற்கு நாம் வியூகம் வகுத்துள்ளோம்.
இந்த முறை கம்பஹா முஸ்லிம்கள் ஒன்றுபட்டு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பெற வேண்டும்.80 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் வாக்குகள் இருந்தும் எம்மால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற முடியாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வாக்களிப்பின்போது அந்த எண்ணிக்கையில் வாக்குகள் அளிக்கப்படுவதில்லை. அந்த வாக்குகள் எங்கு செல்கின்றன என் றும் தெரியவில்லை–என்றார். (த-10)

# சந்திரிகாவையும் தூக்கவேண்டும்

சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.6
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்குவது குறித்து, கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு ஆதரவளிக்கும் சந்திரிகா குமாரதுங்க மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நடத்தப்படும் முதலாவது மத்திய குழுக் கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்கவின் உறுப்புரிமை குறித்து விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரான சந்திரிகா குமாரதுங்க தற்போது அந்தக் கட்சியின் போஷகராகப் பதவி வகிக்கிறார்.
இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவினதும், அவருக்குப் பின்னர் கட்சியின் தலைவராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவினதும் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## உயர்தரப் பரீட்சை வன்முறை குறித்து முறையிட அறிவிப்பு

கொழும்பு, 6
தற்போது நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் உயர்தரப் பரீட்சை தொடர்பில் ஏதேனும் வன்முறைகள் இடம்பெற்றால் அது தொடர்பிலான முறைப்பாடுகளை அனைவரும் தெரிவிக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 08 ஆம் திகதி வரை 2180 பரீட்சை நிலையங்களில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளன.
முறைப்பாடுகள் தொடர்பில் அவற்றைத் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் –
பரீட்சைகள் திணைக்களம் – உடன்டி தேவை, 1911 அல்லது பாடசாலைகளின் பரீட்சைகள் ஏற்பாட்டுக் குழு – 0112784208 / 0112784537
பொலிஸ் தலைமையகம் – பொலிஸ் அவசர சேவை இலக்கம், 119 என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# இலங்கைத் தம்பதி தற்கொலை முயற்சி

தமிழகச் சிறப்பு முகாமில்

சென்னை, ஓக. 6
தமிழ்நாடு, திருச்சி முகாமில் தற்கொலைக்கு முயற்சித்துள்ள இலங்கைத் தம்பதிகள் எழுதி வைத்த கடிதம் ஒன்று அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.
திருமணம் முடிந்த தம்பதிகள் ஒன்று சேர்வதற்குத் தமிழக அரசு தடையாக இருந்துள்ளமை பெரும் வருத்தத்தை ஏற்படுத்திய சம்பவமாக மாறியுள்ளது.
திருச்சி மத்திய சிறையில் உள்ள சிறப்பு முகாமில் இலங்கையைச் சேர்ந்த தம்பதியர் தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.
இலங்கையைச் சேர்ந்த தங்கவேல் மகேஸ்வரன் (வயது–35) போலி கடவுச்சீட்டு வைத்திருந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுச் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையில், சென்னையில் வசித்து வந்த அவரது மனைவி பிரசாந்தி (வயது–30) கணவரைக் காண்பதற்காகத் திருச்சி வந்து முகாமில் அவரைச் சந்தித்தார்.
சில நிமிடங்களில் இருவரும் மயங்கிய நிலையில் கீழே விழுந்து கிடந்தனர். உடனடியாக அவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.
சிகிச்சையின்போது தான் அவர்கள் தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தற்கொலைக்கு முயன்றது தெரிய வந்துள்ளது.
தற்போது அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இவர்கள் தூக்க மாத்திரை சாப்பிட்டமைக்கான காரணம் அவர்கள் எழுதிவைத்த கடிதத்தின் மூலம் வெளியாகியுள்ளது.
தமிழக முதல்வர் செல்வி ஜெய லலிதாவுக்கு எழுதியுள்ள அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
கடந்த மூன்று வருடங்களாக திருச்சி சிறப்பு முகாம் என்கிற வதை முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளேன். எனது மனைவி தனிமையில் வாழ முடியாத காரணத்தினால் என்னுடன் சேர்ந்து வாழ அனுமதி வேண்டி கியு பிரிவு, பொதுத்துறை, மறுவாழ்வுத்துறை ஆகியவற்றுக்கு பல மனுக்கள் அனுப்பியும் – நேரில் சென்று கேட்டும் அனைத்தும் நிராகரிக்கப்பட்டது.
இதனால் என் மனைவி வேறு வழியின்றி சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து இரண்டு வருடங்களின் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் என்னை மனைவியுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு உத்தரவிட்டது. ஆனால் பொலிஸார், நீதிமன்று உத்தரவிடவில்லை என தெரிவித்து அதனையும் நிராகரித்தனர்.
இவ்வாறு பிரிந்து வாழும் வேதனையை விட நானும் என் மனைவியும் ஒன்றாக சாவதற்கு முடிவெடுத்தோம்.
எமது சாவிற்கு பின்னராவது சி[illegible] முகாமின் உண்மை நிலை[illegible] உங்களுக்கு தெரியவரும். [illegible] முகாம் என்னும் வதை முக[illegible] வாழும் அகதிகள் குடும்[illegible] ளுடன் சேர்ந்து வாழ்வார்கள் [illegible] நம்பிக்கையோடு போகிறோ[illegible] [illegible]

# இறுதிவரை திக்திக் ஆட்டம் பொம்மர்ஸ் திரில் வெற்றி

கரணவாய், ஓக. 6
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஊரெழு றோயல் அணியை போராடி வீழ்த்தியது பொம்மர்ஸ் அணி.

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் ஆரம்பம் முதலே மாறிமாறி எதிரணியின் கோல் கம்பங்களை ஆக்கிரமித்த போதிலும் கோல் காப்பாளரின் சாதுர்யத்தினால் அவ்வளவு எளிதில் கோலைப் பதிவு செய்ய முடியவில்லை. றோயல் அணி வழங்கிய அரிதான சந்தர்ப்பத்தை கச்சிதமாகப் பயன்படுத்திய பொம்மர்ஸ் அணி ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தது. பழிதீர்க்க வேண்டுமென்று றோயல் படாதபாடுபட்ட போதிலும் எதுவும் பயனளிக்காது போக 1:0 என்ற பொம்மர்ஸின் ஆதிக்கத்துடன் ஆட்டத்தின் முதல் பாதி முடிவடைந்தது.

ஆதிக்கத்தைத் தொடரவேண்டும் என்ற முனைப்பில் பொம்மர்ஸ். பதில் கோலை அடித்து குறைந்த பட்சம் ஆட்டத்தை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற முனைப்பில் றோயல். கிட்டத்தட்ட வாழ்வா? சாவா? நிலைதான். ஆரம்பாகியது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளதும் முயற்சி தோல்வியிலேயே முடிவுகண்டது. மேலதிகமாக எந்தவொரு கோலும் பதியப்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றிபெற்றது பொம்மர்ஸ்.

(ம-108)

## இன்றைய மோதல்கள்



***கழுகுகள் வி.கழகத் தொடர்***

கரணவாய் ஓக. 6
பருத்தித்துறைஉதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் நெற்கொழுகழுகுகள் விளையாட்டக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

***பாரதி வி.கழகத்தொடர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

***யாழ். மாவட்ட தாச்சித்தொடர்***

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதவுள்ளது. (ம-23)

## மலிங்க விரைவில் தகுதி பெறுவார்


இலங்கை அணியின் ரி-20 தலைவரும், நட்சத்திரப் பந்துவீச்சாளரும், அனுபவ வீரருமான மலிங்கா விரைவில் உடற் தகுதி பெறுவார் என்று கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மலிங்கா தொடர்பாக சச்சின் தெரிவித்ததாவது இலங்கை அணியின் வேகப்பந்து வீரர் மலிங்காவுடன் மும்பை அணியில் விளையாடி இருக்கிறேன். அவர் பந்துவீச்சு முறை முற்றிலும் மாறுப்பட்டது. உலகின் எந்த ஒரு வீரரும் அப்படி வீசுவது இல்லை. மலிங்க உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீரர் ஆவார். அவரது தலைமுடியை பார்க்க வேண்டாம். அவரது பந்து வீச்சு தன்மை யை பாருங்கள். விரைவில் அவர் தனது பழைய திறனுக்கு திரும்புவார் என்றார்.

(ம)



## கோக்லியின் வியூகம் வெற்றி தரும்



இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரினை எதிர்கொள்வதற்கு ஐந்து பந்து வீச்சாளர்களுடன் களமிறங்குவது என்ற கோக்லியின் முடிவால் அணியில் எந்த தாக்கமும் ஏற்படாது என்று இந்திய அணியின் ஆரம்ப வீரர் முரளி விஜய் தெரிவித்துள்ளார்.

ஐந்து பந்துவீச்சாளர்கள் என்ற முறையை பங்களாதேசிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் பயன்படுத்தினார் கோக்லி. அதே முறையையே இலங்கைக்கு எதிராகவும் பயன்படுத்தவுள்ளார். இதனால் துடுப்பாட்டக்காரர்களான தவான், முரளி விஜய், அணித்தலைவர் கோக்லி, ரகானே, சகா ஆகியோர் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வியூகம் தொடர்பாக விஜய் தெரிவித்ததாவது நாங்கள் அனைத்திற்கும் தயாராக இருக்கிறோம். இந்த முறை எங்களுக்கு நெருக்கடியை கொடுக்காது. துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட வேண்டியது எங்களது வேலை. எங்களுக்கு அருமையான சவால் காத்திருக்கிறது. தலைமை மீதும் வீரர்கள் ஒருவர் மற்றொருவர் மீதும் நம்பிக்கை வைத்துள்ளோம். இந்த நம்பிக்கை தொடரை வெற்றியுடன் முடிக்க உதவும் என்றார்.

(ம)

## றோயலிடம் வீழ்ந்தது கொலின்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.


இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ம-23)

## விரைவில் சிக்குவார் மோடி

ஐ.பி.எல். தொடரின் முன்னாள் தலைவராக இருந்த லலித் மோடி நூற்றுக்கணக்கான கோடிகள் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டது. இதனையடுத்து மோடி இங்கிலாந்துக்கு தப்பிச் சென்று தலைமறைவானார். விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் அவரின் குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. இதனால் லலித் மோடியை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து அவர் மீது பிடியணை உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொலிசாரின் உதவியுடன் லலித் மோடியை பிடிக்க இந்திய பொலிஸ் அதிகாரிகள் தற்பொழுது பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். சூதாட்டத்தில் ஈடுபட்டதாக வீரர்கள் மீது அவதூறு தெரிவித்ததுக்காகவும் அவர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)



## பாகிஸ்தான் பிரிமியர் லீக்கில் சங்கா


ஐ.பி.எல். தொடர் போன்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் ரி-20 தொடரை அடுத்த வருடம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் 2 வருடங்களுக்கு முன்பே தொடங்கப்பட்ட நிலையில், தற் பொழுது அந்த முயற்சி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

5 அணிகள் மோதும் இந்த தொட ரில் விளையாட தமிம் இக்பால், குவிண்டன் டி கொக், பொலார்ட், மசகட்சா போன்ற வீரர்கள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் முன்னணி சர்வதேச வீரர்களான கெய்ல், சங்கக்காரா, கலிஸ், ஷகிப் அல் ஹசன் ஆகியோருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

(ம)



# இங்கிலாந்து பக்கா பிளான்



இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும் தலைவரும் அனுபவ வீரருமான மகேல ஜெயவர்தனாவை குறுகியகால துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்க இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவெடுத்துள்ளது. இருப்பினும் இந்த முடிவு இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வில்லை.
இங்கிலாந்து அணி பொதுவாக வேகம் மற்றும் திரும்பல் தன்மைகளை உடைய ஆடுகளத்தில் விளையாடி பழக்கப்பட்டது. அந்த அணி எப்பொழுதும் சிறந்த சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக செயல் பட்டது கிடையாது. ஆனால் இங்கிலாந்து இனிவரும் காலங்களில் ஆசியாவில் அதிகப்படியான ஆட்டங்களை எதிர்கொள்ளவுள்ளது. ஆசிய ஆடுகளங்களும் ஆசிய அணிகளும் சுழல் பந்து வீச்சை பலமாகக்கொண்டவை. இதனால் சுழல்பந்து வீச்சுக்கு ஏற்ப இங்கிலாந்தை தயார்ப்படுத்தும் விதமாக ஆசிய ஆடுகளங்களின் தன்மைகளைக் கரைத்துக்குடித்த மகேலவை வைத்து காய் நகர்த்த அந்த நாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவுசெய்துள்ளது.
மேலும், தற்போது இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளராக இருக்கும் பெய்லிஸ் மற்றும் துணை பயிற்சியாளர் பால் பார்பிரேஸ் ஆகியோர் இலங்கை அணியின் பயிற்சியாளராக செயற்பட்டவர்கள். ஆகையால், இவர்களுடன் மகேலவும் இணைந்தால் பயிற்சியாளர்களுக்கிடையில் தெளிவுத் தன்மை ஏற்படுவதுடன் இப்பயிற்சி இங்கிலாந்து அணிக்கு மிகப் பெரும் பலமாக அமையும். ஒட்டு மொத்தத்தில் அடுத்த வருடம் நடை பெறவுள்ள ரி-20 தொடர், வரவிருக்கும் மினி உலகக்கிண்ணத் தொடர், இங்கிலாந்து - பாகிஸ்தான் தொடர், இங்கிலாந்து - இந்தியா தொடர் ஆகியவற்றையெல்லாம் இலக்கு வைத்தே இங்கிலாந்து கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை இவ் வாறு பக்கா பிளான் வகுத்துள்ளது. (ம)

## ஹெற்றிக் கிண்ணம் வென்றார் இஸ்னர்

அட்லாண்டா ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தொடர்ந்து 3ஆவது முறையாக அமெரிக்காவின் ஜோன் இஸ்னர் கிண்ணம் வென்று சாதித்துள்ளார்.
அட்லாண்டா ரென்னிஸ் தரப்படுத்தலில் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ஜோன் இஸ்னர் தரப்படுத்தலில் 5ஆவது இடத்தில் இருந்த சைப்ரசின் மார்கசை 6-3, 6-3 என்ற நேர் செற்களில் தோற்கடித்தார். (ம)

## விடைபெறும் எண்ணமில்லை -கிளார்க்

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் பேச்சுக்கே இடமில்லை. தொடர்ந்து சில வருடங்கள் கிரிக்கெட்டுடன் இணைந்திருக்க விரும்புகிறேன். என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.
கிளார்க் சமீப காலமாக தொடர்ந்து சொதப்பி வந்த நிலையில், அவர் கிரிக்கெட்டில் இருந்து விலகுவது நல்லது என்றும், ஆஷஸ் தொடருடன் கிளார்க் ஓய்வுபெறவுள்ளார் என்றும் பரவலாக கருத்துக்கள் வெளிவந்தவாறு இருந்தன. குறித்த கருத்துக்கள் தொடர்பாக கிளார்க் தெரிவித்ததாவது நான்கிரிக்கெட்டில் இருந்து விலகுவேன் என்ற பேச்சுக்கே இடமில்லை. சிலர் கூறுவது போல் கிரிக்கெட் மீது எனக்கு இருக்கும் ஆர்வம் குறைந்துவிடவில்லை. தலைவராக அல்லாவிடினும் ஒரு வீரராக தொடர்ந்து அணியில் நிலைத்து நிற்பேன். இன்றும் (நேற்று) முதலாவதாக பயிற் சிக்கு வந்ததும் இறுதியாக வெளியேறியதும் நான்தான் என்றார். இதன் மூலம் இந்த ஆசஸ் தொடரின் முடிவில் கிளார்க் ஓய்வு பெறுவார் என்ற வதந்தி முடிவுக்கு வந்துள்ளது. (ம)

## போராடி வென்றது தென்றல்

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில்நவாலிதென்றல் அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி மோதிக்கொண்டது. இதில் நவாலி தென்றல் அணி 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
(ம-23)

## கட்டாயத்தில் களமிறங்குகிறது ஆஸி.

## ஆஷஸின் நான்காவது ஆட்டம் இன்று





இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று இங்கிலாந் தின் நொட்டிங்காமில் ஆரம்பமாகவுள்ளது.
ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் மூன்று ஆட்டங்களில் 2:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. இன்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றாலோ அல்லது சமநிலையில் முடித்தாலோ தொடர் இங்கிலாந்திடம் சென்றுவிடும். ஆஸ்திரேலியா இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்ற தொடர்ந்து நம்பிக்கையுடன் போரிடலாம். இதனால் இன்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. (ம)

# மாறுமா வரலாறு?



இலங்கை - இந்தியா டெஸ்ட் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கையின் அண்மைக்காலப் பெறுபேறுகளைப் பார்த்து இலங்கை அணிமீது அதிருப்தியில் உள்ளனர் ரசிகர்கள். இந்நிலையில் இலங்கை அணி மீது நம்பிக்கை தரும்விதமாக ஒரு புள்ளி விவரம் வெளிவந்து விட்டது. அதாவது இந்திய அணி இலங்கையில் கிண்ணத்தைக் கைப்பற்றி 22 ஆண்டுகளாகி விட்டதாம்.
அந்நிய மண்ணில் தங்களுடைய சுழற்பந்து மற்றும் வேகப்பந்து வீச்சால் மிரட்டிய இந்திய அணி இலங்கையில் மட்டும் ஜொலித்ததில்லை. இதுவரை 6 முறை இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடியுள்ளது. இதில் 1993 ஆம் ஆண்டு மட்டுமே தொடரை கைப்பற்றியது. இதனால் இரு தசாப்த காலமாக கட்டிக்காத்து வந்த வரலாற்றை இந்த முறையும் இலங்கை வீரர்கள் தொடர்ந்து தக்கவைப்பார்கள் என்று இலங்கை ரசிகர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர். (ம)



## சவாலைச் சந்திக்கிறது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷில் சுற்றுப் பணயம் மேற் கொண்டு 2 ஆட்டங்கள்கொண்ட டெஸ்ட்தொடரில் விளையாட சம்மதித்துள்ளது.
ஆஸ்திரேலியா அணி பங்களாதேஸிற்கு எதிரான தொடர்களைப் புறக்கணித்து வந்தது. ஆனால் நடப்பு ஆண்டில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் இங்கி லாந்தை வீழ்த்தி காலிறுதிவரை முன்னேறிய காரணத்தினாலும் பங்களாதேஸிற்கு சுற்றுப்பயணம் செய்ய பாகிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிராக தொடரைக் கைப்பற்றிய காரணத்தினாலும் தற்பொழுது கிரிக்கெட் உலகத்தின் பார்வை பங்களாதே ஸிற்கு எதிராக திரும்பியுள்ளது. அதனையடுத்து தற்பொழுது சவால் மிகுந்த அணிகளில் ஒன்றாக மாறியிருக்கும் பங்களாதேஸை அவர்களது ஆடுகளத்தில் வைத்து எதிர் கொள்வதற்காகவே ஆஸ்திரேலியா இந்தத்தொடருக்கு சம்மதித் துள்ளதாகத் தெரிகிறது. (ம)



இந்திய வீரர்கள் தமது விடுமுறைக் காலங்களை பல்வேறு விதமாக செலவழித்து வருகின்றனர். அந்த வகையில் இந்திய இராணுவத்துடன் சில நாள்களைப் பகிர்ந்துள்ளார் ரெய்னா.





# ஒலிம்பிக் தொடருக்கான தீபம் எதிர்வரும் ஏப்ரலில் எரியும்

பிரேஸில் நாட்டில் உள்ள ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான ஒலிம்பிக் தீபம் அடுத்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பழமையான ஒலிம்பிக் நகரமான கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் ஏற்றப்படுகிறது. ஒலிம்பியாவில் தீபம் ஏற்றப்பட்ட பின்னர் ஒலிம்பிக் தொடரில் பங்கு பெறும் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த தீபம் 12 நாட்களின் பின்னர் மே மாதம் 3 ஆம் திகதி தொடர் நடைபெறும் பிரேஸில் நாட்டை வந்தடையும். ஒவ்வொரு முறையும் ஒலிம்பிக் தொடர் நடக்கும்போது, ஒலிம்பியா நகரில் உள்ள பழமையான மைதானத்தில் ஒலிம்பிக்குக்கே உரிய பழமையான முறைகளில் தீபம் ஏற்றப்பட்டு உலகம் முழுவதும் சுற்றி பின்னர் தொடரை நடத்தும் நாட்டுக்கு கொண்டு செல்லப்படுவது மரபு. (ம)

## இதுதான் ரொனால்டோவின் மகிமை

பொதுவாக கால்பந்தில் மிகமிக நுணுக்கங்களைக் கடைப்பிடித்து கலக்கும் ரொனால்டோ தனது ரசிகர்களுடன் செல்லச் சண்டையிடுவதிலும், மக்களோடு மக்களாக பழகுவதிலும் அலாதி பிரியம் கொண்டவர். தற்பொழுது ரசிகர்களுடன் ரொனால்டோ செய்த குறும்பு ஒன்று இணையத்தளத்தில் வீடியோவாக வெளியிடப்பட்டு மிக விரைவாக பரவி வருகிறது.

ஸ்பெயின் மட்ரிட் நகரில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வீதிக்கு மாறுவேடமிட்டுச் சென்று கால்ப்ந்து விளையாடுகிறார் ரொனால்டோ. அங்கு நடந்து செல்லும் அனைவரையும் தன்னுடன் சேர்ந்து விளையாடுமாறு வம்பிழுக்கிறார். அவர் மாறுவேடத்தில் இருப்பதால் மக்களால் அவர் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. சுமார் ஒரு மணிநேரம் கழித்து அந்த தெருவில் நடந்து சென்ற ஒரு சிறுவனிடம் வம்பிழுக்கிறார். சிறுவனும் ரொனால்டோவின் சவாலை ஏற்று கால்பந்து விளையாட களம் இறங்குகிறான். ரொனால்டோவின் வேகத்துக்கும் நுணுக்கத்துக்கும் ரொனால்டோவால் கிட்டவும் நிற்க முடியவில்லை. சிறுவனின் துணிச்சலை தட்டிக்கொடுத்தபடி தனது வேடத்தை கலைக்கிறார் ரொனால்டோ. உடனே அங்கிருந்த மக்கள் ரொனால்டோ என்று கூக்குரல் எழுப்பியவாறு வந்து சூழ்ந்து கொள்ளுகின்றனர். இவ்வாறான ஒரு வீடியோ தற்பொழுது இணையத்தில் பரவலாக காணப்பட்டு வருகிறது. (ம)



## என்ன இந்தப்பக்கம்



9 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சிட்டி ரென்னிஸ் தொடரில் களமிறங்கியிருக்கிறார் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே.

சர்வதேச ரென்னிஸ் தொடரான அமெரிக்க ரென்னிஸ் தொடருக்கான பயிற்சியை வழங்கும் விதமாக சிட்டி ரென்னிஸ் தொடர் அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்று வருவது வழமை. ரென்னிஸ் ஜாம்பவான்கள் தமக்கு பயிற்சியாட்டங்கள் தேவையில்லை என்று இந்தத்தொடரைப் புறக்கணித்து நேரடியாக அமெரிக்க தொடரிலேயே பங்கெடுப்பார்கள். அவர்களில் முர்ரேயும் ஒருவர். இதில் கடைசியாக 2006 இல் விளையாடிய முர்ரே, அதன்பிறகு பங்கேற்க வில்லை. சமீப காலமாக பெரிய அளவில் கிண்ணம் வெல்லாத அவர், அமெரிக்க தொடரில் சிறப்பாக ஆடுவதற்காக சிட்டி தொட ரில் விளையாட முடிவு செய்துள்ளார். (ம)






## நனவாகிய ஷகிராவின் கனவு

பார்சிலோனாவில் வீடு வாங்க வேண்டும் என்ற பொப் பாடகி ஷகிராவின் நீண்ட கால கனவு தற்போதுதான் நனவாகியுள்ளது.

பொப் பாடகி ஷகிரா 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்து தொடருக்காக பாடிய வாகா, வாகா... பாடல் மூலம் உலகம் முழுவதும் பிரபலமானவர். இவர் ஸ்பெயின் கால்பந்து வீரரான ஜெரார்டு பிக்கேவுடன் சேர்ந்து வாழ்கிறார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். கால்பந்து காதலியான ஷகிராவுக்கு கால்பந்துக்கு பிரபலம் பெற்ற பார்சிலோனாவில் எப்படியும் ஒரு வீடு வாங்க வேண்டும் என்பது நீண்ட கால கனவாக இருந்தது. கடந்த ஆண்டு ஒரு புதுபிக்கப்பட்ட வீட்டை வாங்க முடிவு செய்திருந்தார். ஆனால் அந்த வீட்டின் விலை இலங்கை மதிப்பில் 180 கோடி என்றதும் அப்படியே பின் வாங்கிவிட்டார். இந்நிலையில் கடந்த மே மாதம் வரை அந்த வீடு விற்பனை ஆகவில்லை என்பதை அறிந்தவுடன் மீண்டும் அந்த வீட்டை வாங்க முயற்சி செய்துள்ளார். இந்த முறை இலங்கை மதிப்பில் 90 கோடிக்கு ஒப்பந்தம் ஏற்பட அந்த வீட்டை வாங்கி விட்டாராம். ஷகிரா வீடு வாங்கிய பகுதியில் தான் பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மரும் இருக்கிறாராம். (ம)

## அக்ரம் மீது துப்பாக்கிச்சூடு

பாகிஸ்தானின் காராச்சியில் வைத்து முன்னாள் பாகிஸ்தான் தலைவர் வாசிம் அக்ரம் மீது நேற்றுத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கராச்சியில் மைதானத்தில் இருந்து தன் வீட்டுக்கு வாசிம் அக்ரம் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் அவரை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இந்தக் கொலை முயற்சியில் இருந்து அவர் அதிர்ஷ்டவசமாக தப்பிவிட்டார். ஆனால் கொலை முயற்சிக்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் சென்ற ஜெயசூரியா பாகிஸ்தான் தற்பொழுது பாதுகாப்பாக உள்ளது என்றும் வருங்காலங்களில் அங்கு சர்வதேச ஆட்டங்கள் நடத்தலாம் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

